# இலக்கிய வரலாறு

சோம. இளவரசு

மணிவாசகர் பதிப்பகம்

# இலக்கிய வரலாறு

பேராசிரியர்
புலவர் சோம. இளவரசு, எம்.ஏ.,

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

மறுபதிப்பு : ஜூலை, 1998
திருவள்ளுவர் ஆண்டு : 2029
**விலை ரூ. 22-00**

## பதிப்பாசிரியர்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர், பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர் இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு பிள்ளை இலக்கியக்குழு. 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்** - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625 001.
15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641 001.
28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620 002.

தொலைபேசி :

**சிதம்பரம்** : 23069 **சென்னை** : 561039
**மதுரை** : 622853 **கோயமுத்தூர்** : 397155
**திருச்சி** : 706450

# தமிழில் இலக்கிய வரலாறுகள்

## பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன்

தமிழமொழி நீண்டநெடிய வரலாறு உடையது. தொலபழங்காலந்தொட்டு இலக்கிய வளம் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. காலந்தோறும் பலவகை இலக்கியங்கள் செந்தமிழைச் செழுமைப் படுத்தியுள்ளன. பெருமைப் படைத்தக்க வகையில மொழியும இலக்கியமும் வளர்நது வரலாறு படைத துளளன. இவறறின் பனமுக நலங்களை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு இலக்கிய வரலாறுகள் எழுதப் பெற்றுள்ளன.

பேராசிரியர் கா.சு. பிள்ளை நாற்பதுகளில நல்ல இலக்கிய வரலாற்றை இரு பகுதிகளாக எழுதி வெளியிட்டாாகள். அதனைத் தொடாந்து தஞசை சீனிவாசபிள்ளை ஆய்வுரையும் மறுப்புரையும அமைந்த இலக்கிய வரலாறு எழுதினாாகள்

இலஙகையைச சோந்த செலவநாயகம ஆட்சிக் காலங்கள் தலைபபில் அரிய இலககிய வரலாறு படைத்தாாகள். திருவாரூா சோமசுந்தர தேசிகர் நூறறாணடுத் தலைபபில புதுவகையில் இலக்கியவரலாறு எழுதத் தொடஙகினாாகள. பேரறிஞா மு. அருணாசலம் அவர்கள நூறறாண்டு வாரியாக 9 முதல் 15 வரையில ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் 500 பக்க அமைப்பில் 10 தொகுதிகளாகப் பெரிய அளவில வெளியிட்டுப பேரும் புகழும் பெறறாாகள். இரண்டாயிரம பக்க அளவில இரண்டு பெருந தொகுதிகளாகப் பேராசிரியா மது.ச. விமலானநதம் அவாகள இலககிய வரலாறறுக களஞசியத்தை உருவாக்கி ஈடிலலாப புகழ பெறறாாகள.

எம்.எஸ. பூரணலிங்கம்பிள்ளை,

எஸ் வையாபுரிப்பிள்ளை,

தெ பொ மீனாட்சிசுநதரம்

ஜேசுதாசன்

முதலியோா தமிழிலககிய வரலாற்றை ஆங்கிலத்தில சிறப்பாக எழுதியுள் ளாாகள். புலவர்களும் முதுகலை மாணவாகளும் மட்டுமே பயினறு வநத இலககிய வரலாற்றை இளங்கலைப பாடத்திட்டத்தில இணைத்தபின் இருபதுககு மேறபட்ட இலக்கிய வரலாறுகள் பல்கின. கலலூரிகளில இல க்கிய வரலாறு கருததுடன் கறபிக்கபபட்டது.

பேராசிரியா எம.ஆா அடைக்கலசாமி முதலில நலல நூலைத தந்தாா. அவரைத தொடாந்து தமிழ்ப்பலகலைககழகத் துணைவேநதா முனைவா சி.பாலசுப்பிரமணியன் தம் இலக்கிய வரலாறு வெளியிட்டுச் செலவமும்

செல்வாக்கும் பெற்றார். ஒப்பியல் ஆய்வறிஞர் தமிழண்ணல் அவர்களால் புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்ந்தது. டாக்டர் பூவண்ணனின் இனிய இலக்கிய வரலாறு எழுந்தது. சாகித்திய அகாதமி வெளியிட்ட பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் இலக்கிய வரலாறு பெருஞ் செல்வாக்கைப் பெற்று வருகிறது. பாடநூல்களாக அமைந்து படிப்போர் சிந்தனையைக் கவர்ந்து தமிழிலக்கியத்தின் ஆழ அகலங்களை — திட்ப நுட்பச் சிறப்புகளை இலக்கிய வரலாறுகள் எடுத்தியம்பி, தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதை ஊர் அறிய, உலகறிய உணர்த்துகின்றன.

கல்லூரி அளவிலிருந்த இலக்கிய வரலாற்றுக் கல்வி, பள்ளி அளவிலும் படர்நதது. பள்ளிப் பாடத்திட்டத்திற்கு ஏற்ப மிகச் சிறந்ததொரு இலக்கிய வரலாறறைப் பேராசிரியர் சோம. இளவரசு அவர்கள உருவாக்கினாாகள். இது பத்தோடு பதினொான்று அல்ல. தெளிவும் சுருக்கமும் இதன் தனிச் சிறப்பு. இலக்கிய வரலாற்றை எளிய முறையில் கற்க விரும்புவார்க்கு இது ஓா கைவிளககு. தமிழிலக்கியம் பற்றித் தெளிவு பெறவிரும்புபவர்க்கு இது உற்ற துணைவன்.

அரசுத் தேர்வாணையத் தேர்வுகளுக்குச் சிறந்த வழிகாட்டி. ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். தேர்வுகளுக்கு மாதிரிநூல். சோம. இளவரசு ஒருவரே தமிழில் இலக்கிய வரலாறும், இலக்கண வரலாறும் எழுதிய பெரும் புலவர். யாப்பியல வல்லுநர் — செந்தமிழ்ச் செல்வர் — அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துறைக்கு வலிமை சேர்த்த பேராசிரியர். அவர்நடை இநநூலுக்குத் தனி வலிமை சோககிறது.

மணிவாசகா பதிப்பகம் மொழி, இலக்கியம், இலக்கணம், பண்பாடு, கலை, அனைததிற்கும் வரலாற்று நூல் வெளியிட்ட தனிச்சிறபபினை உடையது. ஒவ்வொரு துறைநூலும் பரிசும், பாராட்டும் பெற்று அறிஞர்களால் மதிக்கப் பெறுகிறது. பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் மக்கள் பதிப்பைச் செம்பதிப்பாக வெளியிட்டுத தமிழ் கூறும் நல்லுலகத்தின் நலலாதரவைப் பெற்று வருகிறது. துறைதோறும் தமிழுக்கு வளம் சேர்க்கும் பதிப்பகம் தொலை நோக்குடன அரிய பெரிய திட்டங்களுடன் செந்தமிழ்ப பணிசெய்ய உறுதிகொள்கிறது. வரலாறுகளைக் கற்போம். வாழ்வில தெளிவு பெறுவோம்.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| 1. சங்கம் | 1 |
| 2. தொல்காப்பியம் | 5 |
| 3. எட்டுத் தொகை | 7 |
| 4. பத்துப் பாட்டு | 24 |
| 5. சங்க இலக்கியச் சிறபபுக்கள் | 33 |
| 6. பதினெண் கீழ்க்கணக்கு | 38 |
| 7. இரட்டைக காப்பியங்கள் | 45 |
| 8. பக்தி இலக்கியம் | 49 |
| 9. காபபியங்களை | 57 |
| 10. சிற்றிலக்கியஙகள் | 66 |
| குறவஞ்சி, பரணி, பள்ளு, பிளளைத தமிழ் | |
| 11. உரையாசிரியாகள் | 75 |
| 12. பௌத்தாகளின் தமிழ்த் தொண்டு | 81 |
| 13. சமணாகளின் தமிழ்த தொண்டு | 83 |
| 14. முகம்மதியாகளின தமிழ்த தொண்டு | 87 |
| 15. கிறிஸ்தவாகளின தமிழ்த் தொண்டு | 91 |
| 16. உரைநடை | 97 |
| 17. கவிதை | 103 |
| 18. இசைத் தமிழ | 108 |
| 19. நாடகத் தமிழ் | 111 |
| 20. நாவல் | 116 |
| 21 சிறுகதை | 121 |
| 22. புலவாகள் பறறிய குறிபபுகள் | 124 |
| 23. பலகலைக்கழக வினாககள் | 132 |
| 24. புத்தம புதிய வினாக்கள். | 135 |

# 1. சங்கம்

தமிழ், தொன்மை சானற மொழி; உலகததுப பழம் பெருமொழிகளில ஒன்று. இம் மொழியினை மக்களும் அறிஞர்களும் வேந்தாகளும் வளாத்தனா குறிபபாகப பாண்டியாகள் சங்கம் வைததுத தமிழைக காததனர் இக் காலமே சங்க காலம்; இககாலத்துத் தோன்றியதே சஙக இலக்கியம். இச் சங்கம, முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று வகைபபடடது. இச சங்கங்கள் பறறிய செய்திகளைக் களவியல என்னும நூலின உரை விரிவாகக கூறுகினறது.

**முதற் சங்கம்:** பாணடியாகள், குமரிக்குத தெற்கே தென்மதுரையில முதற சஙகததை நிறுவினா இச் சஙகம் 4440 ஆணடுகள் நிலவியது. சிவபெருமான, முருகப பெருமான, அகத்தியா முதலான 4449 புலவாகள் இச் சங்கத தில இருநதனா. பரிபாடல, முதுநாரை, முதுகுருகு முதலான நூலகள் அவா களால பாடபபட்டன. அகததியம, இச சங்கத்தின இலக்கண நூலாக இருந்தது இச் சங்கததினைக காய்சின வழுதி முதலாகக கடுங்கோன ஈறாக 89 பாணடியாகள் ஆதரிததனா.

**இடைச் சங்கம்:** தென மதுரை கடல்கோளால அழிநதது. எனவே, குமரியாறு, பஃறுளியாறு என்னும் இரணடுக்கும் இடையே இருந்த கபாடபுரத்தில இடைச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் 3700 ஆணடுகள் நிலவியது அகத்தியர், தொலகாபபியா முதலான 3700 புலவாகள் இசசங்கத்தில இருந்தனா கலி, குருகு, வெண்டாளி முதலான நூலகள் அவாகளால இயறறபபட்டன. அகததியமும் தொல்காப்பியமும இலக்கண நூலகளாக அமைநதன. இச சஙகததினை வெண்தேரச் செழியன் முதலாக முடததிருமாறன் ஈறாக 59 பாணடியாகள ஆதரித்தனா.

**கடைச் சங்கம்:** கபாடபுரம கடலால கொள்ளபபட்ட பின, இபபோதுளள மதுரையில கடைச் சஙகம் நிறுவபபடடது இச் சங்கம் 1850 ஆண்டுகள் நிலவியது சிறுமேதாவியாா, சேந்தம் பூதனாா முதலான 449 புலவர்கள் இச சஙகததில் இருநதனா நெடுநதொகை, குறுநதொகை, நறறிணை, பரிபாடல், பததுபபாடடு முதலான நூலகள் அவாகளால இயற்றபபட்டன. அகததியமும் தொலகாபபியமும இலக்கண நூலகளாக அமைநதன. இச் சஙகததினை முடததிருமாறன முதலாக உககிரப் பெருவழுதி ஈறாக 49 பாண்டியாகள ஆதரித்தனா.

களவியல் உரை கூறும் மேற்கணட செயதிகளை அடியாாக்கு நல்லாா், பேராசிரியா, நசசினாாககினியா போனற உரையாசிரியாகளும் குறிப்பிடுகின்றனா. களவியல் உரையின் காலம, கி. பி. 8ஆம் நூற்றாண்டு

என்பர். இதற்கு முன்னால், கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசா

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி

நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன் காண்"

எனச சங்கம் பற்றிய செயதியினைக குறிப்பாகச் சுட்டியுளளார். இவரே சங்கம பற்றிய குறிப்பினை முதன் முதலில் கூறியவர் ஆவார்.

இச் சஙகங்களைப பறறி அறிஞாகளிடையே கருதது வேறுபாடுகள் நிலவுகின்றன.

**சங்கம் உண்டா?:** பி. டி சீனிவாச ஐயங்கா, கே. என் சிவராசப் பிள்ளை முதலியோா சஙகமே தமிழகத்தில இருநததிலலை என்பர். அதற்கு அவாகள், காரணஙகள் பல காட்டுவா.

1. சஙகம் என்பது தமிழ்ச் சொல் அன்று; வடமொழிச சொல்; இச் சொல், சங்க இலக்கியத்தில இல்லை.

2. சங்க இலக்கியங்களில் சங்கம் இருந்ததற்குச் சான்று இலலை.

3. சமண, பௌத்தச் சங்கங்களைக் கணடவாகள் தமிழ்ச் சங்கம் பற்றிக் கற்பனை செயதுவிட்டனா.

4. சஙகங்கள பறறி இறையனார் களவியல உரை கூறும் கருத்துக்கள், அறிவுககுப பொருநதுவனாக இல்லை.

இக் காரணஙகளை ஆராய்ச்சியாளாகள் சிலா மறுத்துளளனா.

**சங்கம் ஒன்றே:** மூனறு சஙகங்கள் இருந்தன என்று கூறுதல பொருந் தாது; ஏதேனும் ஒரு சங்கம் இருநதிருகக வேணடும் என்பர். இக் கொள்கை யினை யுடையோா V.R. இராமசசநதிர தீட்சிதர், K. A. நீலகண்ட சாஸ்திரி, எஸ். வையாபுரிப் பிளளை போன்றோா. இவாகளும் காரணங்கள் பல காடடுவா.

1. தலைசசஙக, இடைச் சங்க நூலகள எதுவும் கிடைக்கவிலலை.

2. களவியல உரை கூறும் செய்திகளில முரண்பாடு உளளது.

3. கி. மு. 3ஆம் நூறறாண்டளவில தமிழில் வரிவடிவம ஏற்படவிலலை. ஆதலால, அதற்குமுன சங்கங்கள இருநதன என்பது பொருத்தமில் கூற்று.

இக் காரணங்களையும் ஆராய்ச்சியாளர்களில் சிலா மறுததுளளனா.

**சங்கங்கள் மூன்றே:** பழைய உரையாசிரியாகள கூறுவன உண்மை; ஆதலால மூன்று சங்கங்கள இருந்திருகக வேண்டும என்பா டாகடா உ. வே. சாமிநாத ஐயா, கா. சுபபிரமணிய பிள்ளை போன்றோா இக் கருத்துக் கொண்டவாகளே. இவாகள கூறும் காரணங்கள:

1. தென்மதுரையும் கபாடபுரமும் கடல கோள்களால் அழிந்திருக்க வேண்டும் என்பது, ஹெக்கல, ஸ்காட், எலியட் போன்ற மேலை நாட்டு ஆராய்ச்சியாளாகளின் ஆய்வுகளால தெரிகின்றது.

2. இவை கடல் கோள்களால அழிந்த செய்தி, கலித்தொகையிலும்[1], சிலப்பதிகாரத்திலும்[2] குறிககப்படுகின்றன.

3. இடைச்சங்கம் இருந்த கபாடபுரததைப பற்றி வான்மீகியும் வியாசரும் சாணககியரும் குறிப்பிட்டுள்ளனர்.

**சங்கம் இருந்தது:** தமிழகததில சங்கம் நிலவியதற்குச சானறுகள பல உள்ளன. அச் சங்கம் ஒன்றா? இரண்டா? மூன்றா? என்று நிறுவுவதற்குத் தான் சானறுகள் கிடைக்கவிலலை

1. தொலகாபபியம் நிலநதரு திருவின் பாண்டியன் அவையில அரங்கேற்றபபட்டதாகப பனம்பாரனாா குறிப்பிடுகின்றார். இங்குக் கூறும் 'அவை', புலவாகள் கூடிய கழகமாக இருக்கலாம்

2. "இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" — புறம், 58.

3. "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை" — புறம், 72.

4. "தமிழ்நிலை பெற்ற தாங்கரும் மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை" —சிறு பாணாற்றுப்படை

5. "தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்" — மதுரைக் காஞ்சி

6. "நிலனாவில் திரிதரூ உம் நீள்மாடக் கூடலார்
புலனாவில் பிறந்த சொல்
புதிதுண்ணும் பொழுதன்றோ" — கலி. 35.

---

1. 'மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்'

2. 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'

7. "மதிமொழி யிடன்மாலை வனைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர" —கலி. 68.

8. "தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை" — சிலம்பு

9. தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்" — மணிமேகலை.

மேற்காட்டிய இலக்கியச் சான்றுகளால், மதுரையில் தமிழ் வளர்க்கும் நிலையம் இருந்தது என்பது புலனாம். இந் நிலையத்தை உணர்த்த சங்கம் என்ற பொருளில் புணர் முதலான சொற்களைப் பயன்படுத்தினர்.

10. இடைக் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் சங்கம் என்ற சொல்லால் தமிழ்ப் புலவர்கள் கூடிய அவையைக் குறிப்பிட்டுள்ளனர்.

(அ) "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன் காண்" — அப்பர்

(ஆ) "சங்கமலி செந்தமிழ்" — சம்பந்தர்

(இ) "சங்கமலி தமிழ்"
"சங்க முத் தமிழ்" — திருமங்கையாழ்வார்

(ஈ)"சங்கத் தமிழ் மாலை" —ஆண்டாள்

(உ) "சங்கத் தமிழ் மூன்றும் தா" — ஔவையார்

(ஊ) "தென்தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச் சங்கம்" — கம்பர்

11. இச்சான்றுகளே அன்றிச் சின்னமனூர்ச் செப்பேடுகள், "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று குறிப்பிடுகின்றன.

12. வான்மீகி இராமாயணத்தில் கபாடபுரம் பற்றிய குறிப்பு உள்ளது.

13. தாலமி, பிளைநி போன்ற மேலநாட்டு அறிஞர்களும், பெரிப்ளூஸ், மகாவம்சம், இராசாவளி முதலிய வரலாற்று நூல்களும், தமிழ்ச் சங்கம் பற்றிய கருத்துக்கு உறுதுணை புரிகின்றன.

மேற்காட்டிய சான்றுகளால், பாண்டிய நாட்டில் தமிழ்ச் சங்கம் இருந்தது; அங்குத் தமிழ் நூல்கள் அரங்கேற்றப் பட்டன; பாண்டியர்கள் அச் சங்கத்தின் புரவலர்களாக இருந்தனர் என்பது தெளிவாம். இச் சங்கம், பிரெஞ்சுக் கலைக் கழகம் (French Academy) போலத் தமிழ் வளர்ச்சியில் பங்கு கொண்டது.

"மூன்று சங்கங்கள் இருநதனவா என்பதை வலியுறுத்தும் சான்றுகள் போதுமான அளவில் இல்லை. புலவாகள் கூடி ஆயும் கூட்டங்கள இருந்தன என்பதைமட்டுமே பழைய சங்க இலக்கியச் சான்றுகள் அறிவுறுத்துகின்றன. ஆயினும, ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கு உடபட்ட நூலகளைச் சங்க இலக்கியம் என்றும், அககாலததைச் சங்க காலம் என்றும வழங்கும் மரபு பயனுள்ளதாகிவிட்டது" – **டாக்டர் மு.வ.**

# 2. தொல்காப்பியம்

காலப பழமையாலும் புலவா பாராட்டும் சீரமையாலும ஒப்புயாவற்று விளங்குவது தொல்காப்பியம. இந நூலே தமிழரின் நாகரிகச் சிறபபிற்கும தமிழின் பெருமைக்கும் எடுததுக்காடடாய இலங்குகின்றது. இதனைத் தமிழின் உயிர் நூல என்பா இதனை இயற்றியவர் **தொல்காப்பியர்.**

## தொல்காப்பியர்:

இவரைப பற்றிய வரலாற்றுச் செய்திகள் புலனாகவில்லை. இவா பாடிய நூலுக்குப பனம்பாரனார் எனபவா பாயிரம் பாடியுளளாா இப பாயிரத்தால சில செய்திகள் தெரிகின்றன. அவை தொலகாபபியர் துறவி; தமிழில புலமை மிககவர்; வடமொழியில வலலவா; தமிழ்நாட்டு வழக்கு மொழியினையும் செய்யுள் மொழியினையும் நன்கு ஆராய்நதவா; அவருககு முற்பட்ட நூல்களையும் கற்றுத துறைகணடவர்; இதனால தொலகாபபியத்தை எழுதினார்; அதனை நிலநதரு திருவில பாண்டியன் அவைக்களததில 'அதங்கோட்டாசான்' என்பவா முன்னிலையில 'அரங்கேறறினாா' என்பன வாம. தொலகாப்பியரை அகததியரின் மாணவா என்பா. இதற்குச் சானறு தொலகாபபியததில் இல்லை.

தொலகாப்பியா, சமண மதத்தைச சாாந்தவராக இருக்கலாம் எனக் கருதுவர் இவா வாழ்ந்த காலம் பற்றியும் ஒருமித்த கருத்து நிலவவில்லை. கி. மு. மூனறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவா என்பதனைப் பெரும்பாலோர் ஒப்புவா.

## தொல்காப்பியம்:

தொலகாபபியம் எழுததிகாரம, சொலலதிகாரம், பொருளதிகாரம் எனற மூன்று பெரும் பிரிவுகளைக கொணடது ஒவ்வொரு பிரிவிலும் ஒன்பது இயல்களாக மூன்று பிரிவிலும் 27 இயலகள் உள்ளன. இந்த அழகான அமைபபே, தொலகாபபியரின் கலை உளளததை விளக்கும். தொல காபபியச சூத்திரங்கள் மொததம் 1612.

எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களின் பிறப்பு, இயல்பு, திரிபு ஆகியவை பற்றிக் கூறுகின்றார். இப் பகுதியில் தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள், மொழியியல அறிஞர்களால பெரிதும பாராட்டபபடுகின்றன. சொல்லதி காரத்தில் சொற்றொடர் அமைப்பு, சொற்களின் இயல்பு, சொல்லிலும் சொற்பொருளிலும் நேரும் திரிபு பற்றி இலக்கணம் வகுக்கின்றாா. இப் பகுதி, சொலலாராய்ச்சி செய்யும அறிஞாகளுக்குத் தக்க விருந்தாகும். இடையியலிலும் உரியியலிலும் தமிழ்ச்சொற்கள் பலவற்றின் பொருள்களை விளக்குகின்றாா. இவ் வமைப்பு முறையே பிற்காலத்தில் நிகண்டு, அகராதி ஆகியன தோன்றுதற்கு மூலமாகும். எச்சவியலில பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செயவது எவ்வாறு என்று கூறுகின்றார். பொருளதிகாரத்தில் அகபபொருள், புறபபொருள் இலக்கணங்களை ஆராய்கின்றார். எழுத்துக் கும், சொலலுககும் பிறமொழிகளில் இலக்கணங்கள் உள்ளன. ஆனால், பொருளுக்கு இலக்கணம் கண்ட பெருமை மிக்கது தமிழ் மொழியே. அவ் விலக்கணத்தைத் தொல்காப்பியர் மிக நுட்பமாகவும், விரிவாகவும் கூறியுள்ளார். இப் பொருளிலக்கணங்கள் யாவும், கவிதை பாடுவதற்கு மிகமிக இன்றியமையாதன என்னும் கருத்தைத் தொல்காப்பியர் குறித்துச் செலவது, நினைவில கொள்ளத்தக்கதொன்றாம்.

தொலகாபபியம், சிறப்புக்கள் பல கொண்டது.

1. தொலகாபபியம் ஒழுங்குபெற்ற இலக்கண நூல்; அதற்கு முன் இருந்த இலக்கணங்களை வகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தி அமைந்தது.

2. தொல்காபபியம் விரிந்துபட்ட இலக்கண நூல். இவ் விரிவால் விளக்கமும் தெளிவும் ஏற்படுகின்றன.

3. தொல்காப்பிய நூற்பாக்கள் எளிமை மிக்கன.

4. தொலகாப்பியம், மொழிக் கலையின் மூலங்கள் நிறைந்தது; பேச்சு வழக்கும் செய்யுள் வழக்கும் ஆராய்ந்து அவற்றை முதன்முதல் வெளிப்படுத்தியது; மொழி வளரும், மாறும் என்பதனை அறிந்து, 'கடிசொல் இல்லை காலத்துப படினே' என விதி வகுத்தது.

5. தொல்காப்பியம், தலைமைச் சிறப்புடையது; தாய்மைப் பண்பு கொணடது. தொல்காப்பிய நெறியில் நின்று இலக்கணங்களும் இலக்கியங் களும் பல தோன்றியுள்ளன.

6. பின்னாத தோன்றிய இலக்கண நூல்களின் செம்மைக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தது தொலகாப்பியமே.

7. திருக்குறள், மக்களுக்கு உயிா நூலாகத் திகழ்வது போலத் தொல் காப்பியம், தமிழுக்கு உயிா நூலாகத் திகழ்கின்றது.

8. தொலகாப்பியம் இலக்கண நூல மட்டுமன்று; இலக்கியச் சாயலும் பெற்றது.

9. தொலகாப்பியத்தின் பின்வநத தமிழறிஞர்கள் தொலகாபபியர் விதிதத ஆணையை வலிமை வாய்ந்தது எனக் கருதினாாகள். கடவுள் ஆணையை மீறினாலும் தொல்காப்பிய ஆணையை மீறக கூடாது என எண்ணினர்.

10. தொல்காப்பியப் பொருளின் அருமை கருதிப் பலா உரை செய்தனா.

தொலகாபபியம், தமிழ் நாகரிகததின் கலஙகரை விளக்கமாய் ஒளிவீசுகின்றது

# 3. எட்டுத் தொகை

கி பி 3 ஆம் நூாறறாணடுக்கு முறபடட காலததினைச சங்க காலம் என்பா. இக்காலததில வாழ்நத புலவாகளே சங்கப புலவாகள். இவர்களால் இயற்றபபெற்றவை சஙகப பாடலகள் எனபபடும் இபபாடல்களை இலககிய அறிஞாகள் பாட்டும் தொகையும என இருபெரும பிரிவாகப பகுத்தனர் பாட்டு—பததுப பாட்டு· தொகை—எட்டுத் தொகை. பத்துபபாட்டில் பத்து நூலகளும், எடடுத் தொகையில எடடு நூலகளும ஆகப பதினெட்டு நூல்களும் இருப்பதால இரண்டையும் சோத்துப பதினெண் மேற்கணக்கு என்றும் குறிபபிட்டனா.

புலவாகள் பலரால பாடபபடட சங்கப பாடலகள், நறுமணமிகக மலா களாகத திகழநதன, ஒளிபடைத்த மணிகளாகச் சுடாவிடடன காலப்போக்கில இவை மறைநதும மக்களால மறககபபடடும் வருவதைக கணட இலக்கிய அறிஞாகள, இவற்றைக் காப்பாற்றும முயறசியில ஈடுபடடனா, அவற்றை மாலையாக – மணியாரமாகத தொகுத்தனா. தொகுககும்போது அடிவரையறை, பொருளமைப்பு, பாவகை ஆகியவற்றை நிலைககளமாகக் கொண்டு தொகுததனா அவவாறு தொகுக்கபபட்டனவே எட்டுத் தொகை நூலகள். எட்டுத தொகையினை எண்பெருந் தொகை எனவும பாராடடிக கூறுவா.

## எட்டுத்தொகை நூல்கள்:

எட்டுத தொகையில அமைந்துளள நூலகள் 1. நறறிணை, 2. குறுந தொகை, 3. ஐங்குறுநூறு, 4 பதிறறுபபதது, 5. பரிபாடல, 6 கலித்தொகை, 7. அகநானூறு, 8 புறநானூறு என்பன. இப பெயர்களைப பழம பாடல ஒன்று தொகுததுக கூறுகினறது.

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார்ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை."**

இவ்வெட்டுத தொகை நூல்களை மூன்று வகையாகப் பிரித்துக் கொளளலாம். **1. அகப்பொருள் பற்றிய நூல்கள்:** இப்பிரிவில (1) நற்றிணை, (2) குறுநதொகை, (3) ஐங்குறுநூறு, (4) கலிததொகை, (5) அக நானூறு என்ற ஐநதும அடங்கும் **2. புறப்பொருள் பற்றிய நூல்கள்:** இப பிரிவில (1) பதிறறுப பத்து, (2) புறநானூறு எனனும் இரண்டு நூலகளும் அடங்கும. **3. அகமும் புறமும் பற்றிய நூல்:** இபபிரிவுககு உரியது பரிபாடல.

எட்டுத தொகையிலும அமைநத பாடலகளைப பாடிய புலவர்கள் ஏறத்தாழ ஐநநூறறுவா. இவாகளில பெணபாற புலவாகளும் உளளனா. இவாகள், பல ஊாகளில வாழ்ந்தவாகள்; பலவேறு காலததவா; பலவேறு பிரிவினா; இவாகள் பாடிய பாக்களில பெருநில வேநதாகளின போாத் திறஙகளையும வெறறிச் சிறபபுக்களையும விரிததுக் கூறும பாக்கள் பல; போரைத தடுத்து அறிவு புகட்டுவன சில; வளளன்மையைப் பாராட்டுவன பல; வறுமையின் கொடுமைகளை வருணிபபன சில; மறககுடிப பெண் களின் மாணபை விளககுவன சில; மன்பதை வாழ வழிகாடடுவன சில. ஆணும பெணணும் மனம் இணைநது ஒழுகும அனபொழுககங்களை எடுததுரைபபன பல, வரலாறறுக குறிபபுககளையும புராண இதிகாசச் செயதிகளையும் குறிபபிடுவன சில. சுருஙகக கூறின, இப பாடல்களை, பழந தமிழ நாடடின் வரலாற்றுககு – தமிழின் வளததிற்கு – அடிபபடையாக அமைவன.

# 1. அகப்பொருள் பற்றியன

## 1. ஐங்குறுநூறு

மருதம, நெயதல, குறிஞசி, பாலை, முலலை என்பன ஐநதிணைகள ஆகும் இந்த ஐநது திணைகளையும பற்றித் திணை ஒன்றுக்கு நூறு பாடல்களாக 500 பாடலகளைக கொண்டது இந நூல இந நூலில அமைநத பாடலகள ஒவவொனறும 3 அடிககு மேல 6 அடிககு உடபட்டன இவவாறு குறைந்த அடிகளையுடைய பாக்களால இயனறமையால இநநூல ஐங்குறுநூறு என்னும் பெயா பெறறது.

மருதம பறறி ஓரம்போகியாரும, நெயதல பற்றி அமமூவனாரும், குறிஞசி பறறிக் கபிலரும, பாலை பறறி ஓதலாநதையாரும், முல்லை பற்றிப்

பேயனாரும் பாடியுள்ளனா. இந நூற் பாடல்களைத் தேர்நதெடுத்துத் தொகுத்தவா, புலத்துறை முற்றிய கூடலூரார் கிழார்; தொகுப்பித்தவர் யானைககட்சேய் *மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேரவேந்தன்.*

**சிறப்பியல்புகள்:** 1. ஒவ்வொரு திணை பற்றியும் ஒவ்வொரு புலவா பாட, அவவாறு ஐநது திணைகள் பற்றியும் ஐந்து புலவாகள் பாடிய பாடலகளைக் கொண்ட நூல்கள் இரண்டே. அவற்றுள் ஒன்று ஐங்குறுநூறு; மற்றொனறு கலித்தொகை.

2. ஒவவொரு நூறு பாட்டும் பத்துப பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பததுப பகுதிகளாக அமைநதுள்ளன. இதனால பததுப பாடலகள் கொண்ட ஒவவொரு பகுதியும் தனிததனிக் கட்டுககோபபுடையதாக உள்ளது. இப பகுதிகள் ஒவ்வொனறுக்கும் பொருளமைப்பினைக கொண்டோ, பாடலகளில வரும சொலலாட்சியைக் கொண்டோ பெயா வைததுள்ளனர். இததகைய பெயரிடும் அமைப்பினைப பதிற்றுப்பத்திலும் காணலாம் பிற தொகை நூலகளில் காணமுடியாது.

3 ஊடல் ஒழுக்கததை உணாத்தும் மருதத் திணையை முதலில் கொண்ட நூல் இஃது ஒன்றே.

4. கவிதைகள குறைந்த அடிகளையுடையன ஆதலால கவிஞரின் கருததுககள, கவிதைகளின் உளளே மறைநது வாழுகின்றன. இவவாறு கவிதையின் உள்ளே கருத்து மறைநதிருககும மாணபினை உள்ளுறை என்பா. இவவுள்ளுறை மிகுதியாக உடைய நூல் இதுவே.

5. பாட்டுககளில அடிகள் மிகுதியாக இருநதால கருததைச் சொலவதிலும் அழகுபெறச் செய்வதிலும தடை ஏற்படாது. ஆனால, குறைநத அடிகளையுடைய பாட்டில கருத்துக்களைச சொலலுதல அததுணை எளிதன்று, இவ்வருஞ்செயலில ஈடுபட்டு வெறறிகண்ட கவிஞாகள் ஐவரின் கவிதைகளை உடைய நூலும இதுவே.

6. உள்ளுறையை அமைக்க வேணடுமானால பறவை, விலங்கு முதலியவறறின வாழவில வைத்தே கூறவேண்டும். அவ்வாறு இந் நூல கூறுவதால, இந நூலில பிற உயிாகளின அனபு வாழ்க்கையையும் இனபப் பிணைபபையும் படிதது மகிழலாம்

## சுவைமிக்க பாடல்கள்:

தலைமகள், தலைவனுடன் செனறுவிட்டாள். இதனை அறிநதாள் தாய; *அவளைத தேடிக காணுமாறு பலரை அனுப்பினாள; தேடச செனறவாகள்* காணாது திரும்பினா; தாய் மனம அல்லவா? தடுமாறியது. தன் மகள் வைதது விளையாடிய பாவையை — வளாத்த கிளியை — உரையாடி மகிழ்வித்த

எட்டுத் தொகைகளிலும் இருக்கவேண்டிய மொத்தப் பாடல்கள் 2420 ஆகும். ஆனால் இப்போது **2347** பாடல்களே கிடைத்துள்ளன; 73 பாடல்கள் கிடைக்கவில்லை. அவற்றின் பட்டியல்:

| நூல் | இருக்க வேண்டிய பாடல்கள் | கிடைக்கும் பாடல்கள் | மிகைப் பாடல்கள் |
|---|---|---|---|
| 1. நற்றிணை | 400 | 399 | |
| 2. குறுந்தொகை | 400 | 400 | கடவுள் வாழ்த்தும் சேர்த்து இரண்டு பாடல்கள். |
| 3. ஐங்குறு நூறு | 500 | 498 | மிகைப் பாடல்கள் 8. |
| 4. பதிற்றுப் பத்து | 100 | 80 | |
| 5. பரிபாடல | 70 | 22 | இரண்டு முழுப் பாடல்கள்; சில பாடல்களின் உறுப்புகள். |
| 6. கலித்தொகை | 150 | 150 | |
| 7. அகநானூறு | 400 | 400 | கடவுள் வாழ்த்து ஒன்று உள்ளது. |
| 8. புறநானூறு | 400 | 398 | |
| | 2420 | 2347 | 13 |

பூவையைத் தாய் பார்த்தாள. தன் மகளோடு தொடர்புகொண்ட அப் பொருள்களைப் பார்த்து மனம் வருநதினாள். இநதத் தாய்மை இயல்பினை – அன்பின் நெகிழ்ச்சியை – ஓதலாந்தையாா ஓதுகின்றாா.

**"இதுவென் பாவைக்கு இனியநன் பாவை;**
**இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி;**
**"இதுவென் பூவைக்கு இனியசொற் பூவை"**

*என்பன தாயின் புலம்பலகள்*

தலைவியின் தாயும் தலைவனின தாயும் மனம் ஒத்து வாழ்நதாாகள் என்பது உலக அதிசயங்களில ஒன்று. அவ்வாறு வாழ்தல அரிதினும் அரிது. தலைவி, தலைவனுடன சென்றுவிடடாள. இதனை அறிந்த தாய், *தலைவனைப் பெற்ற தாய்மீது சினம் கொள்கினறாள். அவனுடைய தாய்* நினைக்கும் போதெல்லாம் அழுது வருந்தும துனபத்தை அடையட்டும் என்று சபிக்கிறாள். இந்தச் சாபத்தை,

**"நினைத் தொறும் கலுழும் இடும்பை எய்துக**
**... ... ... ...**
**வெஞ்சுரம் என்மகள் உய்த்த**
**வம்பமை வல்வில் விடலை தாயே"**

எனற பாடல உணாத்துகிறது

## 2. குறுந்தொகை

குறைநத அடிகளையுடைய பாட்டால தொகுக்கபபெறற நூல ஆதலால குறுநதொகை என்னும் பெயா பெற்றது. இநநூலில அமைநத பாடலகள 4 அடிக்கு மேற்படடன; 8 அடிக்கு உட்பட்டன. இநநூல 400 பாடடுக்களை உடையது. ஆயினும் இபபோது கடவுள் வாழ்தது உட்பட 402 பாககள் உளளன கடவுள வாழததை நீக்கி விட்டாலும் 401 பாககள உளளன. இப பாடலகளில 307 ஆம் பாடல் 9 அடிகளை உடையதாகக் காணபபடுகினறது. எனவே, அபபாடல, குறுந்தொகையின் அமைபபுககு உடபடாது என்று நீக்கிவிட்டால 400 பாடலகள எனற எண்ணிக்கை பொருததமுடையதாக இருககும.

இந நூலில அமைநத பாடலகளைப் பாடியவாகள 205 புலவாகள. இவாகளில சிலரின இயற்பெயா தெரியவிலலை. எனவே, அப புலவாகள் பாடிய பாடலகளில அமைநத அழகிய தொடர்கள், அழகிய உவமைகள ஆகியவறறால அப புலவாகள் பெயா பெற்றுள்ளனா. செம்புலப் பெயல நீராா, அணிலாடு முன்றிலாா, நெடுவெண்ணிலவினாா, மீனெறி தூணடிலாா, விடடகுதிரையாா, ஒரேருழவனாா முதலிய பெயாகள் அவ்வாறு

அமைந்தன ஆகும். இந் நூலினைத் தொகுத்தவர் பூரிக்கோ; தொகுப்பித்தவர் யாா என்று தெரியவிலலை.

இந் நூலின் முதல 380 பாடல்களுக்குப் பேராசிரியரும், இறுதி 20 பாடலகளுக்கு நச்சினாாக்கினியரும் உரை எழுதினாாகள் என்று தெரிகினறது இவ வுரைகள் இப்போது கிடைக்கவிலலை. டாக்டா உ. வே. சா. அவாகள் இந் நூல முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்கள். மகாவித்வான் ரா. இராகவையங்கா அவர்கள் கடவுள் வாழ்தது உட்பட 111 பாடலகளுக்கு எழுதிய விளக்கவுரை, குறுந்தொகை விளக்கம் என்ற பெயரால அண்ணாமலைப பலகலைக் கழகத்தால் வெளியிடபபட்டுள்ளது.

**சிறப்பியல்புகள்:** 1. உரையாசிரியாகளால் மிகுதியாக மேறகோள காட்டபபெற்ற பாடலகளை உடையது இநநூல் ஒன்றேயாகும் 165 பாடலகளைத் தவிர ஏனைய பாடல்கள் அனைத்தும மேற்கோளகளாக எடுத்தாளப பெற்றுளளன

2. வெள்ளிவீதியாா, ஆதிமநதியாா போனற வரலாறறுச் சிறப்புமிக்க பாததிரஙகளின் பாடலகளைக் கொண்ட சிறபபுடையது

3 தொகை நூலகளில முதன முதலாகத தொகுககபபட்ட பெருமை யுடையது. இநநூல தொகுககபபட்ட பின்னரே பிற தொகை நூல்கள் தொகுக்கபபட்டிருகக வேண்டும என்பா.

4. 'நலல குறுநதொகை' எனறு, 'நல' எனனும் அடைமொழியால பாராட்டபபட்ட பெருமை மிக்கது

5. தருமி பொறகிழி பெறற நிகழ்ச்சிக்கு அடிபபடையாக அமைந்த 'கொங்குதேர் வாழக்கை' எனனும் மூலபபாட்டினைக் கொண்ட மேன்மை யுடையது.

6. தாம் பாடிய பாடடின சிறபபால தம் பெயரை இழநது சிறப்புப பெயா பெறற புலவாகள் பலரின பாடலகளைக் கொணடது.

7. நான்கு அடிககு மேலும் எடடு அடிக்குட்பட்டும அமைநத பாக்களாக இருத்தலால, இலககியச சுவை அளவாக அமைந்து, கவிதை எனறால என்ன என்பதற்கு எடுததுககாட்டாகத திகழ்வது

8 இலககியக் குறறம எதுவுமே இல்லாத பாடல எனப பாராட்டப பெறும் 'தாமரை புரையும காமா சேவடி' எனத் தொடங்கும் பாடலைக கடவுள் வாழ்ததாகக கொணடு மிளிாவது.

9. அகபபொருள் இலக்கியஙகளில இனிமையும், எளிமையும், தெளிவும் மிக்கது.

**சுவைமிக்க பாக்கள்:** முன்பின் அறியாத ஆணும் பெண்ணும் அன்புகொண்டனா. இருவரும் இணைநது ஒன்றாயினர். வேறு வேறாக இருநத நெஞ்சஙகள் ஒனறாகக் கலந்து களித்தமையை விளக்க, 'செம்புலப் பெயல நீரை' உவமை காட்டுகின்றார் புலவா ஒருவர்:

**"யாயும் ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே".** (50)

இருவரின் ஒனறிய அன்பினை விளகக இதைவிட வேறு உவமை கூறுதல இயலுமோ? இததகைய அன்பால ஏறபடட நடபின் திறம் எத்தகையது என்பதைத் தலைவி கூற்றில வைததுப் பாடுகின்றாா மற்றொரு புலவா:

**"நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று!**
**நீரினும் ஆரள வின்றே! சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே!** (3)

இவவாறு இணைந்தவாகள் சிறிது நேரம்கூடப் பிரிநதிருக்க மாட்டாாகள் அவ்வாறு பிரிநதிருககும் நினைப்பு ஏறபட்டால, நேரததைபபற்றிய நினைவு வநதால, காமமே பொயயானது என்கிறாா அளளூா நனமுலலையாா

**"காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர்துஞ்சி யாமமும் விடியலும் என்றுஇப்**
**பொழுதுஇடை தெரியின் பொய்யே காமம்"** (32)

தன மனைவியின் பேசசுககு ஏறப ஆடும் ஆடவனைக் 'கையும் காலும் தூக்கத தூக்கும் ஆடிபபாவை' (7) எனறும, பொறுததுக கொள்ள இயலாத நிலையில தலைவனிடததுத தோனறிய காதல நோயைக 'கையில ஊமன கண்ணில காககும் வெண்ணெய உணங்கல' (58) எனறும், உவமையால விளககும் இடஙகள படித்து மகிழததககன.

இவைபோனற எண்ணறற இனிய பாககளின தொகுபபாகக குறுந தொகை திகழகின்றது பழந தமிழ மககளின வாழவியல உண்மைகளை விளககுவனவாக அமைநத இடஙகளும பற்பல;

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்"** (63)

**"வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்**

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (135)

"அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை" (184)

"பெருந்தோட் குறுமகள் சிறுமெல்ஆகம்
ஒருநாள் புணரப் பெறின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே" (280)

## 3. *நற்றிணை*

குறுந்தொகைப பாடல்களின் அளவுக்கும் நெடுநதொகைப (அக நானூறு) பாடல்களின அளவுககும் இடைபபட்ட அளவுடைய பாடலகளைக் கொணடது நற்றிணையாகும். இந நூலில் உள்ள பாடலகள 9அடிச் *சிற்றெல்லையும் 12அடிப பேரெல்லையும் உடையவை. நற்றிணை நானூறு* என்றும் இநநூல கூறபபடும். இநநூலின் பாடலகளைப பாடிய புலவாகளின் தொகை 175 எனபா. ஆனால 192 புலவாகளின் பெயாகள இப்போது காணபபடுகின்றன இதனைத தொகுத்தவா யார் எனறு தெரியவிலலை. *தொகுபபிததவா பனனாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார்.* இவா பாடிய பாடலகள் இரணடு (97, 301) இத் தொகை நூலில காணப்படு கின்றன. இந் நூலுககுப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயா உரை வரைந்துளளாா.

*சிறப்பியல்புகள்:* 1. *அகப்பொருளின் பகுப்புகளில் ஒன்று திணை* யாகும். இத் திணை எனனும் குறியீட்டைப் பெயராகப் பெற்ற சங்கநூல் இஃது ஒனறே.

2. இந நூலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 'நல' என்னும் அடைமொழி, இந நூலின *பெருமையை உணர்த்தும்.*

3. அடிகள் குறைநதால பொருட்செறிவு இருக்கும். அடிகள் மிகுநதால் வேணடாத விரிவு ஏற்படும. நறறிணையில் அடிகள் அளவாக இருததலால் பொருள அமைப்பும் அளவாக அமைநதுள்ளது.

4. சிலபபதிகாரக் காவியததிற்குக் கருவாகக் கருதபபடும் வரலாற்றுக் குறிப்பு, இந நூலிலேயே காணப்படுகின்றது. அது,

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் துழனியின் இதணத்து ஆங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை இழந்த திருமா உண்ணி" (நற். 216) என்பதாம்.

5 முதல, கரு, உரி ஆகிய இலக்கிய முபபொருளும், ஒப்பமைந்ததைப் போல ஒததுநிற்க இலஙகும் பாட்டுக்களை உடையது இது.

**சுவைமிக்க பாக்கள்:** பாடலில அமைநத சிறப்பு வாயந்த சொற்றொடரால் பெயா பெற்ற புலவாகள் நறறிணையிலும் உள்ளனா. தனிமகனார், விழிக்கட் பேதையார், தேய்புரிப பழங்கயிற்றினார் முதலியோர் அத்தகைய பெயாபெற்ற பெருமக்கள ஆவர். தேய்புரிப பழங்கயிற்றினாா பாடிய பாடல் சுவை மிகுநதது. தலைவன, பொருள் தேடுதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்தான். நடுக்காட்டிறகுச் சென்றவுடன அவன மனம் மனைவியை நினைதது ஏங்கியது. வீடடிறகுச் செலல விரும்பியது. ஆனால, அவனுடைய அறிவோ பொருள் தேடிக் கொண்டே செலல வேண்டும் என்றது. இவ்வாறு மனமும அறிவும் முரண்பட அவன் உடல மெலிநதது. அப்போது தலைவன், "தேயந்த புரியினை உடைய பழைய கயிற்றின இரணடு பக்கததினையும் இரணடு யானைகள் பறறி இழுத்தால அக கயிறு எளிதில் அறுந்து விடுதல போல என் உடலும் அழிந்து விடுமோ?" என்று வருநதினான். இததகைய சுவைமிக்க உவமையைக கூறிய கவிஞா, தேய்புரிப் பழஙகயிறறினார் என்றே பெயரும் பெற்றுவிட்டாா.

"இறபபதறகு நான் அஞசவில்லை, இறநதபின் ஏறபடும் பிறப்பில எங்கே என் காதலன என்னை மறந்துவிடுவானோ என்றுதான் அஞ்சுகின்றேன்" என்று தலைவி கூறுவதாக அம்மூவனாா பாடுகினறாா:

**"சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின்,**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
**மறக்குவன் கொல்என் காதலன் எனவே"** **(397)**

காதலின வலிமைககு இதனைவிட வேறு சான்றும் வேண்டுமோ?

காதலுக்கு ஆட்படட தலைவி – செலவக் குடியில பிறநத தலைவி – தான் பிறநத குடி வறுமையில் வாடவும், தாய வீடடை நினையாதவளாய் இல்லறம் நிகழ்த்தினாள் என்னும மானம் மிக்க பணபினை,

**"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தாதை கொழுஞ் சோறு உள்ளாள்"**

என்னும் நற்றிணை அடிகள் உணாததுகின்றன.

உண்மையான நட்பு, உயரிய நட்பு எது என்பதனை இந் நூற்பாட்டு ஒனறு,

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"**

என்று விளக்குகின்றது. இவ்வாறே உண்மையான செலவம் என்பது, தம்மைச் சாாநதவரின துன்பததைத துடைபபதே என்றும் இலக்கணம் கூறுகின்றது:

"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே."

இத்தகைய வாழ்க்கை உண்மைகள், இநநூலில் பல இடங்களில காணபபடுகின்றன.

## 4. அகநானூறு

அகபபொருள் பற்றிய நானூறு பாக்களைக் கொண்டமையால இஃது அகநானூறு என்னும் பெயர் பெறறது. இதறகு நெடுந்தொகை எனனும் மற்றொரு பெயரும் உண்டு. குறுந்தொகையை நோககி இது நெடுந்தொகை எனப் பெயாபெற்றது போலும. இந்நூலின பாககள் 13 அடிச சிற்றெலலையும் 31 அடிப பேரெலலையும உடையவை. இந நூற் பாடல களைப பாடிய புலவாகள எணணிக்கை 146. இநநூலினைத் தொகுக்கு மாறு செய்தவன் பாண்டியன உககிரப பெருவழுதி; தொகுததவா மதுரை உபபூரிகுடி கிழார் மகன உருத்திரசன்மன் இநநூலின் முதல் 90 பாடலகளுககுப பழைய உரை கிடைத்துள்ளது. நூலமுழுமைக்கும் நாவலா ந.மு. வேங்கடசாமி நாட்டாரும் கரநதைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையும் உரை வரைநதுள்ளாாகள்.

**சிறப்பியல்புகள்:** 1 அகப்பொருள் உணாத்தும் நூலகள, எட்டுத தொகையில பல இருககு, இந நூல்மட்டும் அகம எனற பெயரினைப பெற்றிருபபது பெருஞ சிறபபாகும்.

2. இந் நூலில் அமைநத நானூறு பாடல்களும களிறறியானை நிரை (1—120); மணிமிடை பவளம (121—300); நிததிலக் கோவை (301—400) என மூன்று பெரும் பகுதிகளாகப பிரிக்கபபட்டுள்ளன. இத்தகைய பிரிபபைச் சங்க நூலகள பிறவறறில காணுதல இயலாது. ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு நூலாகவே உரையாசிரியாகள் மதிததுப போற்றினா

3 பாட்டின எண்ணைப பார்த்ததும் திணையைக் கண்டு கொள்ளும் வகையில பாடலகளைத் தொகுத்திருககும் சிறப்பு வியநது பாராட்டுதற் குரியது. ஒறறைபபடை எண்களையுடைய பாடலகள (1, 3, 5, 7, 9, 11, 13) பாலைததிணை பறறியன; 2, 8, 12, 18, எனறு இரணடும் எட்டுமாக வரும பாடலகள் குறிஞ்சித்திணை பறறியன; 4, 14, 24, 34 எனறு நான்காம் எணணினால் வரும் பாடலகள் முலலைத்திணைக்கு உரியன, 6, 16, 26 என ஆறாம் எண்ணில் வரும் பாடல்கள் மருதத்திணை பற்றியன; 10, 20, 30 என்று இவவாறு பததாம எணணில வரும பாடலகள நெயதல திணைக்கு உரியன. இத்தகைய அமைபபு இநநூலுககே உரிய தனிச சிறபபு.

4. அடியளவில் மிகுந்த பாட்டுக்களை உடையது ஆதலால் செய்திகள் விரிவாகப் பேசபபடுகின்றன அவ்வாறு விரிவு பெறும்போது வரலாற்றுச் செய்திகள் முதலிடம் பெறுகின்றன. அகப்பொருள் பற்றிய நூல்களில் இந் நூலிலேயே வரலாற்றுச் செய்திகள மிகுதி.

5. முதற் பொருளும் கருப்பொருளும் இந் நூலில் அமைந்திருத் தலைபபோலப் பிற நூல்களில் காணுதல் இயலாது.

இந்நூலின் பாடலகளுக்குப் பாட்டாலேயே ஒருவர் உரை செய்திருந் தாராம் இப பெருமையும் இந் நூலுக்கே உண்டு.

**சுவைமிக்க பாக்கள்:** தலைவனின் இளம் புதலவன், யாவரும் விருமபும் அழகுடையவன். தேரோடும் வீதியில் தன்னந் தனியனாய்த் திரிகின்றான். தலைவனின பரத்தை அவனைக கண்டாள். ஒருவரும் தன்னைப பார்க் காததை அறிநது அவனை எடுததாள்; மார்போடு அணைத்துக் கொண்டாள். 'என் உயிரே' என்றாள. இச் சமயம் தலைவி இக் காட்சியைப் பாாதது விட்டாள்; பரத்தை கலங்கினாள். தலைவி அவளைப் பாாதது, " ஏன் கலக்கம் அடைகின்றாய்? நீயும் இவனுக்குத் தாய்தான்" என்றாள. இச்சொறகளைக் கேட்டதும் பரத்தை நாணினாள்; செய்த களவை ஒப்புக் கொண்டவள் போலத் தலைகுனிநதாள்; நிலததைக் காலவிரலால் கீறினாள்.

இந்த இனிய காட்சியைச சாகலாசனார் என்னும் புலவர் அழகு பெறப் பாடுகின்றார்.

"மாசில் குறுமகள் எவன் பேதுற்றனை
நீயும்தாயை இவற்கு"

இவ் வரிகளில், இகழந்து கூறும் போக்கில நகைச்சுவை ததும்புகின்றது.

போருககாகத தலைவியைப் பிரிந்த தலைவன, போர்முடிதது வீடு திரும்புவதறகாகத தேரில ஏறினான். தோ ஏறியதை அறிநதானே தவிர வநத வழியைச் சிறிதுமஅறியவிலலை அதற்குள் பாகன், "வீடு வந்து சோந்தோம்; இறங்குங்கள்." என்று கூறினான அதுகேட்ட தலைவன் மகிழ்நதான். "பாகனே, நீ தேருககுக் குதிரையாகப பூட்டியது காற்றா? நின நெஞ்சமா?"

"வான்வழங்கு இயற்கை வளிபூட் டினையோ?
மான் உருவாக நின்மனம் பூட்டினையோ?" (384)

எனறு கேட்டான. தோளோடு தோள் சேரத தழுவிக கொண்டு வீட்டினுள சென்றான என ஒக்கூா மாசாத்தியாா பாடுகின்றார். இப் பாட்டில, இன்று நாம் கூறும் மனோவேகம், வாயு வேகம் எனற சொறகள தமிழ்நடை பூண்டு அழகு பெறறுள்ளன.

பண்டைத தமிழா திருமண முறையை விளக்கும் பாடலகள் (86, 136) சுவை மிக்கன.

## 5. கலித்தொகை

150 கலிப்பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு திணையைப் பற்றியும் ஒவ்வொரு புலவராக ஐந்து திணைகள் பற்றியும் ஐந்து புலவர்களால் பாடப்பட்டது.

**பாலை** — பாலை பாடிய பெருங்கடுங்கோ; **குறிஞ்சி** — கபிலர்; **மருதம்** — மதுரை மருதனிளநாகனார்; **முல்லை** — சோழன் நலலுருத்திரன்; **நெய்தல்** — நல்லந்துவனார.

இந் நூலைத் தொகுத்தவா நல்லந்துவனார். தொகுப்பித்தவா யார் என்று தெரியவில்லை. இந் நூலுக்கு நச்சினார்க்கினியா உரை வரைந்துள்ளார்.

**சிறப்பியல்புகள்:** 1. 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனப் புலவர்களால் பாராட்டபபடுவது.

2. "சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள், பெருங்கதை ஆகியவற்றை விரும்ப மாட்டோம். கலித்தொகை தரும் இன்பச்சுவையே பெரிதும் விரும்புவோம்" எனப் புலவாகளால் புகழ்ந்து கூறப்படுவது.

**"திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்**
**விருத்தக் கவிவளமும் வேண்டோம் — திருக்குறளோ**
**கொங்குவேள் மாக்கதையோ கொள்ளோம் நனிஆர்வோம்**
**பொங்குகலி இன்பப் பொருள்."**

3. கைக்கிளை, பெருந்திணை ஆகிய திணைகளுக்கு உரிய பாடல் களைக் கொண்டது.

4. இசைநயம் மிக்கது. இதற்கு ஏற்றாற்போல யாப்பு அமைந்துள்ளது.

5. நாடகக் கூறு மிகுதியாக உடையது.

6. பிற தொகை நூல்களைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாக இதிகாச புராணச் செய்திகள் அமையப் பெற்றது.

**சுவைமிக்க பாடல்கள்:** பாலையின் கொடுமையை இந் நூலைப் போல விரிவாக வேறு நூல்களில் காண இயலாது. இக் கொடுமையைச் சுவைமிக்க கவிதைகளாக மாற்றியுள்ளார் பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பாலைவழியில செல்பவர்களின் நாக்கு வறண்டு விடுகின்றது. தண்ணீர் கிடைக்கவிலலை. துயரால் தடுமாறுகின்றாாகள். அப்போது அவாகளின் கண்களிலிருந்து கண்ணீர் வருகின்றது. அக் கண்ணீர் நாவை நனைத்துச் சிறிது ஆறுதல தருகின்றதாம்!

**"உள்நீர் வறப்பப் புலம்வாடு நாவிற்குத்**
**தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்**
**கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு."**

— இத்தகைய காட்டில் ஆறலை கள்வர்கள் வாழ்கின்றாாகள். அவாகள் வழிச் செல்பவாகளை மறித்துக் கொள்ளை அடிக்கின்றாாகள். அவவாறு கொள்ளை அடிப்பதற்குப் பொருள்கள் இல்லை என்றால், வழிச்செல்பவா களைக் கொனறு அவர்களின் உடல்கள் துள்ளுவதைக் கண்டு மகிழ்கின் றார்கள்.

**"கடுங்கண் மறவர்தாம்**
**கொள்ளும் பொருள்இலர் ஆயினும், வம்பலர்**
**துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர்வௌவலின்**
**புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை."**

எவ்வளவு கொடுமை! இக் காட்டில் பறவைகள்கூடச் செலல விலலையாம்!

கலித்தொகைப் பாடல்களின் உவமையும், உரையாடலும் மனம் கவரும் வகையில அமைநதுள்ளன. நெய்தற் கலியில அமைநத சில வரிகள், சிறந்த பொன்மொழிகளாகத் திகழ்கின்றன

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;**
**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை;**
**செறிவு எனப்படுவது கூறியது மறா அமை;**
**நிறைவு எனப்படுவது மறைபிறர் அறியாமை;**
**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"**

# 2. புறப்பொருள் பற்றியன

## 1. பதிற்றுப்பத்து

ஒவவொரு சேர வேநதரைப் பறறிப் பத்துப் பத்துப பாக்களாகச் சேர வேநதா பதினமரைபபற்றிய நூறு பாக்களைக் கொண்டது, இதனால பதிற்றுப்பத்து (பதது + பதது) என்னும் பெயா பெறறது. இபபோது சேர வேநதா எண்மரைப் பறறிய எட்டுப் பததுக்களே (80 பாடலகளே) கிடைத் துள்ளன. முதல் பததும், இறுதிப பத்தும் கிடைக்கவில்லை.

இந் நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. இதனை எழுதியவா யார் என்று தெரியவில்லை. இக் காலத்தில திரு. ஒளவை துரைசாமி பிள்ளை

அவாகளும், பண்டிதா சு. அருளம்பலனார் அவாகளும் உரை வரைந் துள்ளனர்.

**சிறப்பியல்புகள்:** 1. தமிழகத்தில் ஆட்சி செலுத்திய முடிவேந்தர் மூவர்களுள் ஒருவரைப் பற்றிய வரலாற்று நூல இது. இத்தகைய பெருமை வேறு நூலுக்கு இல்லை

2. பாடலகள் ஒவ்வொனறும் பாட்டில் அமைந்த சிறநத சொற்றொடரால பெயர் பெற்றுள்ளன. இம் முறையும் ஐங்குறு நூறு தவிர வேறு சங்கததொகை நூல்களில காணமுடியாதது.

3. ஒவ்வொரு பாடலின இறுதியிலும் தூக்கு, வண்ணம் என்பன காணபபடுகின்றன தூககு என்பது பாவகைகளை அடிவரையறை கொண்டு பிரிப்பது; வண்ணம் எனபது சநத வேறுபாடு. எனவே, இப பாடல்கள், சந்த இன்பம பெற இசையுடன் பாடபபட்டன எனபது தெரிகினறது இதற்கேற்றாற் போல இந நூலில அமைநத ஆசிரியப பாக்கள் பல்வேறு வகையில் காணப்படுகின்றன

4. ஒவவொரு பத்துப பாடலகளின் இறுதியிலும் ஒவவொரு பதிகம் உள்ளது அப பதிகததில பாட்டுடைத் தலைவன், அவன் செயத அருஞ செயலகள, அவனைப் பாடிய புலவா, அப் பதிகத்தில அடங்கிய பாடலகளின் பெயர்கள் காணப்படுகின்றன பதிகத்திறகுபபின் அமைநத உரைநடைப் பகுதியில புலவா பெற்ற பரிசில, அரசன் ஆட்சி புரிந்த ஆணடு ஆகியன கூறபபடுகினறன இவை வரலாற்றாராய்ச்சிக்குப் பெரும் பயன தருகின்றன. இந்த அமைபபு முறையை ஒட்டியதே பிறகாலததில சோழர்கள் ஏறபடுத்திய மெயக்கீர்ததி.

5. இந நூலில பல செயயுடகள் அநதாதி முறையில அமைநதுள்ளன. இந்த அமைப்பே பிறகால அநதாதி நூலகளுககு வழிகாட்டியிருததல கூடும்.

### வரலாற்றுச் செய்திகள்:

இந் நூலில் சேர அரசாகள் இரு மரபினராகக் காணபபடுகின்றனர். முதல ஆறு பததுககு உரியவாகள், உதியன் சேரல் மரபினர், இவாகள் வஞ்சியைத தலைநகராகக கொணடு ஆணடனா; இறுதி நான்கு பததுக்கு உரியவாகள, அநதுவஞ்சேரல இரும்பொறை மரபினா; இவாகள் தொண்டியைத தலைநகராகக கொண்டு ஆட்சி செய்தனா இவவிரு மரபினரும் சிறநத வீராகளாய்த திகழ்நதிருந்தனர்; புலவர்களுக்கு வரையாது வழங்கினா.

ஆடுகோடபாட்டுச் சேரலாதன 38 ஆண்டுகள் அரசாண்டவன். இவனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையாா புகழ்நது பாடிய பத்துப பாடடுக்கள்

ஆறாம் பத்தில் உள்ளன. அபபாடலகளைப் பாடியதற்காக அவ்வேந்தன் அணிகலனுக்காக ஒன்பது காபபொன்னும், நூறாயிரம் காணமும் காக்கை பாடினியாருக்குக் கொடுத்தானாம். இத்தகைய பரிசு பெற்ற காக்கை பாடினியார், அவனை ஒரு பாடலில பாராட்டுகின்றார். 'இரவலா வராவிட்டால, அவாகளைத் தேடிச் சென்று, தேரில ஏற்றிக்கொண்டு வந்து உண்ணும் உணவு கொடுபபான்' என்கின்றார்.

**"குடவர் கோவே! கொடித்தேர் அண்ணல்!**
**வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்**
**தேரில் தந்து அவர்க்கு ஆர்பதன் நல்கும்!"**

தேடிக் கொடுக்கும் கொடையை என்னென்று சொல்வது!

## 2. புறநானூறு

புறப்பொருள் பற்றிய நானூறு பாககளைக கொண்டது இந நூலுக்குப புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு என்று வேறு பெயாகளும் உண்டு. இந் நூற்பாடலகளைப பாடிய புலவர்கள் எண்ணிக்கை 160. இந் நூலுக்குப பழைய உரை உள்ளது. ஒளவை துரைசாமிப் பிள்ளை விளககவுரை வரைந்துள்ளாா.

**சிறப்பியல்புகள்:** 1. மூவேநதாகளையும், கடையெழு வள்ளலகளையும், குறுநில மனனாகளையும பற்றிக் கூறுவதால் இந் நூல தமிழக வரலாறறு நூலாகத் திகழ்கின்றது.

2. சங்க காலச் சமுதாயம், பழகக வழக்கங்கள, கலவி, கலைகள் பற்றி அறிவதற்குப பெருநதுணை புரிகின்றது

3 வீரம் செறிந்த பாடலகளைக கொண்டு விளங்குகினறது.

4 தம்மைக் காபபாறறிய புரவலாகள இறந்தபோது, புலவாகள் வடித்த கணணீா பாட்டாக உருபபெற்றுப பாடியவா மனததைக் கரையவைககும் சுவைமிகுத் திகழ்கின்றது.

5 அறததைப் பற்றிய கருத்துககளைக் கூறுதறகு ஏறற புறப்பொருள் அமைநதது ஆதலால, வாழக்கைத தத்துவங்கள பல ஒளிவிடுகின்றன.

6. அகபபொருள இலக்கியஙகளில உயாநத காதல அன்பு பாடபபடுவது போன்று, புறநானூற்றில உயாநத நடபுப பேசபபடுகினறது. நட்பிறகு எடுத்துககாட்டாகக் கூறும் பாரியும் கபிலரும், கோபபெருஞசோழனும் பிசிராநதையாரும் புறத்தில உயிர் வாழகின்றனா

**வரலாற்றுச் செய்திகள்:**

புறநானூற்றில் 18 சேர அரசாகள, 18 சோழ வேநதாகள், 15 பாணடிய மனனாகள பற்றிய பாடலகள் காணபபடுகினறன. இவாகள் தலைச் சங்க –

இடைச்சங்க — கடைச்சங்க காலத்தைச் சோந்தவர்கள். இவாகள் இயற்றிய போாகள்; போாகளில் உதவிய ஏனைய வள்ளல்கள்; குறுநில மன்னர்கள்; போரின முடிவு முதலியனவும் இநநூலில் காணப்படுகின்றன.

**சுவைமிக்க பாக்கள்:**

தலைவனும் தலைவியும் காட்டு வழியில் செல்கின்றனா. தலைவன் இறநதுவிட்டான். தலைவி, சொலலொணாத துயாக்கடலில மூழ்கினாள். அவளுக்குத் தலைவனின் தாயின நினைவு வருகின்றது. தலைவனின் தாய், அவனைச் செலவமாக எணணினாள்; செம்மலாக நினைத்தாள், நாளதோறும் அவன் புகழே பாடினாள். அநதத் தாயககுத தலைவன் இறந்த செய்தி கிடைததால அவள் என்ன ஆவாளோ என்று தலைவி கலங்கினாள்.

"இன்னன் ஆயினன் இளையோன் என்று
நின்னுரை செல்லு மாயின்
… … . என் மகன்
வளனும் செம்மலும் எமக்கென நாளும்
ஆனாது புகழும் அன்னை
யாங்கா குவள்கொல் அளியள் தானே?" (254)

இந்த அரிய சாவுப பாடடைக் கயமனாா பாடியுளளாா. இப் பாட்டு, அகப்பொருளில அமைய வேணடியது; ஆனால வாழவைக கூறாமல சாவைக் கூறுவதால புறபபொருளாகிப் புறநானூற்றில இடம் பெற்றுவிடடது.

கழைதின் யானையாா எனனும் புலவா, வலவில ஓரியைப புகழ்கின் றாா. அப்போது, அருமையான தமிழ்ப பண்பாட்டை நினைவுபடுத்துகின் றாா. ஈ எனறு கேட்பது இழிந்தது; அவ்வாறு கேட்குமபோது இல்லை என்று சொலவது அதனைக காட்டிலும் இழிந்தது வாங்கிக் கொள் என்று தாமாகவே முன் வநது கொடுபபது உயாந்தது; அப்போது ,வேணடா என்று கூறுவது அதனைக காட்டிலும் உயாநதது.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று" (204)

இவவரிகளைப் படிக்கும்போது, தமிழ் நெஞசத்தின் செம்மை, உள் ளங்கை நெலலிக்கனி எனத் தெரிகின்றது.

# 3. அகமும் புறமும் கலந்த நூல்

## 1. பரிபாடல்

பரிபாடல என்னும் இசைப்பாக்களால் தொகுக்கப்பெற்றது; அதனால் பரிபாடல் எனப் பெயர் பெற்றது. 'எழுபது பரிபாடல்' என்பர் உரை யாசிரியர்கள். ஆனால இபபோது 22 பாடல்களே கிடைத்துள்ளன. பழைய உரைகளால் இரண்டு முழுப் பாடல்களும் சில உறுப்புக்களும் கூடுதலாக அகப்பட்டுள்ளன. இநநூலுக்குப் பரிமேலழகர் உரை வரைந்துள்ளார்.

**சிறப்பியல்புகள்:** 1. பரிபாடல் என்னும் யாப்பில் அமைந்த தமிழ்நூல் இஃது ஒன்றே.

2. பண்டைத் தமிழ் இசைக்கு இப்போது உள்ள இலக்கியங்களில் பழமையானதும் இதுவே. இந நூலில அமைநத பாடல்களுக்கு இசை வகுத்திருக்கின்றனா.

3. அகமும் புறமும் கலநத பொருட கலவை நூலும் இதுவே.

4. முருகப் பெருமான், திருமால முதலிய கடவுளாகளைப் பற்றி மிகுதி யாகக் கூறுவதும இதுவே. இந் நூலால சங்ககாலப் பக்தி நெறியை அறியலாம.

5. வையை ஆற்றைப பறறியும் பாண்டியரைப் பற்றியும் விரிவாகப் பேசும் இயல்பு படைததும் இந நூலே.

**சுவைமிக்க பாடல்கள்:**

வையை ஆறறில புது வெள்ளம பெருக்கெடுத்து வருகின்றது. கட்டுக்கு அடங்காது பாய்கின்றது; அணைகளை உடைததுக் கொண்டு போகின்றது; இதனைக் காண்கினறாா மையோடக கோவனார். அழகான உவமைகள் இரண்டு கூறுகின்றாா. ஆடல இலக்கணம் அறியாத பெண்ணொருத்தி தான் வேணடிய இடங்களில ஆடுவது போலவும், ஊடலின் இயலபினை அறியாத பேதைப பெண ஒருததி கணவன் கருத்திறகேற்ப நடக்காமல் அவனைவிட்டு நீங்குவது போலவும், வெளளம் கணடகணட இடங்களில் எலலாம் பாய்நதது; தனக்கு உரிய இடத்தைக் கடந்து ஓடியது என்கின்றாா.

**"ஆடல் அறியா அரிவை போலவும்**
**ஊடல் அறியா உவகையாள் போலவும்**
**வேண்டுவழி நடந்து தாங்குதடை பொறாது**
**... ... ... ... ... புதுநாற்றம்**
**செய்கின்றே செம்பூம் புனல்"**

இததகைய புதுவெளளம பற்றிய செயதிகள், பரிபாடலில் பல காணப்படுகினறன

கிடைத்த இருபத்திரண்டு பாடல்களுள ஆறு பாடலகள் திருமாலைப் பற்றியன; எட்டுப் பாடலகள் முருகப பெருமானைப போறறுவன; எட்டுப் பாடல்கள் வையைக்கு உரியன. எனவே, 14 பாடலகள் கடவுளரைப் பற்றியன என்பது பெறப்படும். இந நூலில் கூறும் கடவுட் கொள்கைகள சிறபபுடையன.

செவ்வேளிடத்தில கடுவன இளவெயினனார் வரம் வேண்டுகினறார. "இறைவனே! நாங்கள் உன்னிடத்தில் இரநது கேடபன பொருளோ, பொன் னோ, போகமோ அலல, அருள், அன்பு, அறம், எனற மூன்றுமே" என்கிறார.

"யாம் அம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒளிதா ராயோ."

இப புலவரே திருமாலின இயலபுகளை அடுககிக் கூறும் வரிகள், தமிழ் அருச்சனைக்கு உகநதனவாக உள்ளன.

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ!

இவை போனற பாடலகளைப படிக்கும்போது, கடவுட் கொள்கை வளாசசிபெறற காலத்தில இந நூற பாடலகள் பாடபபடடிருக்கலாம் எனபது தோன்றுகிறது

# 4. பத்துப் பாட்டு

'பத்துப்பாட் டாதினம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே'

— *பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.*

பாட்டும் தொகையும எனச் சஙக இலக்கியததை இரு பெரும் பிரிவாகப பகுப்பா. அவறறுள் பாடடு எனபது பததுப பாட்டினைக குறிககும பத்துப பாட்டில் அடங்கிய நூலகள் 1. திருமுருகாற்றுப படை, 2 பொருநராறறுப படை, 3. சிறுபாணாறறுப படை, 4 பெரும்பாணாறறுப படை, 5 முலலைப் பாட்டு, 6. மதுரைக காஞ்சி, 7. நெடுநலவாடை, 8. குறிஞ்சிப் பாட்டு, 9. பட

டினப்பாலை, 10. மலைபடுகடாம் (கூத்தராற்றுப் படை) என்பன. இவற்றைப் பழைய வெண்பா ஒன்று தொகுத்துக் கூறுகின்றது.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

இப பத்துப் பாடலகளில் திருமுருகாற்றுப் படை, பொருநராறறுப் படை, சிறுபாணாற்றுப படை, பெருமபாணாற்றுப படை, கூததராறறுப் படை என்ற ஐந்தும் ஆற்றுப் படை என்னும் இலக்கிய வகையைச் சோநதன இவ் வைநதும் மதுரைக் காஞ்சியும் புறபபொருள் பற்றிக் கூறுவன. முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினபபாலை என்ற மூன்றும அகப்பொருள் பறறியன. நெடுநலவாடை அகப்பொருளும் புறப்பொருளும் பற்றியது; சிலர் இதனை அகபபாட்டே என்றும் கூறுவர்.

## புறப்பொருள் நூல்கள்

### 1. திருமுருகாற்றுப்படை

இந நூல பததுப பாட்டில முதலாவதாக அமைநதுள்ளது; பததுப பாட்டிற்குக கடவுள வாழ்த்துப போன்ற சிறபபுடையது; புலவராறறுப் படை என வேறு பெயராலும வழஙகப்படுவது, 317 அடிகளைக கொண்டது. இதனை இயறறியவா நககீரா முருகப பெருமானை வழிபடுபவாகள் நினைததகை அடைவா என்பதனை இந நூல வலியுறுத்திக் கூறுகின்றது. சைவாகள நாளதோறும் இந நூலினைப் பாராயணம செயது வருகின்றனர். சைவத திருமுறைகள பனனிரணடனுள் பதினோராம திருமுறையில இந் நூல சோக்கப பட்டுளளது.

முருகக கடவுளை அடைநது வீடு பெறற அடியவன் ஒருவன, வீடு பேறறை விருமபிய மறறொருவனை அககடவுளிடம ஆறறுபபடுததும முறையில பாடபபட்டது ஆதலின் இந நூல திருமுருகாறறுபபடை என்னும பெயா பெற்றது. இந்நூலில முருகப பெருமான் அமாநதிருக்கினற திருபபரஙகுனறம், திருச்சீரலைவாய, திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல, பழமுதிா சோலை என்னும் ஆறுபடை வீடுகளையும் பற்றிய சிறப்பியலகளைக காணலாம்.

திருபபரங்குன்றத்தில முருகப பெருமானின் திருவுருவச் சிறப்பு அழகுபெறக் கூறபபடுகிறது. திருபபரங்குன்றம், வளம நிறைந்த வயல்கள்

சூழ இருப்பதும், மாட்சிமை பெற்ற மதுரைக்கு மேற்கே அமைந்திருப்பதும் ஆகிய அழகும் புனைநதுரைக்கபபடுகிறது.

திருச்சீரலைவாயில் முருகப பெருமான் ஆறுமுகமும் பன்னிருகையும் உடையவனாய அருள் புரியும் திறம் உணர்ததப்படுகினறது.

திருவாவினன் குடியில் முனிவர்களும தேவர்களும் முருகப் பெரு மானை வழிபடுகிறாாகள். முருகப் பெருமான் தெய்வயானையுடன் காட்சி தருகின்றான்.

திருவேரகததில அந்தணர்கள் ஈர ஆடையுடன் நாள் மலா தூவி வழிபடும் சிறபபைக் காணலாம்.

குன்றுதோறாடலில் குறிஞ்சி நிலத்துககுரிய முருகப் பெருமானைக் குறவாகள் ஆடியும் பாடியும் வழிபாடு செய்யும் திறத்தை அறியலாம்.

பழமுதிா சோலையில முருகப் பெருமானை வணங்கும் முறையும், அவனிடம் சென்று அருள பெறும் வழியும், தொண்டர்களின் நல்லியல்பும் சித்திரிககபபடுகின்றன.

மணங்கமழ தெய்வத்து இளநலம் காட்டி வீற்றிருக்கும் முருகப் பெருமானை வழிபட்டால,

**"நன்னர் நெஞ்சத்து இன்னகை வாய்ப்ப**
**இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"**

என்று பயன கூறுகின்றாா நக்கீரர். இந் நூல் ஆறறுப்படை என்னும் இலககிய வகையைச் சார்நததாயினும், இதற்கும் பிற ஆற்றுப்படைகளுக்கும் வேறுபாடு உண்டு பிற ஆறறுப்படைகள், ஆறறுப படுததப்படுவோனால பெயா பெறறுள்ளன; திருமுருகாற்றுப்படை, ஆற்றுப்படுத்தபபடுபவரை ஆதரிப்பவரால பெயா பெற்றுள்ளது.

## 2. பொருநராற்றுப்படை

கரிகாற பெருவளததானை முடத்தாமக் கணணியார் பாடியது; 248 அடிகளையுடையது. கரிகாற பெருவளததானிடம் பரிசில் பெற்ற போாக்களம் பாடும் பொருநன ஒருவன், பரிசில் பெறக்கருதும் மறறொரு புலவனை அக்கரிகாற பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.

கரிகாலனின் வீரம், வெறறிச் சிறபபு, வரையாது வழங்கும் வள் ளனமை, சோழநாட்டு வளம் முதலியவற்றை இந் நூல விரிவாகக் கூறுகின்றது

**"சாலி நெல்லின் சிறைகொள் வேலி.**
**ஆயிரம் விளையுட் டாகக்**
**காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"**

எனக் காவிரியால வளம் பெருகும் சோழநாட்டை வானளாவப் புகழ்கின்றார் ஆசிரியா.

பாலை யாழில தோனறும் இசையால் வழிப்பறிக் கொள்ளையர் மனம் மாறினா: அவாகளின கையில இருநத படைக கருவிகள் நழுவின என இந் நூல கூறுகினறது. இதனால் இசையின ஆற்றல் புலபபடும யாழின் அழகான தோற்றத்திற்கு, மணப் பெண்ணை உவமை கூறியிருபபது பாராட்டுக்குரியது.

## 3. சிறுபாணாற்றுப்படை

ஓயமானாட்டு நலலியக கோடன என்ற வள்ளலை இடைக்கழி நாட்டு நலலூா நததததனாா பாடியது: 269 அடிகளையுடையது: நல்லியக் கோடனிடம பரிசில பெற்ற பாணன் ஒருவன, வறுமையால் வருந்திய மறறொரு பாணனை ஆற்றுபபடுத்துவதாக அமைநதது.

இசைக் கலையை வாழ்க்கைத துணையாக அமைததுக் கொண்டவாகள் பாணா ஆவா. இவாகள யாழ்ப் பாணா, இசைப பாணா, மண்டைப பாணா எனப பலவகைப படுவா இபபாட்டில கூறப்படும் பாணன் சிறிய யாழை உடையவன ஆதலால இபபாடல சிறுபாணாற்றுப்படை எனப் பெயா பெற்றது. இனி, இதனை அடுதது வரும் பெருமபாணாறறுப்படை, அடிகளால் மிகுநதிருததலால அடி அளவில குறைந்த இப பாடல் சிறுபாணாறறுபபடை என வழங்கபபட்டது என்றும் கூறுவா.

இப் பாட்டில் விறலி வருணனை, முடியுடை மூவேந்தாகளின் தலைநகரச் சிறபபுக்கள, கடையெழு வள்ளலகளின கொடைத் திறம், நெய்தல, முலலை, மருதம் ஆகிய நிலங்களின் இயல்புகள கூறபபட்டுள்ளன. மூவேநதரையும பற்றி ஒரு சேரக கூறும நெடுமபாட்டு இஃது ஒன்றே 'மயிலுககுப போாவை வழங்கிய பேகன, முலலைக்குத தோ ஈநத பாரி, இரவலருககு நாடும் குதிரையும் நலகிய காரி, தனக்குக கிடைதத தலை சிறநத ஆடையைச் சிவபெருமானுககுக கொடுதத ஆய, ஔவைககு நெலலிககனி ஈநத அதியமான, இலலறததாருககுப பெரும் பொருள் வழங்கிய நளளி, கூததாககு நாடு கொடுதத ஓரி ஆகிய வளளலகள எழுவரின கொடைததிறனகளும, நலலியக் கோடனிடம ஒருங்கே அமைந்திருககின்றன' என ஆசிரியா பெரிதும் பாராட்டுகினறாா அவனிடம சென்றவாகள வறுமையின் பிடிபபிலிருந்து விடுபடுவா எனபது திண்ணம எனவே, அவனிடம் செலலுதற்கு முனனால பாணன் உறற வறுமையை நெஞ்சம உருகும வகையில பாடுகினறாா.

"இறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தல் நோனாது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்,"

இ.வ.3.

"குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்."

## 4. பெரும்பாணாற்றுப் படை

தொண்டைமான இளநதிரையனைக கடியலூா உருததிரங்கண்ணனாா் பாடியது; ஐநநூறு அடிகளையுடையது இளநதிரையனிடம் பரிசில் பெற்ற பாணன ஒருவன, வறுமையால வாடிய மறறொரு பாணனை இளந்திரை யனிடம் ஆற்றுப படுத்துவதாக அமைநதது.

இப பாடடில வரும் பாணன பெரிய யாழை உடையவன; ஆதலால இப பாடடு, 'பெருமபாணாற்றுப படை' என்னும் பெயா பெறறது. இனிச் சிறு பாணாற்றுப படையை நோக்க இது அளவில பெரியது, ஆதலால பெரும பாணாறறுப படை என்று பெயா பெற்றது என்றும் கூறுவா.

இப பாட்டில தொணடை நாட்டின் சிறப்பு, ஐவகை நிலங்களின் இயலபு, அங்கு வாழும் மககளின இயலபுகள், விருந்தினரைப பேணும முறை முதலியன நனகு உணாததபபட்டுளளன.

தொணடை நாட்டில வழிபபறி செயயும கள்வா இலலை, இடி இடியாது; தீய விலங்குகள துன்பம் செயயா என்று இளந்திரையனின் செங்கோற் சிறபபைக் கண்ணனாா செபபுகினறாா சிலப்பதிகாரம் இதனைப் பின பற்றியே பாணடியனின செங்கோற் சிறபபைப பாடுகினறது. இளநதிரை யனின தலைநகரமாகிய காஞ்சியின பெருமையை இந்நூல எடுத்தியமபு கினறது, துரியோதனன் முதலாய நூறறுவரை ஐவா வெனறு சிறப்புற்றது போலப பகைவரை வென்று இளநதிரையன் சிறபபுறறான் என இதிகாசக் கதையுடன இளநதிரையன வெற்றியை ஒபபிடடுப புகழகினறாா ஆசிரியா.

பண்டைத தமிழ் மககளின வாழககை இயலபுகளை உணாதற்கு இந நூல பெருநதுணை புரியும்.

## 5. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்):

நன்னன சேய நனனனைப பெருங்குன்றூரப பெருங்கௌசிகனாா பாடியது, 583 அடிகளையுடையது நனனனிடம் பரிசில பெற்ற கூததன ஒருவன, வறுமையால துனபுறற கூததன் ஒருவனை நனனனிடம் ஆறறுபபடுததுவதாக அமைந்தது இப பாடடில 'மலைபடுகடாம' எனனும் தொடா வருகின்றது. இத தொடரால இப பாடடு மலைபடுகடாம எனனும் பெயா பெறறது. மலையை யானையாகவும், அதனிடததுத் தோனறும

பலவகை ஓசையை யானையின் முழக்கமாகவும் கூறுதலால, மலைபடுகடாம் ஆயிற்று. பத்துபபாட்டில் மதுரைக் காஞ்சிக்கு அடுத்த பெரிய பாட்டு இதுவே. செய்திகளை முதலில தொகுத்துக் கூறிப் பின்னா விரிதது்க் கூறும் இலக்கிய முறை இந நூலின் தனிச்சிறபபாகும்.

நனனனுககு உரியது நவிரமலை, அம் மலையருவியில் வானர மகளிா நீராடுதலால எழும் இன்னிசை, திணைக்கதிரை உண்ணும் ஆண் யானையைப் பிடிததற்குக கானவர் செய்யும் பூசல, காடடாற்றின் சுழியில் அகப்பட்ட யானையைப் பிடிதது வநது பழக்கும் பாகரின் ஆரவாரம், தூல் கொண்ட பெண யானைககு உணவு கொடுத்துச் செல்லும் ஆண்யானையின் மீது புலி பாய, அதனால பெண் யானை இடிபோல முழங்கும ஓசை, திணைபபுனததில கிளியை ஓடடுவதால எழுமபும் ஒலி, திணையைக குற்றும் மகளிா பாடும் வளளைப பாடடின் இசை, களளுண்டு களித்த கானவர் தம் பெண்டிரோடு சோந்து ஆடும் குரவைக் கூததின் ஆரவாரம் முதலிய இருபதுவகை ஓசைகளை இபபாடடில கேட்கின்றோம்.

இவ வோசைகள மலையின் வளததினை – அங்கு வாழும் மககளின் மன நலததினை – எடுததியம்புகினறன. இப் பாடடினைப போல மலைவளம் கூறும் பாடடு வேறு இலலை

பரிசில பெற்ற பாணாகள மலையிலிருநது இறங்கி வருகின்றனர். அவாகள தொடர்நது இறஙகி வருவது அருவி போலக காட்சியளிக்கின்றது; அவரைப பூககள் அஙகஙகே சிதறிக கிடப்பது, தயிரைத தெளிததது போல் தோனறுகின்றது, வழியில பெருங்கற்கள் காணபபடுவது, எருமைகள் படுததிருபபதுபோல அமைநதுள்ளது எனக கூறும உவமைகள நயம் மிக்கன

கூததரைப பறறிய பாடடாதலால் இசைக் கருவிகள் பலவறறை – நெடுவஙகியம், மத்தளம், தூம்பு, சிறுபறை, யாழ் முதலியவற்றைப் – பாாககினறோம்

## 6. மதுரைக் காஞ்சி

தலையாலங்கானததுச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாஙகுடி மருதனாா பாடியது, 782 அடிகளையுடையது; பததுப் பாடடில மிகப பெரியது, காபபியததிறகு வேணடும அடிபபடை அமைபபுககள் பலவறறைக் கொண்டது, சிறுகாப்பியமாக மதிககததககது, நிலையாமையை உணாததும் காஞ்சித திணைககுச் சிறநத இலக்கியமாகத திகழ்வது; ‘பெருகு வளமதுரைக் காஞ்சி’ எனறு பாராடடபபடுவது; ‘கூடறறமிழ’ என வேறு பெயராலும் வழங்கபபடுவது, மதுரையைப பறறிய பலவேறு செயதிகளையும் கூறுவதால் மதுரையின் வரலாறறு நூலாக விளங்குவது.

பாண்டிய நாட்டில் ஐவகை நிலங்களும் வளமாக அமைந்துள்ளன; வைகையாறு நாட்டின் செழிப்புக்கு உறுதுணையாக ஓடுகின்றது; கொற்கைக் கடலில் முத்துக் குளிக்கின்றனா; வெளிநாட்டு வாணிகம நன்கு நடைபெறுகின்றது. இத்தகைய புகழ்மிக்க பாண்டிய நாட்டின் தலைநகராக மதுரை மிளிர்கின்றது. மதுரைத் தெருக்கள ஆறு இடையே கிடந்தாற்போல அகன்று விளங்கின. நாளங்காடி, அல்லங்காடி என இருவகைக் கடைத்தெருக்கள இருந்தன. பலவேறு சமயத்தவரும் சமயப பூசல இன்றி வாழ்ந்தனா். சைவக் கோயில்கள், சமணப் பளளிகள், பௌத்தப் பள்ளிகள் பரந்திருந்தன. திருபபரங்குன்ற விழா, திருவோண விழா, மன்னன் பிறந்த நாள விழா, அந்தி விழா முதலிய விழாக்கள் நடைபெற்றன. இவவாறு மதுரையின் பெருமையை மனம் நிறையப் பாராட்டுகின்றாா மருதனாா.

இப பாண்டி நாடு, புகழ் நிறைந்த பாண்டியர்களால ஆளபபடும் பெருமைமிக்கது. அப் பாண்டியர் வழித் தோன்றலே நெடுஞ்செழியன். இவன் சிறந்த கல்வியாளன், அறிஞன்; வீரன்.

"முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்"

விளங்கினான். இவனுக்கு மாங்குடி மருதனார் உலக நிலையாமை, உடலநிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய மூனறையும் எடுத்துரைக்க விரும்பினாா் இதன் விளைவே மதுரைக் காஞ்சி. இந நூல, நிலையாமைகளை எடுத்துக் கூறுவதாக இருந்தாலும், பிற்கால நூலகளைபபோல நிலையாமைகளைக கூறி அவனைத துறவியாக ஆக்கும போக்கில பாடப்படவிலலை உலக வாழ்வில வாழ்ந்து கொண்டே இன்பம் துயத்து, நிலையாமைகளை உணாந்து, நிலைதத புகழ பெற வேண்டும என்று வற்புறுத்துகின்றது.

## அகப்பொருள் நூல்கள்

### 1. முல்லைப் பாட்டு

காவிரிப் பூம்பட்டினத்துப பொன் வாணிகனாா மகனாா நபபூதனாரால் பாடபபெற்றது; 103 அடிகளை உடையது; பத்துப பாட்டில அளவால் சிறியது இப் பாட்டே.

போா செய்வதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிநதான். தலைவி பொறுததிருந்தாள். அவன் சொல்லிச சென்ற கார்காலம் வந்தது, அவன் திரும்பவிலலை. தலைவி, நெஞ்சம் கலங்கினாள், இதனைக் கண்ட

பெருமுதுபெண்டிர், நெல்லும் மலரும் தூவித் தெய்வத்தை வழிபட்டனர்; நற்சொல கேட்டு நின்றனர்; அப்போது, ஒரு வீட்டில தாய்ப் பசுக்களைக் காணாமல் கதறும் கன்றுகளைப் பாாத்து, 'வருந்த வேண்டா; உங்கள் தாய்மாா விரைந்து வருவார்கள்' என்று ஒருத்தி கூறினாள். இதனைக் கேட்ட பெருமுது பெண்டிர், தலைவியிடம் வந்தனா; "உன் தலைவன் வந்துவிடு வான்" என்று உரைத்தனர் தலைவி பெருமூச்சு விட்டாள். இந்நிலையில் அவள் மகிழுமாறு தலைவன் வரும் தேரில் பூட்டபபட்ட குதிரைகளின் ஆரவாரம் கேட்டது. இதுவே இபபாட்டில் அமைந்த செய்தி.

இப் பாட்டு, சிறுகதை போல அமைநதுள்ளது. முடிவு, வியக்கத்தக்க முறையில் சிறுகதை போலவே முடிகின்றது. முல்லைத் திணையை விளக்குவதில் இப் பாட்டு இணையற்றுத் திகழ்கின்றது.

## 2. குறிஞ்சிப் பாட்டு

கபிலரால் பாடபபட்டது; 261 அடிகளையுடையது; 'பெருங்குறிஞ்சி' என்று சிறபபாகப் பாராட்டப்படுவது.

ஆரிய அரசன் பிரகத்தன், தமிழ்ச் சுவையை அறிய விரும்பினான். கபிலா அவனுக்கு அதனைக கூற முறபட்டார் தமிழ் இலக்கியத்தில சுவையும், பண்பாடும், நாகரிகமும் மிக்கது அகப்பொருளே. அதிலும் களவு ஒழுக்கமே உயர்ந்தது. ஆதலால அவனுக்கு அக்களவு ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்துரைக்க இப்பாடலைப பாடினாா.

தலைவி, தன் தோழியருடன் தினைப்புனம் காக்கச் சென்றாள். அப்போது அங்கே தலைவன் வந்தான். அவனின் வேட்டை நாய்களைக் கண்டு அவள் அஞ்சினாள். அவன அவளது அச்சத்தைப் போக்கினான். இந் நிலையில் மதம் கொண்ட யானை வந்தது; நடுங்கினாள; நடுக்கம் தீாத்தான். தலைவி நீராடப புகுந்தாள்; கால தளர்ந்து வெள்ளத்தில் சென்றாள்; தலைவன் காப்பாற்றினான். காதல வளாநதது. திருமணம் நிகழ்வதில காலம் தாழ்நதமையால் தலைவி மெலிந்தாள். தலைவியின் காதல நோயை அவளின் உற்றாா உணரவில்லை இந் நிலையில தோழி, தலைவியின் காதலைச் செவிலித தாய்க்கு நாகரிகமாக எடுத்துரைத்தாள். இதுவே இப் பாடலின பொருள்.

இபபாடடில குறிஞ்சித்திணை, மிக அழகாகப் புனையப்பட்டுள்ளது. 'குறிஞ்சிக்குக் கபிலன்' என்பது உண்மையே என்பதை இபபாடல் நிறுவுகினறது.

## 3, பட்டினப்பாலை

பெரும்பாணாற்றுப் படையைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ண னாரால் பாடப்பெற்றது; 301 அடிகளைக் கொண்டது. பாலைத்திணையைப் பற்றியது; வஞ்சிநெடும் பாட்டு என்றும் வழங்கப் பெறுவது.

தலைவன் ஒருவன், பொருள தேடுதற்காக வேற்றுநாடு செல்ல எண்ணினான்; தலைவியையும் நினைத்தான்; தன் நெஞ்சத்தை நோக்கிப் பின்வருமாறு கூறினான்; "நெஞ்சமே! என் தலைவியின் தோள்கள், கரிகால் வளவனின் செங்கோலைக் காட்டிலும் குளிர்ச்சியுடையன. பொருள் தேடச்செல்லும் காட்டு வழியோ கரிகாலன் பகைவர்மேல செலுத்தும் வேலைக் காட்டிலும் வெப்பம் மிக்கது. ஆதலால், சிறபபுக்கள் பலபெற்ற காவிரிப்பூம் பட்டினத்தையே பெறுவதாக இருந்தாலும், என் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன்."

இவ்வாறு அகப்பொருள் பறறிக் கூறும் பாட்டாக இஃது இருந்தாலும், இவ் அகப்பொருள் செய்தி, ஆறுவரிகளில் முடிந்துவிடுகின்றது ஏனைய வரிகள் எல்லாம், கரிகாற் பெருவளத்தானின் புகழ் கூறுவன; அவனுடைய தலைநகரமாம் காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்புரைப்பன.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூட்டையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

என்பது, படடினததின் கடைத் தெருவளம்.

# அகமும் புறமும்

## நெடுநல்வாடை:

தலையாலங்கானத்துச் செருவெனற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றி நக்கீரனார் பாடியது; 188 அடிகளையுடையது. இதனை அகப்பாடடு என்பர் சிலர்; புறபபாட்டு என்பர் வேறு சிலர். அகமும் புறமும் கலநதது என்பர் பலா. பாலை என்னும் அகத்திணையும், வாகை என்னும் புறத்திணையும் இதில் அமைந்துள்ளன.

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு வாடைக்காலத்தின் ஒரு பொழுது, ஓர் ஊழிக்காலம் போல நெடிதாகத் தோன்றியது. ஆதலால் அவளுக்கு அவ் வாடை, நெடுவாடை ஆயிற்று. பிரிந்த தலைவனுக்கு வெற்றிபெறக் காரணமாக அவ் வாடை அமைந்தது. எனவே, அவனுக்கு நல்வாடை ஆயிற்று. இவ்வாறு இருவருக்கும் இருவேறு வகையில் வாடை அமைந்தமை தோன்ற, இப் பாடல், நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது.

பாண்டியன் நெடுஞ்செழியன் போர் கருதிப் பிரிந்தான். அவன் மனைவி, அரண்மனையில் பிரிவுத் துயரால் வாடினாள்; வாடையும் வருத்தியது. அப்போது அரண்மனைப் பெண்கள் அரசன் பகை வென்று விரைவில் வரவேண்டும் என்று கொற்றவையை வழிபட்டனர். அதுவே இப் பாடல் கூறும் பொருள். இதில் குளிர்காலத்தின் கொடுமை நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

**"மாமேயல் மறப்ப மந்தி கூரப்**
**பறவை படிவன வீழக் கறவை**
**கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்**
**குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்."**

இந் நூல் இலக்கிய நயத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றது.

எட்டுத் தொகையைக் காட்டிலும் பத்துப் பாட்டில் சிறிது வளர்ச்சியைக் காணலாம் கருத்துக்களைச் சொல்ல அமைத்துக் கொள்ளும் பின்னணி, கற்பனை, மதுரை, காவிரிப் பூம்பட்டினம் ஆகிய மாநகரங்களை வருணிக்கும் திறம், இன்னோரன்னவற்றில் பத்துப்பாட்டு சிறந்து விளங்குகின்றது.

# 5. சங்க இலக்கியச் சிறப்புக்கள்

நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணமாகவும் கற்பாகவும் காமக் கூறுகளைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழிலதான் உண்டு.

— டாக்டர் வ.சுப. மாணிக்கம்.

சங்கப்பூங்காவில எண்ணற்ற இலக்கிய மலாகள் பூத்தன. அவற்றுள் 2430 மலாகளைத் தேர்ந்தெடுத்து ஒன்பது மாலைகளாக அறிஞர்கள் தொடுத்தனா. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுபபத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு என்பன. இவை ஒன்பதையும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இரு பெரும் பிரிவில அடக்குவர். இம் மலாகளை அளித்த கவிஞாகள், முப்பதுக்குக் குறையாத பெண்கவிஞர்கள் உட்பட ஏறத்தாழ ஐந்நூற்றுவா. இவர்களுள் ஒரு

மலர் அளித்தவர் பலர்; நூற்றுக்கு மேற்பட்ட மலாகள் அளித்தவர் ஐவர். இவாகள தந்த மலாகள, கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பூத்துக் குலுங்கின. இக் காலத்தைப பொற்காலம் என்பர்.

**பொற்காலம்:** ஆங்கில இலக்கியத்தில எலிசபெத் காலத்தையும், இந்திய நாடடில் சநதிர குபத மன்னனின் காலத்தையும் பொற்காலம் என்று குறிப்பிடுவா ஒரு காலத்தைப் பொற்காலம் எனக் கூறுதறகு அக்கால இலக்கியம், இலக்கிய ஆசிரியாகள், சமுதாயம் ஆகிய மூன்றையும் அளவு கோலாகக கொள்வோம் இவ அளவு கோலை வைத்துப பாாததால் சஙக காலம பொற்காலமாகத திகழ்கின்றது அக்கால இலக்கியம் பொற்கால இலக்கியமாகப பூததுக் குலுங்குகினறது.

**சங்க இலக்கியம்:** சங்க இலக்கியப் பாடலகள் அனைததும் தனித தனிப் பாடல்களே. அவை 3 அடி முதல 782 அடிவரை அமைநதுள்ளன. இபபாடல களின் சிறப்புக்கள் எணணறறன. அவற்றுள் தாய்மை, தூய்மை, செம்மை, சீர்மை, புலமை, கொள்கை என்பன குறிப்பிடத் தக்கன.

**தாய்மை:** சங்க இலக்கியங்களுககுப் பின்னா அறநூல்கள, பக்திப் பனுவலகள், பேரிலக்கியஙகள், சிறறிலக்கியங்கள் பல தோன்றின. அவை அனைத்தும சங்க இலககியங்களைப் பின்பறறியும் தழுவியும் அமைந்தன. பரணா, ஓா அரசனைப் பாாத்து, 'தாயற்ற குழநதை போல உன் பகைவரின் நாடு துன்பப பட்டும்' என்று பாடுகின்றாா. இந்த அரிய உவமையைக் கண்ட திருத்தக்கதேவா, அதனைத தாம் இயற்றிய சீவக சிநதாமணியில "தாயிலாக் குழவிபோலச சாதுயா எய்துகின்றேன்" என்று எடுத்தாளுகின்றனர். இவ் வாறு சங்க இலக்கிய உவமை, கறபனை, கருததுவளம் முதலியன பிற் காலததுத தோனறிய புலவாகளுக்குத தாய்மையாக அமைநதன. மேலும் அநதாதி, தூது, பரணி, பிளளைததமிழ் போனற சிறறிலக்கியங்களுககுச சஙக இலககியங்களில காணப்படும் இலக்கியக கூறுகளே தாய்மை எனறு கூறினால் அது மிகையாகாது. இநதிய இலக்கியததின் தலைமையூற்றே சங்க இலக்கியம் என்பார் பன்மொழிப் புலவா கா. அபபாதுரை அவாகள்.

**தூய்மை:** சங்க இலக்கியங்களில மொழித தூய்மை, நடைத தூய்மை, கருததுத் தூயமை ஆகிய மூன்றும் மறுவிலலாமல திகழ்கின்றன. மொழித் தூய்மையைப பொறுதத அளவில, தமிழின தனித்தன்மை, மிகச் செம்மையாகக் காப்பாற்றபபட்டுள்ளது. வட மொழிச் சொற்கள் மிக மிகக் குறைவாகவே காணபபடுகினறன

**"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"**

என ஔவையும்,

"வாணிகப் பரிசிலன் அல்லேன்"

எனப் பெருஞ்சித்திரனாரும் பாடியிருப்பவை, நடைத் தூய்மையை விளக்கும் நல்வரிகள்.

சங்க காலத்திலேயே வடமொழியும், புத்தமும், சமணமும் தமிழ்நாட்டு வரலாற்றில் வரவுக் கணக்கில் இடம் பெற்றன. ஆயினும் பிற்காலப புலவாகள், இவற்றில ஈடுபட்டு இவறறை மதித்துப போற்றியதைப போலச் சங்கப் புலவாகள் போறறவிலலை. மிகக் குறைவான இடங்களிலேயே வடமொழிக் கருத்துக்களை இலைமறை காயாகக் கூறினா. அதனால், தமிழ்க் கருத்துக்கள், தூய்மையாக – அயல கலப்பின்றி விளங்குகின்றன

**செம்மை:** ஒழுங்குபட்ட வரையறையைச் செம்மை என்று கூறலாம். சஙக இலக்கியப் பாக்களில் 1. உருவ அமைபபிலும், 2. பொருட் செறிவிலும், 3. மரபுத் திறத்திலும் இச செம்மையைக காண்கின்றோம். இதனால சங்க இலககியப் பாடலகள், உயாநத கவிதைக்கு எடுத்துக்காடடாகத திகழகின்றன.

**1. உருவ அமைப்பு:** சஙக இலககியப பாடலகள ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல என்னும் நாலவகை யாப்பினால் இயனறவை. எனினும் ஆசிரியப்பாவே தலைமை கொளகின்றது ஆசிரியப்பா, இயலபான ஓசை உடையது. எக்கருத்தையும் முட்டுப்பாடிலலாமல் கூறுவதற்கு ஏற்றமுறையில வளைநது கொடுபபது; ஈரசைச் சொற்கள் மிகுதியாக உள்ள தமிழ்மொழிக்கு ஏறப ஈரசைச் சொறகளாலேயே அமையும் இயல்பு கொணடது. எனவே இபபாவினை மிக அதிகமாக – அழகிய முறையில சங்கக் கவிஞாகள கையாணடனா. பொதுவாகவே சஙக இலககியங்களில் இந் நாலவகைப பாக்களும் செம்மையாக அமைநதுளளன. "கவிதையின் உயாவுக்கு உருவச் செம்மை இன்றியமையாதது" என்ற ஆய்வாளாகளின் கருத்துக்குச சங்கப பாடல்கள் தகக சான்றுகள் எனலாம். அரங்கு இழைத்து வட்டாடுதலில அழகிலலாமல இருகக முடியுமா?

**2. பொருட் செறிவு:** சங்க இலக்கியம் கூறும் பொருளை அகம், புறம் எனப் பிரிபபர். காதல் முதலிய குடும்ப வாழ்வினைப பறறியது அகம். போா முதலிய புற வாழ்வினைச – சமுதாய வாழ்வினைப பறறியது புறம். இவ்விரண்டினையும் பாடுதற்குச் சில வரையறைகளை மேறகொணடனா. அவை:– திணை, கூற்று, துறை என்பன. இப பகுபபின் கட்டுப்பாடான வரையறையின் அடிப்படையில புலவாகள் பலரும் நுடபமும விளக்கமும சுவையும் ததும்பப பாடினாாகள். இக் கட்டுபபாடுகள், பொருட்செறிவினைத் தடை செய்யவில்லை. ஆற்று நீரை ஒழுங்குபடுத்தும் கரைகள் போல அழகு செய்தன.

புறப்பொருள்பற்றிய பாடல்களைக் காட்டிலும் அகப்பொருள் பற்றிய பாடல்களைப் பாட வரையறைகள் மிகுதியாக இருந்தன. இதற்குக் காரணம், காதல் பாட்டை உள்ளத்தின் நாகரிகப் பாட்டாகக் கருதியமையே ஆகும். அதனைப் பாடுவதைக் கத்தி முனையில் நடப்பதைப் போலக் கருதி அத்துணைக் கூர்த்த அறிவுடன் பாடினர். அகப் பாடல்களில் பெரும்பாலன, ஓரங்க நாடக அமைப்பினவாய் ஒளிவிடுகின்றன.

**3. மரபுத் திறம்:** மரபு என்பது, அறிவுடைப் பெருமக்களும் பொதுமக்களும் ஒப்பிய நெறி ஆகும். இம் மரபினை ஒட்டியே செல்ல வேண்டும் எனச் சங்கப் புலவர்கள் எண்ணினா. இவவாறு அவர்கள் எல்லாரும் ஒரே மரபினை உறுதியாகப் பின்பற்றிப் பாடினாலும், அவாகளின் பாடலகள் ஒரே அச்சில் வாாத்தன போல அமையாமல், புலமைத் திறத்தால வெவ்வேறு சுவைகளை அளிக்கும தீங்கவிதைகளாக மலாந்தன. மரபு பிறழாமல் – அதே சமயத்தில மனத்தை ஈாக்கவும் கூடிய பாடலகளைச் சங்க இலக்கியத்தில் அன்றி வேறு எங்கும் காணுதல இயலாது.

சஙகப் பாடலகளில தலைவனின் பெயரையோ, தலைவியின் பெயரையோ, தோழியின் பெயரையோ குறிப்பிடும் வழக்கம் இல்லை. இதனால், அப் பாடலகளைப படிப்பவாகளுக்குப் பாத்திரங்கள் யார் என்ற ஆராய்ச்சி ஏற்படாமல, பாத்திரங்களின் குணம்பற்றிய நினைவே தோனறும். இத்தகைய பெயா சுட்டா மரபு, சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்புக்களுள் ஒன்று.

**சீர்மை:** மககள் வாழ்க்கையை அழகாகப பாடிய பாக்களே சங்கப் பாக்கள். இப்பாக்களில காணபபடும் வாழ்க்கையழகினை, வேறு எங்கும் பாாக்க முடியாது. இததகைய அழகினை இவாகள் பாடும்போது அழகினுக்கு அழகு சோபபதற்காக 1. இயற்கைச் சூழல, 2 உவமை, 3. உணாச்சி, 4. கற்பனை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர்

**1. இயற்கைச் சூழல்:** இயற்கையை இயற்கையாகவே பாடும் பாங்கினைப் பிறமொழிப பாடலகளில் காண்கின்றோம். ஆனால், சங்கப புலவர்கள் இயற்கையை வாழ்க்கைக்காகப பாடினாார்கள், பின்னணியாக அமைத்துக் கொணடாாகள். இதற்குக காரணம், இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாகள் தமிழச் சாதியினா என்பதே. எனவேதான, அவாகளின் வாழ்வுப் பட்டியலில இயற்கை முதலிடம் பெற்றது இயற்கையும் வாழ்வும் பின்னிய இலக்கிய ஓவியஙகள், சங்கப பாடல்களில பல உள்ளன.

**2. உவமை:** கருததை மனம் கொளள விளக்குவதறகு வாய்ந்த ஒன்றே உவமை. இவ்வுவமை, சங்கப் புலவாகளால தனியழகு பெற்றிருக்கின்றது.

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய்."

துன்பத்திற்குக் கூறிய இவ் வுவமை, நினைக்க நினைக்க இன்பம் பயக்கின்றது. உவமைகளை இவ்வாறு வெளிப்படையாகச் சொல்வதுடன், குறிப்பாகவும் சில உவமைகள கூறினர். அவை உள்ளுறை, இறைச்சி எனப் படும் இவ் உவமைகளின் வாயிலாகக் காதல் நுட்பங்களை — வெளிபபடை யாகக் கூற முடியாத செய்திகளைச் சுட்டினர். இத்தகைய நுட்ப உவமைகளைக் கூறுவதறகு இயற்கைச் சூழ்நிலையையே அடிப்படையாகக் கொண்டனா.

**3. உணர்ச்சி:** உணாச்சியை — உருவமற்றதைப் பாட்டில் ஓவியமாக்குதல் என்பது எளிய செயலன்று. அந்தச் செயலில சங்கப் புலவர்கள் பெருவெற்றி பெற்றிருக்கின்றார்கள். வள்ளல அதியமான் இறந்துவிட்டான். அவனால் அன்பு செலுத்தப பெற்ற ஔவையார் இச்செய்தியறிந்து துடித்தார்; துன்பத்தின் எலலை கண்டாா. "சிறிய கள் பெறினே எமக்கீயு மன்னே" என்னும் பாடலைப் பாடினார். இப்பாட்டையொத்த சோகப்பாட்டு, உணர்ச்சிப் பாட்டு ஒன்றிருக்க முடியாது. இவ்வாறே அன்பு, நட்பு, பிரிவு, பகை முதலான உணாச்சிகளைச் சங்கப புலவர்கள் அழகாக வடித்திருக்கிறார்கள்.

**4. கற்பனை:** சஙக இலக்கியம் வழங்கும் கற்பனைநெறி, உலக இலக்கியம் ஏற்கவேண்டிய கற்பனை நெறி என்று கூறலாம். அறிவுக்கு அப்பாற்பட்ட — இயலபு கடந்த கற்பனைகளைச் சங்கப் புலவர்கள் பாட வில்லை. நம்பத் தக்கதும் நடக்கக்கூடியதுமான செய்திகளையே கற்பனை யாக்கினர். இவர்களின் கற்பனை, நனவுலகுக் கற்பனை; கனவுலகுக் கற்பனை அன்று. கபிலரைப் பாராட்டும்போது 'கனவிற் பாடாது நனவிற் பாடும் கபிலர்' என்பா.

**5. புலமை:** உலக நிகழ்ச்சிகளை உண்மை தவறாமல் கூறுவது உலக வழக்கு. பலவேறு இடங்களில நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைப்பது நாடக வழக்கு. இந்த இரண்டும் கலநதது புலனெறி வழக்கு. இபபுலனெறி வழக்கத்தைச் சங்கப் புலவர்கள் மேறகொண்டனர். இதனால் சங்க இலக்கியங்களில் உண்மை வாழ்வையும் உயர் வாழ்வையும் காணலாம். இச்சிறப்பு, சங்க இலக்கியத்திற்கே உரியது. இதனால் சங்கப் புலவர்களிடம் 'புலமைப் பொதுமை' இருந்தது; எழுத்துலக ஆக்கத்தில், உயாந்த படைபபுக்களைத் தரும் 'கூட்டு முயற்சி' குடிகொண்டது.

**6. கொள்கை:** சங்க இலக்கியப் புலவாகள், உயர்ந்த குறிக்கோள் உடையவர்கள்; மனித சமுதாயம் உயர்நிலை அடைய வேண்டும் என்ற விருப்பம் கொணடவாகள்.

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்**
**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே"**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

என்பன போன்ற உயா கொள்கைகள, சங்கப் பாடலகளில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

சங்கப பாடலகள் தமிழுக்குக் கிடைத்த செல்வப் பாடல்கள்.

"ஏறத்தாழ 30,000 வரிகளைக் கொண்ட சங்க இலக்கிய மரபுகள் – பழக்க வழக்கங்கள் உலகம் எங்கணும் உள்ள இலக்கிய மாணவர்களை ஈாக்கும் தன்மை வாய்நதவை. உலக இலக்கியங்களில சிறந்த ஒன்றாகச் சங்க இலக்கியத்தைக் காட்டுதல இயலும்."

**— க.நா. சுப்பிரமணியம்**

# 6. பதினெண் கீழ்க்கணக்கு

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் 'பதினெண் மேற் கணக்கு' என்று கூறப்படும் இவற்றிற்குப் பின், சங்கம் மருவிய காலத்தில தோன்றிய பதினெடடு நூலகள, 'பதினெண் கீழ்க்கணக்கு' என்னும் பெயா பெற்றன.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:** 1. நாலடியாா, 2. நான் மணிககடிகை, 3 இனனா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. காா நாற்பது, 6. களவழி நாறபது, 7 ஐநதிணை ஐம்பது, 8. திணைமொழி ஐம்பது, 9. ஐந திணை எழுபது, 10 திணைமாலை நூற்றைமபது, 11 திருக்குறள், 12. திரி கடுகம், 12. ஆசாரக்கோவை, 14 பழமொழி நானூறு, 15 சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக் காஞ்சி, 17. ஏலாதி, 18 கைநநிலை என்பன. இவை பதினெட்டையும் குறிக்கும வெண்பா ஒன்று உள்ளது.

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

இப பதினெட்டு நூலகளில் பதினொரு நூல்கள் அற நூல்கள்; ஆறு நூல்கள் அகப்பொருள் பற்றியன; ஒரு நூல் புறப்பொருளுக்கு உரியது. இந நூலகள அனைத்தும், வெண்பா யாப்பில அமைநதன. இக்காலத்தில வெண் பாவின ஆடசி, இலக்கிய உலகில செலவாக்குப பெற்றிருநதது போலும். வரையறுத்த அறக்கருத்துக்களைக் கூறுவதற்கு, வரையறை மிகுதியும் உடைய வெண்பாவினைப் புலவாகள் பயனபடுத்தியது மிகப்பொருத்தமே.

## அற நூல்கள்

தமிழ்ப் புலவர்கள், காதலையும, வீரத்தையும் இரு கண்களாகக் கருதினார்கள்; அறததை உயிராக மதித்தாகள். எனவே அவர்கள், அறநெறி நிலலாக் காதலையும வீரத்தையும் எதிாத்தார்கள். சங்கப் புலவர்கள், தாம் பாடிய பாடலகளில அறக் கருததுக்களை வாய்ப்பு நேரும் போதெலலாம் வலியுறுத்தினாாகள். இவர்களுக்குபபின், இக் கருத்துக்களை விளக்கவே தனி அறநூலகள தோன்றின இவை வாழ்வு நூலகளாகப் போறறப் பெற்றன; போறறப் பெறுகின்றன.

### 1. திருக்குறள்

உலக இலககிய அரஙகில் தமிழனின் பெருமையை நிலைநாட்டும் உயர்வுடையது இந் நூல. இதனை உலகப பொதுமறை என்றே அறிஞர்கள் குறித்தனா; "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தநது வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று தேசீய கவி பாரதியாா, உலகுக்கு உரிய நூலாகப் பாராட்டி னாா. உலக மொழிகள பலவற்றிலும இந் நூல மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மொழி, இனம், சமயம், நாடு கடந்த இந்நூலின் பெருமை, காலம பல கடந்தும் வளாபிறை போல் வளாந்து வருகின்றது.

திருக்குறள், ஏழு சீாகளைக் கொண்ட 'குறள்' என்னும் யாப்பில் அமைந்துள்ளது. இந்த யாபபில் பாடுவது மிகக் கடினம். வள்ளுவரோ, இவ் அரிய செயலில ஈடுபட்டு வெற்றிக்கொடி நாட்டியுள்ளார் மேலும், உயாந்த கருத்துககளைக் குறுகிய பாவில் கூறும் இவர், கவிதைநயம் பெறக் கூறியிருத்தல வியநது போற்றுதற்கு உரியது.

திருக்குறள் அறத்துப்பால, பொருட்பால, காமத்துப்பால் எனற மூன்று பெரும பிரிவுகளை உடையது. அறத்துப்பாலில தனிமனித அறத்தையும்,

பொருட்பாலில் சமுதாய அறத்தினையும், காமத்துப்பாலில் இன்ப நலத்தையும் எடுத்துரைக்கின்றார்.

மனததுககண் மாசு இல்லாமல இருப்பதே அறம்; உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதே வாழ்க்கை; ஊடியும் கூடியும் மகிழ்ச்சி பெறுவதே இன்பம் என்பன வள்ளுவரின் உயிர்க்கொள்கைகள். இக் கொள்கைகளையே 1330 பாடலகளில் விளக்குகின்றாா. இவ்வாறு விளக்கும்போது கூட ஏனைய அறநூலகளைப் போலக் கடுமையாக அறக்கோட்பாடுகளைக் கூறாமல, நடைமுறைக்கு ஏற்ற வகையில் இனிமையாகக் கூறுகின்றார். இது வளளுவரின் சிறப்பு.

வள்ளுவருக்கு முன்னால் புலால் உண்ணல், கள் குடித்தல், பரத்தையுரை விரும்பல் என்பன சமுதாய ஒழுக்கங்களாகவே இருந்தன. அறம் பாட வநத வள்ளுவர் இவற்றைக் கண்டாா; இவைகளை நீக்கினால் ஒழியச சமுதாயம் உயராது என நினைத்தாா. இம் மூன்றும் கூடாதன எனப் பாடினாா. இததகைய சமுதாயப் புரட்சியைச் செய்த மூலவர் இவரே.

திருககுறள் கருத்துககள், தமிழ இலக்கியங்கள் எலலாவற்றிலும் ஊடுருவி நிற்கின்றன, அவை மககளின் வாழ்க்கைக்கு வழிகாட்டியுாய் விளங்குகின்றன இவ் வகையில இது மக்களின 'உயிர் நூலாய்'த் திகழ்கின்றது.

## 2. நாலடியார்

இது சமண முனிவாகளால பாடபபட்ட தொகை நூல்; நானூறு வெணபாககளைக் கொணடது. இதனைத் திருக்குறளோடு ஒப்பவைத்துப் பாராட்டுவா. "நாலும் இரணடும் சொலலுக்கு உறுதி," "பழகு தமிழ்ச் சொலலருமை நாலிரணடில" *என்பன அப் பாராட்டுரைகள். ஆயினும்* திருககுறளைப போல இந நூல அறஙகளை இனிமையாகக் கூறவிலலை. கடுமையாகவே கூறுகின்றது மேலும் நிலையாமைகளை நாலடியார் மிகுதியாக வற்புறுத்துகின்றது.

*திருககுறளைபபோல நாலடியாரிலும் அறததுப்பால, பொருட்பால,* காமததுபபால எனற மூன்று பகுப்புக்கள் உள்ளன. கருத்துக்களைக் கூறுவதிலும நாலடியாா, திருககுறளை அடியொற்றிச செலகின்றது.

நாலடியாரில் காணபபடும உவமைகள் புதுமை வாய்ந்தன. புலவர், *பேதையரைப பாாக்கின்றாா அவாகள்,* தம்மைத்தாமே அழித்துக்கொள்வதையும் நினக்கினறாா, அவாகளுக்கு உவமையாக, உலை நீரின் மேல விளையாடும் ஆமையைக் கூறுகின்றார். இத்தகைய உவமைகள பல காணபபடுகினறன. நகைசசுவை ததுமபும் பாடலகளும் நாலடியாரில் உளளன. செல்வன ஒருவன் *விலைமகளை விரும்பினான். அவள்,* "நம்

அன்புக்கு இடையூறு ஏற்பட்டால் நான் மலையின் உச்சியில ஏறிக் கீழே விழுந்து உயிா விடுவேன், "என்று உறுதி கூறினாள். அவன் நம்பினான். இந்நிலையில் அவன் வறுமையில் உழன்றான். அப்போது அவள், "ஐயோ, எனக்குக் காலில் நோய் வந்து விட்டதே! மலைமீது ஏறிக் கூட உயிர் விட முடியாதே," எனறு கூறி அவனை நீங்கினாளாம். எவ்வளவு நகைச்சுவை!

**"அங்கோட்டு அகலல்குல் ஆய்இழையாள் நம்மொடு**
**செங்கோடு பாய்துமே என்றாள்மன் – செங்கோட்டின்**
**மேல்காணம் இன்மையால் மேவாது ஒழிந்தாளே**
**கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து"**

## 3. நான்மணிக் கடிகை

விளம்பி நாகனார் என்பவரால் பாடப்பெற்றது; 101 பாடல்கள் கொண் டது. ஒவவொரு பாடலிலும் நான்கு நான்கு கருத்துக்கள் கூறபபட்டுள்ளன. அதனால இந நூல இப் பெயர் பெற்றது.

**"நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்;**
**குளத்துக்கு அணியென்ப தாமரை; பெண்மை**
**நலத்துக்கு அணியென்ப நாணம்; தனக்கு அணியாம்**
**தான்செல் உலகத்து அறம்."**

இப் பாடலில ஒருவனுக்குச் சிறப்பு 'அறம்' என்பதனை வலியுறுத்தி யுள்ளாா. இதற்குத துணையாக நிலத்துக்கு, குளத்துக்கு, பெண்மைக்குச் சிறப்புத் தருவன யாவை என்றும் கூறியுள்ளார்.

## 4. இன்னா நாற்பது

கபிலரால பாடபபட்டது; 41 வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலிலும் துன்பம் தருவன நான்கினைக் கூறியுள்ளாா இந நூலில 164 துன்பங்களை எடுததுரைககின்றார்.

**"கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா;**
**நெடுநீர் புணைஇன்றி நீந்துதல் இன்னா;**
**கடுமொழி யாளர் தொடர்புஇன்னா; இன்னா**
**தடுமாறி வாழ்தல் உயிர்க்கு"**

என்பது துன்பங்கள் நான்கு கூறும் ஒரு பாட்டு.

## 5. இனியவை நாற்பது

பூதஞ்சேந்தனாரால் பாடப்பட்டது. 40 வெண்பாக்களையுடையது. நான்கு பாடலகளில் மட்டும இனபம் தருவன நானகினைக் கூறியுள்ளார். ஏனைய பாடல்கள் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று இன்பங்களே

கூறியுள்ளாா. இந் நூலில மொததம் 127 இன்பங்களை எடுத்துரைக்கின்றார். இன்பங்களில சில:

"குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே"

"மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே"

"நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிதே"

"கற்றுஅறிந்தார் கூறும் கருமப் பொருள் இனிதே"

## 6. திரிகடுகம்

நலலாதன என்பவரால பாடப்பெற்றது; 191 வெண்பாக்களைக் கொணடது ஒவவொரு பாடடிலும் மூனறு மூன்று உறுதிப்பொருள்களைக கூறுவது சுக்கு, மிளகு, திபபிலி எனற மூனறும் திரிகடுகம் எனப்படும். இவை உடலுக்கு நலம தருவன. இவைபோல இப பாடல்கள் ஒவ்வொனறிலும் அமைநத மும்மூன்று கருத்துக்களும் வாழ்வுக்கு நலம் பயபபன; ஆதலால், இப பெயா பெறறது. இநநூலில் ஒரு பாடடு:

"கணக்காயர் இல்லாத ஊரும்; பிணக்கு அறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்து உண்ணும்

தன்மையிலாளர் அயல் இருப்பும் இம்மூன்றும்

நன்மை பயத்தது இல்."

## 7. ஆசாரக்கோவை

பெருவாயின முளளியார் எனபவரால பாடபபெற்றது. 101 பாடல களைக் கொணடது. இந நூலில குறள் வெண்பா, சிந்தியல வெணபா, நேரிசை வெண்பா, இன்னிசை வெணபா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா ஆகிய வெண்பா வகைகள் அனைததிலும் பாடல்கள் அமைந துளளன. மக்கள் அனறாட வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய முறை களை (ஆசாரங்களை) இநநூல கூறுகின்றது. ஒவ்வொருவரும் தொழ வேணடியவா யாா யாா எனபது பற்றி இநநூல் பின்வருமாறு உரைக் கினறது.

"அரசன், உவாத்தியன், தாய் தந்தை, தம்முன்,

நிகரில் குரவர் இவ் ஐவர் – இவர் இவரைத்

தேவரைப் போலத் தொழுது எழுக என்பதே

யாவரும் கண்ட நெறி"

இந் நூல ஆரிடம் என்னும் வடமொழி நூலைத தழுவியமைந்தது என்பா.

## 8. பழமொழி நானூறு

முனறுறை அரையனார் எனபவரால பாடப பெற்றது. 400 வெண்பாக்களை உடையது. ஒவ்வொரு வெண்பாவின இறுதியிலும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு திகழ்வது, அப பழமொழிககு ஏற்ற கருத்தை முன்னர்க் கூறுவது. பழமொழிககென அமைநத முதல தமிழநூல் இதுவே. இதனைப பின்பற்றிப் பிற்காலததில சதக ஆசிரியாகள பாடியுள்ளனா இந் நூல் கூறும் பழமொழிகளில சில:

**'குலவிச்சை – கல்லாமல் பாகம்படும்"**

**"தமக்கு மருத்துவம் தாம்"**

**"பழம்பகை தமக்கு நட்பாதல் இல்"**

**"நிறை குடம் நீர்தளும்பல் இல்"**

## 9. சிறுபஞ்ச மூலம்

கணடஙகததரி, சிறுவழுதுணை, சிறுமலலி, பெருமலலி, நெருஞ்சி ஆகிய ஐநதின வோகளுமசிறுபஞ்ச மூலஙகள ஆகும். இவை உடற்பிணியைப போக்கும். இவைபோல உள்ளப் பிணியைப போக்கும் ஐந்து ஐநது கருததுக்களை ஒவவொரு பாட்டிலும் கூறுவதால இஃது இப் பெயா பெறறது. இதனைப பாடியவர் காரியாசான். இது 104 வெணபாக்கள் கொண்டது சுவாக்கம செலவதற்கு உரிய அறஙகள கூறுகினறாா இவை சமுதாய நலன்பறறி அமைநதிருபபது பாராடடுககு உரியது.

**"குளம்தொட்டு, காவு பதித்து, வழிசீத்து,**
**உளம்தொட்டு, உழுவயல் ஆக்கி, வளம்தொட்டு**
**பாகுபடும் கிணற்றோடு என்றிவை பாற்படுத்தான்**
**ஏகும் சுவர்க்கம் இனிது"**

## 10. முதுமொழிக் காஞ்சி

மதுரைக கூடலூா கிழாா என்பவரால பாடபபெறறது பதது அதிகாரஙகளையும் ஒவவொரு அதிகாரததிலும் பததுப பதது குறட்டாழிசைகளையும் கொணடது அறம, பொருள, இன்பம் பற்றிக் கூறுவது.

**"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"**

என்பது இநநூல கூறும் அறம்.

## 11. ஏலாதி

ஏலம், இலவஙகம், நாககேசரம, மிளகு, திபபிலி, சுககு என்ற ஆறு பொருள்களும உரிய அளவோடு சோந்த கூட்டு மருநது ஏலாதி எனபபடும்

இம் மருந்து உடல நோயைத் தீாக்கும். ஆறு ஆறு கருத்துக்களைப் பாடல தோறும் கூறுவதால இந் நூல், இப பெயா பெற்றது; எண்பது பாட்டுக்களை உடையது. இதனைப் பாடியவர் கணிமேதாவியார்.

## அகப்பொருள் நூல்கள்

### 1. கார் நாற்பது

40 வெண்பாக்களை உடையது; காா காலத்தின் பலவேறு அழகுகளைக கூறுவது, மதுரைக கண்ணங் கூத்தனாா என்பவரால பாடபபெற்றது. காா காலததில, தோன்றிப் பூக்கள் எங்கும் பூததுள்ளன இதனைப பாாக்கும் போது, காாததிகைத திங்களில, காாத்திகை நாளில, விளககேற்றியது போல இருக்கினறது எனறு பாடுகினறாா.

### 2. ஐந்திணை ஐம்பது

முலலை, குறிஞசி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐநதும் அகப் பொருளுக்கு உரிய திணைகள. இவ ஐந்து திணைகளும், திணைக்குப பதது வெண்பாககளாக, 50 வெணபாக்கள் கொணடது, ஆதலால் இப்பெயர் பெறறது இதனை இயற்றியவா மாறன பொறையனாா இந நூற் பாடல்கள் கவிதை இனிமை மிக்கன.

"கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழில்நோக்கி
உண்கண் சிவப்ப அழுதேன்; ஒளிமுகம்
கண்டு அன்னை எவ்வம்யாது என்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்ததென் றேன்."

இப்பாடல, காதல வயப்படட தலைவி, தன் தாயிடததில காதலை மறைத்துக கூறும் செயலை அழகாகப் புலபபடுததுகினறது.

### 3. திணைமொழி ஐம்பது

திணை ஒன்றிற்குப பத்து வெண்பாககளாக ஐம்பது வெணபாக்களைக கொணடது. கண்ணன சேநதன் எனபவரால் பாடப்பெற்றது. ஐந்திணை ஐம்பது போலச சொறபொருள் நயங்கள் உடையது.

### 4. ஐந்திணை எழுபது

ஒவவொரு திணைக்கும் 14 வெணபாக்களாக 70 வெண்பாக்களைக் கொணடது; மூவாதியாா எனபவரால பாடப் பெற்றது.

### 5. திணைமாலை நூற்றைம்பது

ஒவ்வொரு திணைக்கும் முப்பதுமுப்பது வெண்பாக்களாக 150 வெண்பாக்களைக் கொண்டது. ஆனால இன்று 153 வெண்பாக்கள் உள்ளன. இதனை இயற்றியவர் கணிமேதாவியாா. இவரே ஏலாதி என்னும் அறநூல இயற்றியவர். இயறகையின் அழகு இநநூலில நன்கு புனைந் துரைக்கப்பட்டுள்ளது.

### 6. கைந்நிலை

அறுபது வெண்பாக்களை உடைய அகபபொருள் நூல. ஒவவோர் அகததிணைககும் 12 வெண்பாக்கள் கொண்டது. புலலங்காடனார் என்பவரால பாடப்பெற்றது.

## புறப்பொருள் நூல்

### களவழி நாற்பது

நாறபது வெண்பாக்களை உடையது சோழன செங்கணான், சேரன் கணைக்கால இரும்பொறையைக் கழுமலம் என்னும் இடத்தில போா செய்து வென்றான், சேரனைச சிறைபபடுத்தினான் அச் சேரனைச் சிறைமீட்பதற் காக அவன நணபா பொய்கையாா இந நூலைப் பாடினார் என்பர். இததகைய வரலாற்றுப் பின்னணி கொண்டது இந நூலில் போாககளக கொடுமை அசசம தரத்தக்க வகையில வருணிக்கப்பட்டுள்ளது.

பதினெண கீழ்க்கணககில அமைநத அறநூலகளைப பயினறால, அக் காலததில வடமொழி நீதிக் கருததுககள தமிழில புகுந்ததை அறியலாம். அக்காலச சமுதாயப பழகக வழககங்களை உணரலாம் சமண, பௌத்த சமயத் தொடாபால் கொலலாமை, கள்ளுண்ணாமை, நிலையாமை முதலிய கொளகைகள் வலுபபெறற உணமையைக காணலாம்.

# 7. இரட்டைக் காப்பியங்கள்

கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோரின் வரலாறுகள் கூறுவன சிலப்பதிகாரமும், மணிமேகலையும இவ் இரணடையும 'இரட்டைக் காபபியங்கள்' என்பா சிலபபதிகாரததில கோவலன், கண்ணகி, மாதவி வரலாறு கூறபபெறுகினறது, மணிமேகலையில, மாதவி, மணிமேகலை வரலாறு பேசபபடுகின்றது. "மணிமேகலையோடு உரைப்பொருள் முற்றிய சிலபபதிகாரம்" எனச சிலம்பின உரைபெறு கட்டுரை குறிப்பிடுகினறது. இதனால சிலம்புக்கதை தொடாந்து மணிமேகலைக் கதையுடன் முடிவு

பெறுகின்றது என்பது தெளிவாம். சிலம்பு பாடுமாறு சாத்தனார் இளங்கோவை வேண்டினார். சிலம்புக் கதையில் இலலறம் ஏற்றம் பெறு கின்றது; மணிமேகலையில துறவறம் புகழடைகின்றது. சிலப்பதிகாரமும் முப்பது காதை; மணிமேகலையும் முப்பது காதை. இரண்டும் பெரும்பாலும், ஆசிரியபபாவால அமைந்தன. இவ்வாறு கருவாலும், கூறும் பொருளாலும், அமைபபாலும் இவ் இரணடும் ஒததிருததல பற்றி இரட்டைக் காப்பியங்களஎன்பா

இவ இரண்டு நூல்களிலும் முரண்பாடுகள் நிறைந்து உளளன. ஆதலால் இரட்டைக் காபபியங்கள் என்று கூறுதல பொருந்தாது எனபா டாக்டா ச.சோமசுந்தர பாரதியார்.

# 1. சிலப்பதிகாரம்

இளங்கோவடிகளால பாடப்பெற்றது. இவா சேரமன்னன செங்குட்டு வனின தம்பி; துறவி; சமணச் சாாபு உடையவா. கோவலனோடு கணணகி வானுலகம் சென்ற செய்தியைக் குன்றக குறவர்கள், மலைவளம் காணச் சென்ற செங்குட்டுவனிடம் கூறினா. அச் செயதியைச் சாத்தனாா விரித் துரைததாா. இளங்கோவடிகளும் அதனைக கேட்டாா. முடிவில சாததனார், "முடிகெழு வேந்தா மூவருக்கும் உரிய கதை; ஆதலால அடிகள் நீரே அருளுக" என வேண்டினாா. அடிகள், காபபிய மாளிகை கட்டினாா

## சிலம்புக் கரு

கோவலன கண்ணகியை மணந்தான்; ஆடலழகி மாதவியை அடைந தான்; கண்ணகியை மறந்தான; ஆணடுகள் பல கழிநதன. கோவலனுக்கும் மாதவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; கோவலன் மாதவியை நீங்கினான்; கணணகியை அடைந்தான். இழந்த செலவத்தை ஈட்டக் கணணகியுடன் மதுரை சென்றான. பொற்கொலலனின் சூழ்ச்சிககு ஆளாகி, சிலம்பு கவா கள்வன எனனும் குற்றம் சாட்டபபட்டுக் கொலையுண்டான். கணணகி வீரப்பெண்ணாக மாறினாள; வழக்குரைத்தாள; வென்றாள் சேரநாடு சென்றாள; கணவனுடன விண்ணுலகம் புகுநதாள

## மும்மைக் காப்பியம்

சிலப்பதிகாரததில மூன்று என்னும் பிரிவு, மிகச் சிறப்பாக அமைந் துள்ளது

1. சிலம்பில வலியுறுத்தபபடும் பொருள் மூன்று. அவை அரசியல பிழைத்தோருககு அறம் கூறறாகும்; உரைசால் பததினியை உயாந்தோா ஏத்துவா; ஊழவினை உருததுவநது ஊட்டும் என்பன.

2. சிலம்பின தலைமைப் பாத்திரங்கள மூவா; கோவலன், கணணகி, மாதவி.

3. சிலம்பில் முதன்மை கொள்ளும் சுவை மூன்று; இன்பச் சுவை, துன்பச் சுவை, வீரச் சுவை.

4. சிலம்பு குறிக்கும் வேந்தர் மூவர்; சோழன், சேரன், பாண்டியன்.

5. சிலம்பு நடைபெற்ற நாடுகள் மூன்று; சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு.

6. சிலம்புக் கதை நிகழ்ந்த இடங்கள் மூன்று; புகாா, மதுரை, வஞ்சி.

7. சிலம்பின் பெரும் பிரிவு மூன்று; புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம்.

8. சிலம்பில் அமைநத தமிழ் மூன்று; இயல், இசை, நாடகம்.

இவ்வாறு சிலபபதிகாரம் மும்மைக் காப்பியமாகத் திகழ்கின்றது.

### சிலம்பின் சிறப்பு

1. தமிழ் மொழியில முதன் முதலாகத் தோன்றிய பெருங்காப்பியம் இதுவே.

2. அக் காலததுத தோன்றிய உலக இலக்கியங்கள் அரசனைப பாட்டுடைத் தலைவனாக வைத்துப போற்றின. அக் காலத்தில, குடிமக்களைக் காப்பியத் தலைவாகளாக அமைத்த சிறப்பினது.

3. பெண்மைக்கு முதலிடம தநது போற்றுவது.

4. வரலாற்றுப பின்னணி கொண்டது.

5. சோழ, சேர, பாண்டிய நாட்டை இணைத்துத் தேசியக் காப்பியமாகத் திகழ்வது.

6. இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுக்குச் சான்றாக விளங்குவது.

7. தமிழில் உரைநடை அமைநதிருந்தது என்பதற்குச் சான்றாய் உரையிடையிட்ட பாட்டுடைச் செயயுளாக ஒளிாவது.

8. காப்பிய அழகு மிக்கது; கவிதை நலங்கள் சான்றது.

இததுணைச சிறபபுமிக்க இக் காபபியப பெருமையை உணர்ந்த பாரதியாா, "நெஞ்சை அள்ளும் சிலபபதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று வாய் மணக்கப் பாடியுள்ளாா.

## 2. மணிமேகலை

சீத்தலைச் சாத்தனாராால பாடப்பெற்றது; இவா, மதுரையைச் சேர்ந்தவர்; பௌத்த சமயத்தவா. இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம பாடுமாறு செய் தவா; இளங்கோவடிகளின் வேண்டுதலால மணிமேகலையைப பாடியவர்.

**மேகலையின் கரு**

மாதவியின் மகள் மணிமேகலை. ஆயினும் இவளைக் கண்ணகியின் மகளாகவே மாதவி கருதினாள். மணிமேகலை மணிமேகலா தெய்வத்தால் மணிபலலவத் தீவு சென்றாள்; புத்த பீடிகையைத் தொழுதாள்; பழம்பிறபபு உணாநதாள்; அமுத சுரபி பெற்றாள்; காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தாள்; பசிபபிணி போக்கினாள். இசசமயம், இவள்பால காதல கொண்ட உதயகுமரன் எனனும் அரசகுமாரன, வித்யாதரன ஒருவனால கொலலப பட்டான். இதனால மணிமேகலை, சிறை புகுந்தாள்; சிறைக்கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்கினாள்; அறவண அடிகளிடம் பெளத்த தருமம் கேட்டாள்; தவம் செயதாள்; பயன் பெற்றாள்

**மேகலையின் சிறப்பு**

1 இளங்கோவடிகள குலமகளான கண்ணகியைக் காப்பியத் தலைவி ஆக்கினாா. இதனால, குலத்தால வரும உயாவு தாழ்வுகளை நீக்கிய புரட்சிக காப்பியமாகப பாராட்டப்பெறுவது சிலம்பு.

2. பரத்தை, மது, கொலை, களவு முதலியன கூடா என்பதை மிக அழுத்தமாக மணிமேகலை கூறுகினறது. எனவே, சீர்திருத்தக் காபபியமாகத் திகழ்வது இது.

3. சிறைக்கோடடத்தை அறக்கோடடமாக்க இயலும் என்ற உறுதிப் பாட்டினை விளக்கும் உயாவுடையது.

4. பசிப்பிணியைப் போக்குவதே தலையாய அறம் எனப் பொது வுடைமைத் தத்துவத்தின் ஆணிவேரை அறக் கொளகையாக அமைபபது.

5. சமயக் கொளகைகளை விளக்குவதற்காகத் தமிழில எழுந்த முதல காப்பியம் என்ற பெருமையுடையது. சமயப் போராட்டததின் வித்து இங்கே முளைவிடுகின்றது எனலாம்.

6. சமயக் கொளகையையும சமுதாயச சீாதிருத்ததததையும் விளக்கத் தோன்றியது. ஆதலால எளிய நடையில இலங்குவது.

7. புதிய புதிய சொலலாககஙகள் தந்து தமிழை வளப்படுததுவது.

8. ஆசிரியப்பாவால் இயன்றதாயினும் இசை இனிமை மிககது.

இததுணைச் சிறப்பு மிக்க இக் காவியததில, கதை நிகழ்ச்சிகளை முன்னிட்டு, இயறகை கடந்த கற்பனைகள் இடம் பெற்றுள்ளன; ஆயினும, அவை சலிப்பினைத் தரவிலலை

சிலம்பும் மணிமேகலையும் தமிழ் நாணயத்தின இரு புறங்களாகத் திகழ்கின்றன.

# 8. பக்தி இலக்கியம்

## சைவ, வைணவர்களின் தமிழ்ப்பணி

கி.பி. 250க்குப்பின் தமிழகம், வேறு நாட்டவா ஆட்சிக்கு உட்பட்டது. அயலவரான களபபிரரும் பல்லவரும் ஆட்சியுரிமை பெற்றனா அதனால் அவர்கள் தமிழைப் புறக்கணித்து விட்டுப் பாலி மொழியையும் பிராகிருத மொழியையும வடமொழியையும் ஆட்சி மொழி யாககினா. இந்நிலை கி.பி. 6ஆம நூற்றாண்டு வரை நீடித்தது; இதனால தமிழ் நலிவுற்றது; தமிழுக்கு இக்காலம, "இருணட காலமாக" அமைந்தது இக்காலத்தில குறிபபிடத்தக்க தமிழ் நூல்கள் தோன்றவிலலை; ஆயினும் அற நூலகள் – பதினெண்கீழ்க் கணககு நூலகள் தோன்றின. அறவொழுககங்கள் சிறப்பாகப் போற்றப் பட்டன. இநநிலையில பக்தியும் வேர்விடத் தொடஙகியது. காரைக்கால் அம்மையாா, பொய்கையாழ்வாா, பூதத்தாழ்வாா, பேயாழ்வாா ஆகியோா பக்திப் பாடலகளா பாடினாா. இவாகள் சிறந்த பக்தி வைராக்கியம் உடை யோராய், இறைவன் திருவுருவைக் கண்டு அநுபவத்தால் அவன் புகழைப் பாடுதல என்பவறறைத தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டனா இவாகளின் பாடலகளே, பிறகாலப் பக்திப் பாடலகளுக்கு வழிகாட்டியாக அமைந்தவை; விடிவெளளியாக முன் தோன்றியவை; சைவ வைணவ சமயம் செழிதது வளர உரம் ஊட்டியவை.

சமணம், பௌததம் ஆகியன தமிழ் நிலத்திறகுப் புறம்பானவை. ஆதலால, சைவமும் வைணவமுமே தமிழ் நிலத்தில் தோன்றி வளர்நத சமயங்கள். இச் சமயங்களை வளாத்த அருளாளாகள் பாடிய பாடலகளே பகதி இலக்கியமாகும். இவ்விலக்கியததைச் சைவ இலக்கியம், வைணவ இலக்கியம் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

## சைவ இலக்கியங்கள்

சிவபெருமானை முழு முதல தெயவமாகப போறறுவது சைவ சமயம். இச் சமயததில ஈடுபட்டுச் சமயக் கொளகைகளையும், பக்தி உணர்ச்சியையும் வளாபபதறகுச சான்றோர்களா பலா தோனறினா. அவாகள் சிவபெருமான் கோயில் கொண்டுள்ள தலங்கள தோறும சென்றனர்; பகதி ததும்பும் பாடலகளைப பாடினாா. இவவாறு பாடியவாகளுள் திருஞானசமபநதர், திருநாவுக்கரசா, சுந்தரா ஆகிய மூவரும் குறிபபிடத்தக்கவா. இவாகள் பாடியவை தேவாரம் எனப்படும். இம் மூவருடன ஒப்ப மதிக்கததக்கவா மாணிக்க வாசகா. இந் நாலவரையும் சமயக குரவாகள் எனபா. இவர்களுக்குப பின் வரலாறறு நூல பாடிய சேக்கிழாாவரை பல அறிஞாகள்,

பக்திப பாக்கள் இசைத்தனா. இவைகளைப் பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர்.

## திருஞானசம்பந்தர்

இவர் சீகாழியில் அந்தணா குலத்தில் பிறந்தார். தம் மூன்றாம் வயதில், உமையம்மை ஞானப்பால ஊட்டச் சிவஞானம் பெற்றார்; திருத்தலங்கள் தோறும் சென்று பக்திப பாடலகள் பாடினாா; செயறகரிய செயலகள் பல செயதாா, சமணர்களை வாதிட்டு வென்றாா; சமண சமயததைச சார்நத மதுரையரசன் கூனபாணடியனைச் சைவனாக மாறறினாா.

இவா பாடிய பதிகங்கள 1600 என்பா. ஆனால, இன்று 384 பதிகங்களே (4181 பாடல்களே) கிடைத்துள்ளன. இவை முதல திருமுறை, இரணடாம் திருமுறை, மூன்றாம் திருமுறை எனப பிரிககபபட்டுள்ளன.

திருஞான சம்பநதா, இளமையிலேயே ஞானம பெற்றவா. இறைவனின் மகனாக அமைந்தவா. ஆதலால வாழ்க்கைத் துன்பங்களை இவா அநுபவிககவிலலை. எனவே, இவருடைய பாடலகளில 'குதூகல உணாச்சி' மிககிருக்கின்றது, ஓசையும் ஒத்திசையும் துள்ளிக் குதிததுச் செலகின்றன. இயற்கை வருணனைகள் கவிதைச் சுவையுடன் கலந்து வருகின்றன.

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேல் என்று**
**அருள் செய்வான் அமரும்கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரம் ஏறி**
**முகில்பார்க்கும் திருவை யாறே.**

இபபாடலில இயற்கையழகு விஞ்சி நிற்கக் காணலாம்.

இவா பாடிய பதிகஙகளுள சில, வேதசாரமாய் அமைநதன என்றும், வேதததின ஓசைச் சிறப்புடையன என்றும் கூறுவா.

## திருநாவுக்கரசர்:

திருமுனைப்பாடி நாட்டில திருவாமூரில் பிறநதவா; சைவ சமயத்தைச் சோநதவா; இளமையில பெறறோாகளை இழநத இவா, சமண சமயததிற்குச் சென்றார். அச சமயததின் அறிஞரானாா; தருமசேனா என்ற பட்டமும் பெற்றார். இந நிலையில சிவபெருமானின் அருள் நோக்கால இவருக்குச் சூலைநோய ஏற்பட்டது. மிக வருநதினார். இந் நோய், எவவகையிலும்

தீரவில்லை; எனவே, தம தமக்கையாரான திலகவதியாரிடம் வந்தாா. சிவபெருமானை வழிபட்டாா; நோய் நீங்கியது. இறைவனின் அடியார் ஆனாா. தலங்கள் தோறும் சென்று சிவபெருமானைப பாடிப பரவினார்.

இவா பாடிய பதிகங்கள 4900 என்பர். ஆனால இன்று 312 பதிகங்களே (3066—பாடல்களே) கிடைத்துள்ளன. இவை நான்காம் திருமுறை, ஐந்தாம் திருமுறை, ஆறாம் திருமுறை என மூனறாகப பிரிக்கப்பட்டுள்ளன இவர் பாடலகளில் முதிாந்த அனுபவததையும பக்திச் சுவையையும் பாாக்கலாம் சிவனை மறந்து காலத்தைப் போக்கியதால் ஏறபட்ட துன்பச் சுவையைக் காணலாம். எதையும் எதிாத்து நிற்கும் பேராறறலை உணரலாம். பலலவ மன்னன் இவருக்குத துன்பம் இழைத்தபோது மன உறுதியுடனும், பக்தி வைராக்கியத்துடனும,

**"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;**
**நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;**
**ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை."**

என்று இவா கூறிய முழககப பாடலகள், விடுதலை உணர்வு வாய்நத எழுச்சிமிக்க பாடல்களாகக காடசி தருகினறன. இவ்வகையில் இவரைப் 'புரட்சிக் கவிஞர்' என்று கூறலாம

இவா, பக்தி கொண்டவர் மட்டும அல்லர்; சமுதாயத்திறகுப் பணியும் செயதவா; உழவாரப படைகொணடு உழைக்குமாறு வற்புறுத்தியவர்; சாதிகுல வேறுபாடு கருதாதவர்; சமுதாயக கவிஞராகத திகழ்ந்தவர்.

இவர் பாடிய பாவகைகளில 'தாண்டகம்' என்பது குறிப்பிடததக்கது. இதனால் இவரைத 'தாணடக வேநதா' என்று பாராட்டுவா. ஆற்று வெள்ளம் பெருக்கெடுததுப் பாய்வது போனறு, தஙகுதடையினறி இறைவன் திருநாமங் களை ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கிச் செலலும் திருத்தாணடகத்தையொத்த கவிதைப பெருக்கைத் தமிழிலக்கியத்தில வேறெங்கும் காண முடியாது என்பா. இவருககு அபபா, வாகீசா எனற சிறப்புப் பெயாகளும் உணடு. இவா திருஞானசம்பநதா காலத்தவா.

## சுந்தரர்:

தொண்டைநாட்டில திருமுனைபபாடி நாட்டில் பிறந்தவா; திருமணத் தின்போது இறைவனால தடுததாட்கொள்ளபபட்டவர்; இறைவனுக்குத் தோழராக அமைநதவர்; இதனால, 'தம்பிரான தோழா' எனனும் சிறப்புப் பெயா பெறறவா, இவா பாடிய பதிகங்கள் 3800 என்பா. ஆனால, இப்போது 100 பதிகங்களே (1126 பாடலகளே) கிடைத்துள்ளன. இவர் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கபபட்டுள்ளன.

இவர், இறைவனையே தோழனாகக் கொண்டவர்; ஆதலால், இவர் பாடல்களில் செருக்கினைக் காணலாம் என்பர்.

**"விற்றுக்கொள்வீர்! ஒற்றியல்லேன்!**
**விரும்பி ஆட்பட்டேன்!**
**குற்றமொன்றும் செய்ததில்லை!**
**கொத்தை ஆக்கினீர்!**
**எற்றுக்கடிகேள் என்கண் கொண்டீர்?**
**நீரே பழிபட்டீர்!**
**மற்றைக்கண்தான் தாரா தொழிந்தால்**
**வாழ்ந்து போதீரே!**

இபபாடலில் இவ்வுணாசசி மேலோங்கி நிறகின்றது.

சைவததை வளாப்பதறகுச் சிவபக்தியோடு அடியாா பக்தியினையும் இணைததுப் புதுவழிகாட்டிய முதலவா என இவரைக கூறுவர். இவரைத தலைவராகக் கொண்டு பாடபபெற்றதே 'பெரிய புராணம்' என்னும வரலாறறுக் காபபியம்.

சம்பநதா, நாவுக்கரசர், சுந்தரா ஆகிய மூவரும் பாடிய பாடலகளை, 'மூவர் தமிழ்' என்பர். சம்பநதா பாட்டில அனபுத தமிழும், நாவுககரசா பாட்டில அனுபவத் தமிழும, சுந்தரர் பாடடில தோழமைத தமிழும சிறப்பாக அமைநதுள்ளன.

## மாணிக்கவாசகர்:

பாண்டி நாட்டுத திருவாதவூரில் பிறநதவா; பாண்டிய மன்னன் ஒருவனிடம் அமைச்சராகச் சிலகாலம் பணியாற்றியவா; அரசனுககுக் குதிரை வாங்குவதற்காகத் திருபபெருநதுறை வநது, அங்கு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இவருககாகச் சிவபெருமான பிடடுக்கு மண்சுமந்து, அடியும் பெற்றாா.

இவர் பாடிய நூலகள் திருவாசகம, திருக்கோவையாா என்பன. இவை எட்டாம் திருமுறை எனப்பெறும். திருவாசகத்தில 51 பிரிவுகளும, 636 பாடலகளும உள்ளன திருககோவையாா 400 பாடலகளை உடையது; பேராசிரியரால உரை வரையப்பெறற பெருமை உடையது. இக்கோவையை மாணிககவாசகா பாடத தில்லை நடராசரே ஏட்டில எழுதினார் என்பர். இககோவையில இறைவனைத தலைவனாகவும், உயிரைத தலைவியாகவும் இவர் அமைததுப் பாடும் நயம், ஆழந்து உணரததக்கது. திருவாசகததில நாடோடி இலககிய மரபுகள் இலக்கிய வடிவம் பெற்றுளளன. அம்மானை,

திருப்பூவலலி, திருப்பொற்சுண்ணம், திருச்சாழல் என்பன இத்தகையன. திருவெம்பாவைப் பாடல்கள், பொருள் நயமும் கவிதை நலமும் வாயநதன.

இவரை, 'அழுது அடி அடைந்த அன்பா' எனறு பாராட்டுவர். இவா பாடல்களில் அத்தகைய கசிவினை – உள்ள உருக்கத்தைக் காணலாம்.

**உற்றாரை யான் வேண்டேன்;**
**ஊர்வேண்டேன்; பேர்வேண்டேன்;**
**கற்றாரை யான் வேண்டேன்;**
**கற்பனவும் இனி அமையும்;**
**குற்றாலத்து அமர்ந்துறையும்**
**கூத்தா, உன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம் போலக்**
**கசிந்துருக வேண்டுவனே.**

எனக் கனறினை உடைய தாய்பபசு போல மனம் கசிய வரம் வேணடுவா.

இவா பாடலைப படித்தால உள்ளம் இளகும்; உயிா உருகும்; 'நற்கருபபஞ் சாற்றினிலே தேன் கலநது, பால கலநது, செழுங்கனித்தீஞ் சுவைகலநது, ஊன்கலநது, உயிா கலநது உவட்டாமல இனிப்பன இவா பாட்டுககள' என்பாா வள்ளலாா; 'எலும்பு உருக்கும் பாட்டு' என்பார் டாகடா போப. திருவாசகததை போப ஆங்கிலத்தில மொழிபெயாததுளளாா.

தாயுமானவா, இராமலிங்க சுவாமிகள ஆகியோா, மாணிக்கவாசகரின் பாட்டு நெறியை அடியொற்றியே இனிய பாடலகள் பாடியருளினா.

## திருமுறைகள் 9 – 12

ஒன்பது அருளாளாகள் பாடிய பாடலகள், ஒனபதாம் திருமுறையாகத் தொகுககபபட்டன திருமூலா அருளிய திருமந்திரம், பத்தாம் திருமுறையாகப் பாராட்டப பெறுவது. பனனிருவா பாடிய நூலகள் பதினோராம் திருமுறை யாக அமைந்தன சேக்கிழாா பாடிய பெரிய புராணம், பன்னிரண்டாம் திருமுறையாகப் புகழ் பெற்றது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், சைவசமயததின் உயிா நூலகளே.

# வைணவ இலக்கியம்

திருமாலை முழுமுதல தெயவமாகப போற்றுவது வைணவ சமயம். இச் சமயக கொள்கைகளையும் பக்தி உணாச்சியையும் வளாபபதற்குச் சான்றோாகள் பலா தோனறினா அவாகள், திருமால கோயில கொண்டுள்ள தலஙகள் தோறும் சென்றனா; திருமாலின் அவதாரங்களிலும் திருக்குணங்

களிலும ஈடுபடடுத் தம்மை மறந்து ஆழ்நதனா, நெஞ்சுருகிப பாடினா; இவர்களே ஆழ்வார்கள். இவ் ஆழ்வார்கள் பன்னிருவா ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் நாலாயிரம். இப்பாடலகளை நாதமுனி என்பவா தொகுத் தாா. இத் தொகுப்பே நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எனப்படும்.

பொய்கையாழ்வாா, பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வாா, பெரியாழவாா, ஆண்டாள், நம்மாழ்வாா, குலசேகர ஆழ்வாா, தொண்டரடிப பொடியாழ்வாா. திருப்பாணாழ்வாா, திருமங்கை ஆழ்வாா, மதுரகவியாழ் வார் என்பவாகள் பன்னிரு ஆழ்வாாகள் ஆவர். இவாகளின பாடலகளைக் கொணட நாலாயிரத திவய பிரபநதம் 1. முதலாயிரம் 2. பெரிய திருமொழி, 3. இயற்பா, 4. திருவாய்மொழி என நான்கு பகுப்புக்களை உடையது. இபபகுதியில 24 நூலகள் உள்ளன. ஆழவாாகளில நம்மாழவாரும் திருமங்கையாழ்வாருமே மிகுதியான பாடல்களைப் பாடியவாகள்.

**முதலாழ்வார்கள்:** பொய்கையாழ்வாா, பூதத்தாழவாா, பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வாாகள எனக் கூறப்படுவா.

1. **பொய்கையாழ்வார்** காஞ்சியில பொறறாமரைப பொய்கையில தோன்றியவா. இதனால பொய்கையாழ்வாா எனப பெயர் பெற்றவா; முதல் திருவந்தாதி பாடியவர். இவரைத திருமாலின் சங்கான பாஞ்ச சன்னிய அம்சம் என்பா.

2. **பூதத்தாழ்வார்:** மகாபலிபுரததில தோனறியவா. ஐம்பெரும் பூதங்களும திருமாலே எனக்கொண்டவர்; ஆதலால் பூதத்தாழவாா என்னும பெயா பெற்றவர். இரணடாம் திருவந்தாதி பாடியவா இவரைத் திருமாலின் கதாயுத அம்சம் என்பர்.

3. **பேயாழ்வார்:** சென்னை மயிலாப்பூரில் தோன்றியவா; பேய் பிடிததவா போல பகதி மேலீட்டால திரிந்தமையால் இப பெயா பெற்றவா. இவர் மூனறாம் திருவநதாதி பாடியவா.

இம் மூவரும் ஒரே காலத்தினா. திருக்கோவலூரில் திருமாலைக காணும் பேறு பெற்றவர்கள். இயற்கையை இறைவன வடிவமாகக் கருதி அநுபவிததவாகள். இவாகளின் பாடலகளில சைவ சமய வெறுபபினைக காண இயலாது. திருமாலும் சிவனும் ஒனறெனற குறிப்பே, இவாகளின் பாடலகளில ஒளிவிடுகின்றது. பொதுவாக, இவாகள், சமய சமரசக கொளகை பூண்டவாகள்.

4. **திருமழிசையாழ்வார்:** சென்னையை அடுத்த திருமழிசையில் தோன்றியவா; நான்முகன் திருவநதாதி, திருச்சந்த விருத்தம் என்பன பாடியவா. சநதபபாப பாடுவதில வலலவா; "விதையாக – நற்றமிழை விததி என உள்ளத்தை நீ விளைத்தாய" எனத் தமிழ்பபற்றைச் சமய அன்பில்

வெளிப்படுத்தியவர். இவரைக் காஞ்சி மன்னன துன்புறுத்த அதனால் இவரின் சீடர் கணிகண்ணன் காஞ்சியை விட்டுச் செல்ல, திருமாலும் கணிகணணனின் பின் சென்றார் என்ற வரலாறு உண்டு.

**5. பெரியாழ்வார்:** ஸ்ரீவிலலிபுத்தூரில் தோன்றியவர்; பட்டர் பிரான், விஷ்ணுசிததன் என்னும் சிறப்புப் பெயர்கள் உடையவர்; ஆண்டாளை வளர்த்தவா; திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருவாய்மொழி என்பன பாடியவா. கண்ண பெருமானைக குழந்தையாகப் பாவித்து இவர் பாடிய பாடலகள் இணையற்ற இலககியச் சிறப்புடையன. இவறறைப் படிக்கும் போது மெய்ம்மறந்து போகின்றோம். இபபாடல்களே, பிளளைத் தமிழ் இலககியம் உருவாவதறகு விதைகளாக அமைநதவை.

**6. ஆண்டாள்:** பெரியாழ்வாரால் நநதவனததில் கண்டு எடுத்து வளாக்கப் பெற்றவா; கோதை என்னும் பெயருடையவா; சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும சிறபபுப் பெயா கொண்டவா; உலக வாழ்வை நினைத்து அரங்க நாதனையே மணாளனாக வரித்து மகிழ்ந்தவா; அதனால பக்தி கலந்த காதலைப் பாடியவா. திருபபாவை, நாச்சியாா திருமொழி என்பன இவர் பாடியவை. திருப்பாவைப பாடலகளில இசை நயமும் இலக்கிய நயமும் இணைந்து செல்கினறன.

**சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்**
**பொற்றா மரையடியே போற்றுவம் பொருள்கேளாய்**
**பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ**
**குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது**
**இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா**
**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன்றன்னோடு**
**உற்றோமே ஆவோம்! உனக்கேநாம் ஆட்செய்வோம்**
**மற்றைநம் கர்மங்கள் மாற்றேலோர் எம்பாவாய்.**

**7. நம்மாழ்வார்:** ஆழ்வாா திருநகரியில் பிறந்தவர்; திருமாலின் அவதாரமாக மதிக்கப்படுபவா; ஆழ்வார்களில சிறந்தவர்; நம் எலலோருக்கும் உரியவராதலால, நம்மாழ்வார் எனப் பாராட்டபபெறுபவா. இவருக்குச் சடகோபன, பராங்குசன், தமிழ் மாறன் முதலிய பெயாகளும் உண்டு. திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம் என்பன இவர் பாடியன.

இவா, அகப்பொருள துறைகள் பலவற்றைச் சமய அடிப்படையில் அழகுறப் பாடியவா; இயற்கைக் காட்சியில் தோய்ந்தவா; காணும் பொருள்கள் அனைத்தையும் கண்ணனாகப் பாவித்தவா

**'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும்**
**வெற்றிலையும் எல்லாம்**
**கண்ணன் எம் பெருமான்'**

என்று பாடிக் களித்தவர். 'வேதம் தமிழ் செய்தவர்' என இவரைப் பாராட்டுவா.

**8. குலசேகர ஆழ்வார்:** திருவஞ்சைக் களத்தில் சேர மரபில பிறந்தவர்; பெருமாள் திருமொழி பாடியவர், இராம அவதாரத்தில பெரிதும் ஈடுபாடு கொண்டவர் 'வித்துவக்கோடு' என்னும் தலத்தில எழுந்தருளியிருக்கும் இறைவனைக் குறித்து இவர் பாடும் பாடல்கள் பக்திச் சுவை சொட்டுவன.

**9. தொண்டரடிப்பொடி யாழ்வார்:** சோழ நாட்டில் மண்டலங்குடியில பிறந்தவா. இவர் பாடியன திருப்பள்ளி எழுச்சி, திருமாலை என்பன. இவா பாடல்களில துன்ப மிகுதியைக் காணலாம்.

> **"ஊர்இலேன்; காணிஇல்லை; உறவும்மற்று ஒருவர் இல்லை;**
> **பாரில்நின் பாதமூலம் பற்றினேன்; பரமமூர்த்தி!**
> **கார்ஒளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்!**
> **ஆர் உளர் களைகண்? அம்மா, அரங்கமா நகருளானே."**

இவ்வாறு அழுது புலம்பும் பாடல்கள், கல் மனததையும் கரைக்க வலலன.

**10. திருப்பாணாழ்வார்:** உறையூரில பாணா குலததில பிறந்தவர். இவா பாடியன பத்துப் பாடல்களே. ஆயினும் திருமாலின் திருமேனியழகை அபபடியே ஓவியமாக்கி விட்டாா. இவர் பாடிய பாடல, 'அமலன் ஆதிபிரான்' என்று பெயா பெறும்.

**11. திருமங்கை ஆழ்வார்:** சோழ நாட்டில திருக்குரையலூரில் கள்ளர் மரபில பிறநதவா; நாலாயிரத் திவ்ய பிரபநதத்தில 1362 பாடல்கள் பாடியவா. இவா பாடியன பெரிய திருமொழி, திருககுறுநதாண்டகம், திருநெடுநதாண்டகம், திருவெழுகூற்றிருககை, சிறிய திருமடல , பெரிய திருமடல என்பன. இவா ஏராளமான திருப்பதிகளுக்குச் சென்றனா; புலமையாளா; 'கலீாகலீா' என ஒலிக்கும இனிககும் பாககள் அருளியவா. இவா பாடிய திருக்குறுந்தாணடகம், திருநெடுநதாணடகம் எனபன, திருநாவுககரசரின பாடல யாப்பினை நினைவுபடுததுகினறன

**12. மதுரகவியாழ்வார்:** பாண்டி நாடடில திருககோளூரில பிறந்தவா; திருமாலைப் பாடாமல் அவரின் அடியாரான நம்மாழவாரைப் பாடியவா. இவா பாடியன 11 பாடல்களே. இவை, 'கண்ணி நுண் சிறுத்தாம்பு ' என்று பெயா பெறும் இவை செவிக்கினிய, சிநதைக்கினிய பாடலகளாக அமைநதுளளன.

## பக்தி இயக்கத்தின் விளைவு

1. இயல, இசை, என்ற தமிழின் இரண்டு பிரிவுகளும் ஒன்றாகி, 'இயல் இசைத தமிழ்' என்னும் இனிய தமிழ கிடைத்தது. தேவாரம் இத்தகைய தமிழே.

2. ஆசிரியப்பா, வெண்பா, கலிபபா, பரிபாடல் என்ற பாவினால் பாடப்படும் நிலைமாறி, இசை உணர்வு மிக்க கலிபபாவின் வகைகள், விருத்தபபாக்கள் தோன்றின 'கலிக்கோவையால சந்தமே பாடவல்ல தமிழ் ஞான சம்பந்தன்' என்று சம்பந்தரே கூறுவார்.

3. தனித்துப் பாடும் நிலையோடு கூட்டாகத் சேர்ந்து பாடும் அமைப்புடைய கூட்டு வழிபாட்டுப பாடலகள் பிறந்தன.

4. அகப்பொருள கவிதைகள், மக்கள் கவிதைகளாக அமையாமல், இறைவனை நாயகனாகவும் உயிரை நாயகியாகவும் வைத்துப பாடும் மாற்றத்திறகு உள்ளாயின

5. பிள்ளைத்தமிழ், அந்தாதி, உலா முதலாய இலக்கிய வகைகள் முகிழ்த்தன.

6. புராண இதிகாசக் கதைகள் மிகுதியும் இலக்கிய வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

7. வடமொழிச் சொறகள், சஙககாலததைவிடக் கூடுதலாகக் கலநதன.

8. சைவ வைணவ தத்துவக் கருத்துக்கள் உருப பெற்றன; முழு வளர்ச்சி அடைநதன இவ வளாச்சியின பயனே பின்னாளில தோன்றிய மெய் கண்டாா நெறியும், இராமாநுசர் நெறியும் ஆகும்.

9. தமிழை 'இரககததின் மொழி' என்பா இது பொய்யன்று, உண்மை எனப் பக்திப பாடலகள் நிறுவுகின்றன. உருககம், நெகிழ்சசி ஆகியவை கவிதையில வெளிபபடும திறம், வியபபில ஆழ்த்துகின்றது.

10. வைணவத் தமிழின அழகும், ஓசையும தமிழில புது மெருகு உண்டாக்கின.

தமிழ இலக்கிய வரலாறறில, பகதிக் காலத்தில தோன்றிய அளவிற்கு வேறு காலததில – இலக்கியம தோனறவிலலை எனபா. அததகைய பாராட்டுக்கு உரிய இலககியத்தினைச சாாநதது

# 9. காப்பியங்கள்

செய்யுள் நான்கு வகைபபடும் அவற்றுள் தொடாநிலைச் செயயுள் என்பதும் ஒனறு. இத தொடாநிலைச செய்யுள், சொல்லால் தொடாவது, பொருளால தொடர்வது என இருபிரிவினை உடையது. பொருளால தொடாந்து வரும் செயயுள், இலககியக காப்பியம ஆகும் இக்காபபியம், பெருங்காபபியம், சிறுகாப்பியம் என இரு பகுபபுக்களைக் கொண்டது.

## பெருங்காப்பியங்கள்:

வாழதது, வணககம, வருபொருள என்ற மூனறில ஒனறு முனனால வரவேணடும, அறம, பொருள, இனபம, வீடு என்ற நாறபொருளும அமைய வேணடும, காபபியத தலைவன, தனககு ஒபபாரும மிககாரும இலலாத வனாய இருததல வேணடும மலை, கடல, நாடு, நகா, பருவம, ஞாயிறு, திஙகள ஆகியவறறின வருணனைகளும, திருமணம, முடிசூடல, பொழில விளையாடடு, புனலவிளையாடடு, மககட பேறு, ஊடுதல, கூடுதல முதலாய நிகழசசிகளும, போாச செயலகளும, எணவகைச் சுவைகளும, பாவஙகளும், சருககம, பரிசசேதம எனனும பிரிவுகளும கொணடதாய அமைய வேணடும இததகைய இலககணஙகள் வாயநததே பெருஙகாபபியம

## சிறுகாப்பியம்:

அறம, பொருள, இனபம, வீடு என்ற நாறபொருளகளும ஒனறோ, பலவோ, குறைநது, பெருஙகாபபியததிறகு உரிய ஏனைய இலககணஙகள பெறறு வருவது, சிறுகாபபியம எனபபடும

## தமிழில் காப்பியங்கள்:

தொலகாபபியா வனபபு, வணணம எனனும இலககியக கூறுகளை எடுததுரைககினறாா இவறறிறகு உரை வரைநத அறிஞாகள, பல காபபியங களை உதாரணமாக எடுததுக காடடுகினறனா இதனால தொல காபபியததிறகு முனனரே காபபியஙகள இருநதன எனபா ஆனால, அவை கிடைககவிலலை. இபபோது நமககுக கிடைபபன தனிபபாடலகளாக அமைநத சஙக இலககியஙகளே இவறறுளளும எடடுத தொகையில அமைநத பாடலகள, சிறுசிறு கவிதைகளாக உளளன பததுபபாடடில அமைநத பாடலகள, எடடுத தொகைபபாடலகளைக காடடிலும சறறுப பெரியனவாக, காபபிய அடிபபடை கொணடனவாக விளஙகுகினறன சிறுபாணாறறுப படை, பொருநராறறுபபடை, மதுரைககாஞசி முதலிய நூலகளில இக காபபியக கூறுகளைக காணலாம கி மு 2-ஆம நூறறாணடளவில தமிழமொழி, காபபிய நிலததில அடியெடுதது வைததது, சிலபபதிகாரம தோனறியது இதுவே தமிழின முதல காபபியம, இதனைத தொடாநது மணிமேகலை, சீவகசிநதாமணி, வளையாபதி, குணடலகேசி முதலான நூலகள இயறறபபடடன இவை ஐநதும ஐமபெருஙகாபபியம எனப பெயா பெறும இவை, பெருஙகாபபியம எனறு பிரிககபபடடமையால வேறு ஐநது நூலகள ஐஞசிறு காபபியம என வழங்கபபெறறன அவை உதயண குமார காவியம, நாககுமார காவியம, யசோதர காவியம, சூளாமணி, நீலகேசி எனபன

# ஐம்பெருங் காப்பியங்கள்

ஐம்பெருங காபபியங்களுள், சிலபபதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகிய மூன்றும் சமண சமயத்தின கொடை. மணிமேகலை, குணடலகேசி எனனும் இரண்டும பௌத்தம் தநத படையலகள இவற்றுள் சிலபபதிகாரம, மணிமேகலை ஆகிய இரண்டும் காலததால முந்தியன; ஆசிரியபபாவால அமைநதன. சிலபபதிகாரததில இசைபபாககளும உண்டு இவறறை யடுததுக கி பி 10ஆம் நூறறாணடளவில சீவகசிநதாமணி தோன்றியது விருததபபாவினால அமைநத முதல்காபபியம இதுவே இது, காபபிய இலககணஙகள பலவும நிறைநது, 'காபபிய மாளிகை' எனத் திகழ்கின்றது· தமிழ இலககியப போககை மாறறிப் புதுததிருபபத்தை ஏறபடுததியது இதனையடுதது வளையாபதியும் குண்டலகேசியும எழுநதன.

## 1. சிலப்பதிகாரம்:

கோவலன, கணணகி, மாதவி எனனும மூவரைத் தலைமைப பாத்திரங் களாகக கொணடு இளஙகோவடிகளால படைககபபடடது, ஆராயசசியாளா களுககு அறுசுவை விருநதாக அமைவது· ஆராயும தோறும் புதுப புதுச் சிநதனைகளை நலகுவது

## 2. மணிமேகலை:

மணிமேகலையின வாழவை மையமாகக கொணடு சீத்தலைச் சாததனாரால இயறறபபடடது பௌதத சமயக கருததுககளின களஞ்சிய மாகத திகழவது

(இவவிரணடையும பறறி இரடடைக் காபபியங்கள எனனும் தலைபபில காணக,)

## 3. சீவக சிந்தாமணி:

திருததககதேவரால பாடபபெறறது நூலின தனமையாலும் காப்பியத் தலைவனான சீவகனைச சிநதாமணி எனறு புகழநது கூறுதலாலும், சீவக சிநதாமணி என்னும பெயா கொண்டது 13 இலமபகஙகளையும, 3145 செயயுடகளையும உடையது உரையாசிரியரான நசசினாாககினியரால உரை வரையபபெறற உயாவினது காபபியப பேரரசா கமபரால மனம் உவநது பாராடடப பெறறது, மணஙகள பல கூறுதலால, மண நூல் எனனும பெயரும பூண்டது

ஏமாஙகத நாடடு மனனன சசசநதன தன மனைவி விசையை எனபவளிடம அளவறற காதல கொணடான அநதபபுரததையே வாழ்விட மாகக கருதினான, ஆடசியை மறநதான கடடியஙகாரன் ஆட்சியைக

இ.வ.5.

கைப்பற்ற எண்ணினான். இதனை அறிந்த சச்சந்தன், கருவுற்றிருந்த விசையையை மயிற்பொறியில் ஏற்றி அனுபபினான். கட்டியங்காரன் சச்சந்தனைக் கொன்றான். வெற்றி முரசு கொட்டினான். வெற்றியின் ஒலி கேட்ட விசையை மனம் கலங்கினாள். மயிற்பொறி இடுகாட்டில இறங்கியது. சீவகன் பிறந்தான். அவனைக் கந்துக்கடன் என்னும் வணிகன் எடுத்து வளாத்தான்.

சீவகன் வீரததிலும் இசைப்புலமையிலும் சிறப்புற்றான். காந்தரு வதததை, குணமாலை முதலான எண்மரை மணந்தான். கட்டியங்காரனைக் கொனறான். நாடடைக் கைப்பற்றி ஆணடான். இறுதியில துறவு பூண்டான்.

இக காபபியம், துறவை வற்புறுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்டது. ஆயினும், இனபச்சுவை நிறைநத காப்பியமாகத் திகழ்கின்றது. காவிய நுட்பங்களும் கறபனை அழகும், கருததுச செறிவும், நடையோட்டமும் மிக்க இக் காபபியம், தமிழத்தாயின் அணிகலன்களுள் சிறப்பிடம் பெற்று ஒளிவீசுகினறது.

மாமன்னனுக்கு மகனாக அரண்மனையில் பிறக்க வேண்டிய சீவகன். சுடுகாட்டில பிறக்கின்றான். இதனை அவலச்சுவை ததும்பப் பாடுகின்றார் திருததககதேவர்.

"வெவ்வாய் ஓரி முழவாக
விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர் அரங்கின்
நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்து இரங்கிக்
கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ?
இதுவோ மன்னர்க்கு இயல்வேந்தே."

இன்பச் சுவையைப் பாடுவதில இவா இணையற்றவர். அநங்கமாலை நடனம ஆடுகினறாள் இதனை,

"ஆடவர் மனங்கள் என்னும்
அரங்கின்மேல் அநங்கமாலை
ஆடினாள்; முறுவல் என்னும்
தோழியை ஐயன் காண
ஓடரி நெடுங்கண் என்னும்
ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும்
உரைத்துவார் கொடிய னாளே"

என்று விளக்குகின்றார். இப் பாடலில் ஓசை இனிமையும் கற்பனை நயமும் துள்ளிவரக் காணலாம்.

## 4. வளையாபதி:

இதனை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை. இந் நூலும் கிடைக்கவில்லை. இந் நூற்பாடல்களில சில (72 பாடல்கள்) புறத்திரட் டாலும், உரையாசிரியர்களின் உரையாலும் கிடைத்துள்ளன. இந் நூலில் அமைந்த கதையை,

"நவகோடி நாராயணன் என்பவன் வைர வாணிகன்; அவன் பிற்பட்ட குலத்தைச் சோந்த பெண்ணை மணந்தான்; இதனால் வணிக குலத்தினர் அவனை வெறுத்தனர்; அவன் அவளை விட்டுப் பிரிந்து வேற்றுநரடு சென்று பொருளீட்டிப பூம்புகாரில தன் குலப்பெண் ஒருத்தியை மணந்து வாழ்ந் தான். இநநிலையில், மூத்தவளின் மகன், தன் தந்தை யார் என்பதனை அறிநது, தன் தாயிடம் தந்தையைச் சேர்க்கினறான்". என்று வைசிய புராணம் கூறுகினறது. இக கதை, சாதி வேறுபாடுகளைத் தகர்க்கும் முறையில் அமைநதிருக்க வேண்டும்.

இந் நூறபாடல்களில் ஒன்று, மக்கட் செல்வத்தின் மாண்பினை மிக அழகாக எடுத்துரைககின்றது.

**"பொறையிலா அறிவு; போகப் புணர்விலா இளமை; மேவத்**
**துறையிலா வனச வாவி; துகிலிலாக் கோலத் தூய்மை;**
**நறையிலா மாலை; கல்வி நயமிலாப் புலமை; நன்னர்ச்**
**சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வம் அன்றே,"**

சேயிலலாத செலவததை விளக்க எத்தனை எடுததுக் காட்டுக்கள்! இக் கவிதை இக காலக் கவிதைபோல இனிமையும் எளிமையும் தெளிவும் உடையதாக அமைந்திருக்கின்றது.

## 5. குண்டலகேசி:

இது நாதகுததனார் என்பவரால பாடப் பெற்றது. இந நூல, முழுதும் கிடைக்கவிலலை. புறத்திரட்டு முதலிய நூல்களிலிருந்து 224 பாடலகள் கிடைததுள்ளன.

இராசகிருக நாட்டு அமைச்சனின் மகள் பததிரை, இவள் காளன் எனனும் கள்வன் ஒருவனைக் காதலித்து மணநது கொண்டாள். ஒரு நாள் ஊடல காரணமாக அவனைக் கள்வன் என்று கூறிவிட்டாள். அதனால் அவன், அவளைக் கொலல எண்ணி, மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்றான்; கொலல முற்பட்டான். அதனை அறிநத அவள், அவனையே மலையுச்சியில இருந்து தள்ளிக் கொன்றுவிட்டாள். பினனர், உலக வாழ்வை

வெறுத்துச் சமணத் துறவியானாள். பலருடன் சமயவாதம் செய்தாள். இறுதியில் புத்தரிடம் தோற்றுப பௌத்த மதத்தைச் சார்ந்தாள்.

இந்நூலில் நிலையாமையை உணர்த்தும் பாடலகள் கருத்துவளம் நிறைந்தன

**"பாளையாம் தன்மை செத்தும், பாலனாம் தன்மை செத்தும்,**
**காளையாம் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்**
**மீளும் இயல்பு மின்னே! மேல்வரும் மூப்பு மாகி**
**நாளும்நாள் சாகின் றோமால்! நமக்குநாம் அழாத தென்னே!**

இந நூலுக்கு மறுபபாக எழுந்ததே நீலகேசி என்பர்.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

ஐஞ்சிறு காபபியங்களான ஐநது நூல்களும் சமணத்தைச் சோநதன இவை கி பி. 10 ஆம் நூறறாண்டிற்குப பின தோன்றியன வாதல வேண்டும் என்பா இககாபபியஙகளுள் சூளாமணி, இலக்கிய நயமும் காவியச் சிறப்பும் உடையது; பெருங் காபபியமாக மதிக்கத் தக்கது. இவ்வாறிருக்க, இதனை ஏன சிறு காபபியததில சோததனா என்று தெரியவில்லை.

**1. உதயண குமார காவியம்:** உதயணன் வரலாற்றைக் கூறுவது, ஆறு காணடஙகளும 367 பாடல்களும் உடையது இநநூலின் நடை சிறபபாக அமையவிலலை.

**2. நாக குமார காவியம்:** மறைந்து போன தமிழ் இலக்கியங்களுள் இதுவும் ஒன்று.

**3. யசோதர காவியம்:** இயற்றியவர் பெயா தெரியவிலலை. இந்நூல் 5 சருககங்களையும 320 பாடலகளையும் கொண்டது உயிாக்கொலையின் தீமையை விளக்குவதற்காகப் பாடபபடட காப்பியம் இது.

**4. சூளாமணி:** இதனை இயற்றியவர் தோலாமொழித தேவா. இந நூல 12 சருக்கங்களையும் 2131 பாடல்களையும் உடையது. திவிட்டன் என்பவன், சுயம்பிரபையை மணம செயது கொண்ட வரலாறறைக் கூறுவது. சீவகசிநதாமணி போனற இலக்கியச் சுவை வாயந்தது

**5. நீலகேசி:** ஆசிரியா பெயா தெரியவிலலை. இந் நூலுக்கு 'நீலகேசி திரட்டு' என்ற பெயரும் உணடு. இது 10 சருககங்களையும் 894 செய்யுட் களையும் கொணடது. நீலி எனனும பேய்பபெண் சமண முனிவரால பேயமை நீங்கி, சமணக் கருத்துககளை உணாநதாள; பௌத்தாகளுடன் வாதிட்டு வென்றாள, அவர்களைச் சமண சமயத்திற்கு மாற்றினாள எனபதனை நகைச்சுவை மிளிர இநநூல பாடுகின்றது.

இந நூல, குணடலகேசிக்கு எதிா நூலாகத தோன்றிய தருக்க நூல் என்பா

# பிற காப்பியங்கள்

பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற பிரிவில் அடங்காமல், சிறப்புடன விளங்கும் காப்பியங்கள் கம்பராமாயணமும், பெரிய புராணமும் ஆகும். இவை, காபபிய அழகு நிறைந்த கவினார்ந்த இலக்கியங்கள்.

## கம்பராமாயணம்:

"கவிச சக்கரவாத்தி கம்பன்", "கல்வியில் பெரியவன கம்பன்", "கம்பன் வீட்டுக் கட்டுததறியும கவிபாடும்", கம்பநாடன கவிதையில்போல கற்றோர்க்கு இதயம் களியாதே" எனப பலராலும் பாராட்டப் பெற்ற மாபெரும் இலக்கிய மேதை கம்பா. இவா, வடமொழியில வானமீகியால எழுதபபடட இராமா யணத்தையும, தமிழில ஆழ்வார்களா பாடியருளிய இராம அவதாரச் சிறபபுக் களையும் கொண்டு தமிழில இராமாயணததை இயறறினாா. இவா காலம கி.பி. 12 ஆம் நூறறாண்டு. இநநூலுக்கு இவா இடட பெயா இராம காதை என்பதே. தமிழ், கம்பனால சிறபபுற்றது என்றால அது மிகையாகாது. "கம்பன எனறொரு மானிடன் வாழநதான" என்று பெருமை கொள்வாா கவியரசா பாரதியாா.

கமபராமாயணம் உலக இலக்கியங்களுள் ஒன்றாக வைத்து மதிக்கததககது. ஹோமர் எழுதிய இலியட்டையும், வொஜில தநத ஈனிட்டையும், மில்டனின் சுவர்க்க நீக்கத்தையும், வியாச பாரதத்தையும், தனககு முதல நூலாக அமைந்த வான்மீகி இராமாயணத்தையும் கூடக் கம்பராமாயணம் வெனறுவிட்டது என்பாா வ.வே.சு. ஐயர்

கம்பா, நாட்டுப்பற்றும் மொழிப்பறறும் உடையவர். கோசல நாட்டினைப் பாடும்போது காவிரி நாடடினைக் கருத்தில் கொண்டு பாடுவாா பாண்டி நாடடைப புகழும போது, 'முத்தும் முத்தமிழும் தந்துமுந்தும் நாடு,' என மகிழ்ச்சி கொள்வாா இவா சிறந்த குறிக்கோளா மிககவா; இலட்சியப் படைப்பாளா; இவருடைய இலட்சிய உலகம, எல்லா நலமும் வளமும் பூத்துக் குலுங்குகிறது

**"கள்வர் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாரும்**
**கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை; மாதோ"**

**"கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற**
**வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாரும் இல்லை;**
**எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே**
**இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ."**

கள்வர்கள் இல்லை; காவலரும் இலலை, கொள்வாருமை இல்லை; கொடுபபவரும் இல்லை; கல்லாதவரே இல்லை; அனைவரும் அறிஞர்;

ஆதலால அறிஞரும் இல்லை; இலலாரும் இல்லை உடையாரும் இலலை; இத்தகைய புதிய உலகம் — பொதுவுடைமை உலகம் காண விரும்பினார் — அந்த உலகமாகக் கோசலததை வருணித்தார.

கம்பா பழைய தமிழ் இலககியங்களில மூழ்கித் திளைத்தவர். அவற்றின் கருததுககளைத் தம் பாடல்களில அமைத்து மகிழ்பவா. என்றாலும் சில கருததுககளை மாற்றிப் புதுக் கருததுககளைக் கூறியுள்ளாா. மன்னன் உயிா, மககள உடம்பு என்பது புறநானூற்றுத் தமிழகததின் கொள்கை. "மன்னன் உயிாததே மலாதலை உலகம்" என்பது புறநானூறறுப் புலவரின வாக்கு இதனைக் கண்டாா கம்பா. மன்னனுக்காகவா மக்கள் வாழ்கிறாாகள்? மககளுககாக அலலவா மனனன் இருக்கிறான்? என்று நினைத்தார். பழஙகொளகையை உதறித் தள்ளினார், மக்கள உயிா; மன்னன் உடல் என்று முழகக மிட்டாா.

*"வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்*
**உயிரெல்லாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்**
**செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்**
**உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"**

எனறு தசரதனைக குறிக்கும்போது, இக்கருததை அமைககின்றாா. முடியாடசி ஓஙகிய காலததில, குடியாட்சியின உயிர்க கொள்கையைப் பாடிய கம்பனைக் கலியுகத தீரககதரிசி எனறு சொலலுவதில் தடை என்ன இருக்க முடியும!

கம்பரின காப்பியம், அமைபபிலும பாததிரப படைபபிலும் கவிதை அழகிலும கறபனைச செறிவிலும் ஈடு இணையறறு விளங்குகின்றது தமிழக் காபபிய வளாச்சியின உச்சமாகத் திகழ்கினறது இக் காப்பியம் 6 காண்டங்களையும், 113 படலங்களையும், சுமாா 10,000 பாடலகளையும கொணடது விருத்தபபாவால இயன்றது. இபபாவினைக் கம்பா எவ்வளவு சநதஙகளில கையாள முடியுமோ அவ்வளவு சநதஙகளில் பாடியுள்ளார். இதனாலேயே இவரை "விருததமெனனும ஒண்பாவில உயர் கம்பன" எனறு பாராட்டுவா. இவரது தமிழ்நடை தனிச சிறபபு வாயநதது. இவரது தமிழைக 'கமபன தமிழ' என்று புகழ்வா. 'கம்பன புகழ்பாடிக் கனனித்தமிழ் வளாபபோம.'

## பெரிய புராணம்

இதனைப் பாடியவர் சேககிழார் பெருமான். கி.பி. 12 ஆம் நூற்றாணடின முறபகுதியில வாழ்நதவா இக காப்பியம் 2 காண்டங்களை யும் 13 சருககங்களையும் 4286 பாடலகளையும் உடையது; அறுபத்து மூன்று நாயனமாாகளின — சைவபபெருமககளின் — வரலாற்றைக கூறுவது. தமிழ் நாட்டுக் கோயில்கள், மக்கள் வாழ்க்கை முறை, ஆட்சி முறை முதலியவற்றை

விளக்குவது. இவ்வகையில் இக் காப்பியம், தமிழ்நாட்டு வரலாற்றைக் கருவாகக் கொண்டது. இந்நூலினை வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று நூல் என்று போறறுவா. சைவ சமய அறிஞர்களைப் பற்றிக் கூறுவதால் சமயக் காப்பியம் என்றும் புகழ்வர். 12ஆம் நூற்றாண்டில் தமிழ் இனத்தையும் பண்பாட்டையும் நிலைக்கச் செயவதற்காகத் தோன்றிய தேசிய இலக்கியம் என்று பெயர் சூட்டுவாா அறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள். பக்திப் பாடல்களின் – தேவாரத திருமுறைகளின் – விளக்க நூலாகத் திகழ்கின்றது என்பா ஒப்பியல் ஆய்வாளர்கள்.

சேககிழாா, சோழமனனன் அநபாயனிடம் முதலமைச்சராகப் பணிபுரிந்தாா. அநபாயன், சிந்தாமணியில் ஈடுபட்டு அதனையே படித்தான். இதுகண்ட சேக்கிழார், "சிந்தாமணி சமணக் கொள்கைகளை உடையது; அது வாழ்வுக்கு உதவாது" என்று கூறினார். உடனே மன்னன், 'வாழ்வுக்கு உதவுவது எது? என்றான். "சைவ அடியாாகளின் வரலாறே" என்றார் சேக்கிழார். அது கேட்ட மன்னன், "பெருநூல ஒன்று பாடியருளுக" என்று வேண்டினான்; சேக்கிழாா சுநதரரின் திருத்தொண்டத் தொகையையும், நம்பியாணடார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிபபடையாகக் கொணடு, பெரியபுராணத்தைப் பாடினாா. இந் நூலுக்குத் 'திருத்தொண்டா புராணம்' என்ற பெயரும் உண்டு.

பெரிய புராணம் பலரின் வாழ்க்கையைக் கூறுவது ஆயினும், இக் காப்பியத்தின் தலைவர் சுநதரமூாத்தி சுவாமிகள ஆவார். இவரைச் சேக்கிழார், காபபியம் முழுதும் இணைத்துப் பாடுகின்றனா. இக் காப்பியம், கற்பனை நயமும் காப்பியச சுவையும் சைவமணமும் சானறாண்மைத் திறமும் மிக்கது. இதில் பக்திச்சுவை விஞ்சி நிறகின்றது. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப பாடிய கவி வலவ" எனறு, இச் சுவை நயத்தை எடுத்துரைப்பார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

சஙக காலத்தில தனித்தனிப் பாடல்கள் தோன்றின. அவை பொருளிலும் அளவிலும் சிறியனவாக இருந்தன. பெரும்பாலும் ஆசிரியப்பாவில் இயன்றன. இந்நிலை மாறிச் சங்க மருவிய காலத்தில சிலபபதிகாரமும் மணிமேகலையும் எழுநதன. இவையும் ஆசிரியப்பாவில அமைந்தனவே. இவறறிற்குப பின், தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இசையுடன் பாவினைக் கையாண்டு திருத்தக்க தேவர், சிந்தாமணியை இயறறினாா். இதனையடுத்துப் பல காபபியங்கள் தோன்றின. சோழப் பேரரசு வாழ்வும் வளமும் விரிவும் பெற்றிருந்த பொறகாலத்தில், பெரியபுராணமும் கம்பராமாயணமும் பிறந்தன. தமிழ்க் காப்பிய இலக்கணம் பெருமைப் படத்தக்க அளவில் அமைநதுள்ளது. உலக இலக்கியச் செல்வாக்கில் கம்பரும் ஒருவர் ஆனார்; ஒப்பற்றவா ஆனாா.

# 10. சிற்றிலக்கியங்கள்

## 1. குறவஞ்சி

கவலையற்ற வாழ்க்கை உடையவர்கள் குறவாகள். இவர்கள ஆடியும் பாடியும் அகமகிழ்வார்கள்; வானம்பாடி யெனத் திரிவாாகள். இவர்களுள், பெணகள் குறவஞ்சி எனப்படுவா. இப் பெண்கள், குறி சொல்லுதறகாக ஊாகள்தோறும் செல்வார்கள் இவ்வாறு குறவஞ்சியா குறி சொலலும் செய்தியைக கருவாகக் கொண்டு புலவர்களால படைக்கபபட்டதே குறவஞ்சி இலககியம். இதனைக் குறம் எனறும் கூறுவா.

**குறவஞ்சியின் கரு:** பாட்டுடைத தலைவன நகரில பவனி வருவான். பந்தடித்து வநத தலைவி ஒருத்தி அவனைக் கண்டு காதல கொள்வாள்; நெஞ்சழிநது நாணழிந்து நிறையழிநது துன்பத்தில மிதப்பாள்: தோழியிடம் துன்பத்தை உரைப்பாள்; இந நிலையில குறி சொலலும் குறத்தி வருவாள்; வந்த குறத்தியைத தலைவியும் தோழியும எநத ஊா, என்ன போ என்று வினவுவா; வினவவே குறத்தி நாடு, நகர், மலைவளம், சாதிவளம், நதிவளம், தலச்சிறப்பு முதலியன கூறுவாள. பின், தலைவியின் கையைப் பார்த்து, அவள் தலைவனை அடைவது உறுதி எனறு குறி சொல்லுவாள். இது கேட்ட தலைவி மகிழ்வாள், பரிசுகள் கொடுப்பாள் பரிசு பெற்ற குறத்தி, தன் இருபபிடம் திரும்புவாள். அப்போது அவளைத் தேடிக் குறவன் வருவான்; கணடு மகிழவான், இருவரும் சோநது பாட்டுடைத் தலைவனை வாழ்த்துவர். இதுவே குறவஞ்சியின் பொருள்.

**குறவஞ்சி நூல்கள்:** குறவஞ்சி, நாடோடி மக்கள் இலக்கியம்; நாடக அமைப்பைக் கொண்ட சிற்றிலக்கியம் இதில ஈடுபட்ட புலவர்கள், இக் குறவஞ்சியை இலக்கியச செறிவுடைய சிற்றிலக்கியமாகப படைத்தனர். தமிழில 40க்கு மேற்பட்ட குறவஞ்சிகள் உள்ளன. இவை தலைவன் பெயராலோ, தலைவியின் பெயராலோ பெயா பெற்றன; அல்லது பாடடுடைத் தலைவனின் ஊாப் பெயரால் பெயா பெற்றன. சரபேந்திர பூபால குறவஞ்சி, மீனாட்சியம்மை குறம் எனபன தலைவன பெயராலும் தலைவியின் பெயராலும் அமைந்தவை. திருக்குற்றாலக் குறவஞ்சி, திருவாரூாக் குறவஞ்சி எனபன பாட்டுடைத் தலைவனின் ஊாபபெயரால அமைநதவை

குறத்திப் பாட்டு என்று வழங்கபபட்ட இலககியமே கி.பி. 17ஆம் நூற்றாண்டு முதல், குறவஞ்சி எனனும இலக்கியமாக மலாநதது. முதல முதலில குறவஞ்சி பாடியவா, மீனாட்சியம்மை குறம் பாடிய குமரகுருபரரே. குறவஞ்சிகளில சிறந்தது, திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும்.

**திருக்குற்றாலக் குறவஞ்சி:** இதனை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயா; திருநெல்வேலி மாவட்டத்தினா; 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில வாழ்ந்தவா; திருக்குற்றாலத்தின மீது அளவு கடந்த பற்றுடையவா; இவா பாடிய நூல்களுள் இக் குறவஞ்சி இவருக்குப பெரும் புகழ சோத்தது இவா, திருக்குற்றால நாட்டை வருணிக்கும பகுதி மிகவும் சிறப்பாக இருக்கினறது.

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர் தென் ஆரிய நாடே"

இப்பாடலில எதுகை அழகும் கறபனைச் சிறப்பும் சந்த இனிமையும் மிக்கிருக்கக் காணலாம். இததகைய பாடலகள் நூல எங்கும் அமைநது, இன்பம் தருகின்றன. தலைவி பந்தாடுவதைப் பற்றிய பாடலகள, பநதடிப்பது போன்ற ஓசையுடன் படிபபோா மனத்தை ஈர்க்கின்றன.

இந்திரையோ! இவள் சுந்தரியோ! தெய்வரம்பையோ
மோகினியோ! மன
முந்தியதோ! விழிமுந்தியதோ! கர முந்திய
தோ!எனவே உயர்
சந்திர சூடர் குறும்பல ஈசர் சங்கணி
வீதியிலே, மணிப்
பைந்தொடி நாரி வசந்தஒய் யாரிபொற்
பந்துகொண் டாடினளே.

இத்தகைய இனிமையாண பாடலகளைக் கொண்ட இந் நூலினைப் படிக்கத் தொடங்கினால, இடையில நிறுத்த மனம் வருவதில்லை.

## 2. பரணி

தமிழில உளள சிற்றிலக்கியங்களில கடவுளைப் பற்றியன மிகப் பல. ஏனைய சிற்றிலக்கியங்கள அரசர்கள், குறுநில மன்னாகள், செல்வாகள் ஆகியோரின் அரசியல மேன்மையையும் வெற்றிச் சிறப்பையும கொடைப பெருமையையும் பாராட்டுவன. எதனையும் மறக்கலாம், நன்றியை மறத்தல் கூடாது எனபது வள்ளுவனின் ஆணை. இந் நன்றியறிதலின் விளை வாகவே தமக்கு உதவி செயத தலைவனுடைய வீரம், கொடை முதலிய

வற்றைப புகழ்ந்து பாடும் வகையில, இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் எழுநதன. இவ்வாறு அமைந்த புறப்பொருள் இலக்கியங்களில தலைசிறந்தது பரணியாகும்.

**பரணி – பெயர்க் காரணம்:** பரணி எனனும் பெயருக்குரிய காரணங்கள் பலவாறாகச சொல்லப்படுகின்றன. வேல், வாள் முதலிய படைக் கருவி களால் பரண் அமைத்து, அப பரண்மேல இருந்துகொண்டு, வேநதனின் வெற்றியைப் பாடுவதால பரணி என்னும் பெயா பெறறது என்பா சிலர். அணிகள் வைக்கபபடும் செப்புக்குப பரணி என்று பெயா; அச் செப்பினைப போல உயாநத கறபனையும் அணியும் கொண்ட நூல ஆதலால பரணி எனபபட்டது எனபர் வேறு சிலா. பரணி நட்சததிரத்தில் காளிககு வழிபாடு செய்வதால இப பெயர் வநதது எனபா மறறும் சிலர்.

வெறறி பெற்றவனைப புகழநது பாடுவதே பரணி நூலின் குறிக்கோள். ஆயினும, இந் நூலின பெயா தோற்றோனைச் சாாநது அமைந்திருப்பது வியபபுக்கு உரியது, சிறபபு வாயந்தது.

**பரணியின் பொருள்:** வேந்தன ஒருவன, மாற்றானது மண்ணைக் கொளவதற்காக வஞ்சி மாலை சூடிப படை எடுத்துச் செலவான். பின், உழிஞைமாலை அணிநது பகைவன மதிலை முற்றுகையிடுவான. தும்பைமாலை சூடிப் போர் செயவான போரில எதிாதத வீராகள மடிவா இரததம ஆறாக ஓடும. வாகைமாலை சூடி வெற்றிக்களிப்பில ஆழ்வான. இவ் வெற்றியைப பொருளாகக கொணடு பாடுவதே பரணி. எனவே, வஞசி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய புறத்திணைகளின் பொருள்கள பொருநதப பொறபுடன பாடுவதே பரணியாம என்பது கூறாமலே அமையும் ஆயினும் கடை திறபபுப பகுதி அமைந்திருப்பதால், அகபபொருளும் சோநது ஒளிாவதைக் காண்கிறோம்.

**பரணி – இலக்கணம்:**

> "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
> மான வனுக்கு வகுப்பது பரணி"

எனபது பரணிககு உரிய முதல இலககணம. ஆயிரம யானைகளைப போரில கொனற பெருவீரனைப புகழநதே பரணி பாடவேணடும். அவவாறு பாடும்போது சநத இனபம் மிகக கலித்தாழிசைகளால பாடவேண்டும். இபபரணியில கடவுள் வாழ்தது, கடைதிறபபு, காடுபாடியது, கோயில பாடியது, தேவியைப பாடியது, பேயகளைப பாடியது, பேய முறைபபாடு, காளிககுக கூளி கூறியது, களம பாடியது, கூழடுதல் என்னும உறுபபுகள் உட்பிரிவுகளாக அமையும்.

**பரணி நூல்கள்:** கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல், கி.பி. 12ஆம் நூற்றாண்டுவரை சோழப் பேரரசர்கள் தமிழகத்தில் மிகச் செழிப்பாகச் செங்கோலோச்சினர். இவர்களின் ஆட்சிக் காலம் தமிழக வரலாறறில வீரம் செறிநத காலமாக விளங்கியது. எனவே, இவர்களின வீர உணாவினைப் பாராட்டிப பாடும் மன எழுச்சிக்குப் புலவர்கள் உள்ளா னாாகள. பாடுதற்கு ஏறற இலக்கியமாகப பரணியைக் கொண்டாாகள்; பரணி நூலகள் தோன்றின. சோழா காலத்திற்குப் பின், தெய்வங்கள் செய்த போாகளையும் சமயக்கொள்கைகளை விளக்குதற்காக உருவகப் போாகளையும் கொணடு பரணி பாடினாாகள. இனறு நமக்குக் கிடைக்கும் பரணி நூலகள கலிங்கததுப பரணி, தக்கயாகப பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப பரணி, பாசவதைப் பரணி, இரணியன்வதைப பரணி, திருச்செநதூாப பரணி என்பன. இவையனறிப் பெயரளவில சில பரணி நூலகள தெரிகினறன. கிடைத்த பரணி நூல்களுள் கலிங்கததுப் பரணியே காலத்தால் முநதியது; கட்டுக் கோபபாலும் கவிதையழகாலும் உயாநதது.

**கலிங்கத்துப் பரணி:** இதனைப் பாடியவா சயங்கொண்டாா. இவா சோழப பேரரசில வாழ்ந்த கவிச்சக்கரவாத்தி மூவருள ஒருவா. பரணி பாடுவதில தலைசிறநதவா. எனவே "பரணிக்கோா சயங்கொண்டான்" என இவரைப புகழ்வர்; காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

கலிங்கத்துப்பரணி வீரமென்னும் இழை கொண்டு நெய்யப பெற்ற வெறறிப்பனுவல்; சோழா குலத் தொடககம் முதல, முதல குலோத்துங்கனின முதிாநத அரசியல வாழ்வு வரை விளக்கும் தமிழ் மண்ணின முதல் வரலாறறு நூல் இநநூலில காணப்படும் வரலாற்றுச் செய்திகள், கலவெட்டுக்களும் செபபேடுகளும் கூறும் செயதிகளுடன் ஒத்துளளன. இவ் வகையில இந்நூல, வரலாற்று ஆராய்ச்சிக்குத துணை புரியும் ஒளிவிளக் காகப் பயனபடுகின்றது.

இந்நூலில உளள சில தாழிசைகளைப் படித்தால கோழையும் வீரனாகி விடுவான. காளிதேவியின் சந்நிதானததில் வீராகள திரண்டு நிற்கின்றார் கள்; தேவியிடம் வரம் வேணடுகின்றார்கள்; பின்னர் வேள்விததீ வளாக்கின் றார்கள்; தங்களின் விலா எலும்புகளைப் பறித்து வேள்விததீயில விறகாக இடுகின்றாாகள! உடலிலிருந்து வழியும் இரதததை நெயயாகச் சொரிகின் றாாகள எவ்வளவு பெரிய வீர வேள்வி! வேள்வி முடிந்தது. வீரர்கள தம் தலைகளைத் தாமே அறுத்துத் தம் கையாலேயே தேவியிடம் கொடுக்கின் றாாகள்; தலைகள் தேவியை வாய்மணக்க வாழ்த்துகின்றன; தலையறற உடல்கள் கடமை தவறாமல் கும்பிட்டு நிற்கின்றன; நினைத்துப பாாககவும் முடியாத வீரச் செயலகள!

சொல்லரிய ஓமத்தீ வளர்ப்ப ராலோ!
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர வாங்கி
வல்லெரியின் மிசைஎரிய விடுவ ராலோ
வழிகுருதி நெய்யாக வார்ப்ப ராலோ!
அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ!
அரிந்தசிரம் அணங்கின் கைக் கொடுப்ப ராலோ!
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ!
குறையுடலும் கும்பிட்டு நிற்கு மாலோ!

இப் பாடல்களைப் படிக்கும்போது தோள விம்முகின்றன; சோாவடைந்த உள்ளம் துள்ளிக் குதிக்கின்றது. இத்தகைய வீரச்சுவை மட்டுமா கலிங்கத்துப பரணியில விஞ்சி நிற்கின்றது? காதற்சுவையும் கனிந்து நிற்கின்றது. பெண்கள, தம் கூந்தலில செங்கழுநீா மலாகளைச் செருகுகினறாாகள். இம் மலர்களை மாத்திரமா செருகுகின்றாாகள்? இலலை! இவ வுலகததில் வாழும் இளைஞர்களின் உயிாகளையும அல்லவா பறிததுச் செருகுகினறாாகள்?

"செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழல்மடவீர்!
உம்பொற் கபாடம் திறமினோ!

இப பாடலில கவிதையின் வேகம், இன்பச் சுவையின் மிடுககொடு விரைநது பாயகின்றது, இநநூலில 50க்கு மேற்பட்ட சந்தவகைகள இடம் பெற்றுள்ளன இவை, இடத்துக்கேற்பப பொருளின சிறபபை உயர்த்து கின்றன. "நான் களைபபடைநதபோது இநநூலில 'எடும் எடுமென எடுத்ததோா' என்பது முதலிய சில தாழிசைகளை முடுககாகச் சிலநிமிடம் படிபபேன்; என் களைப்பு தீாந்துவிடும" எனபார் மோதூா கநதசாமி முதலியாா. அது முறறிலும் உணமையே.

வீரமும் காதலும நிறைநத இநநூலில நகைச்சுவை ததும்புகின்றது. தமிழ் இலக்கிய உலகில கலிங்கத்துப் பரணி, தனி இடம பெறும் தகுதி வாயநதது.

"எனக்கு மிக விருபபமான இலககியம் ஒனறு உண்டெனறால அது கலிங்கத்துப் பரணியே"
– பேரறிஞர் அண்ணா.

## 3. பள்ளு

உழுதுண்ணும் பெருமைக்கு உரிய சமுதாயம், பள்ளா சமுதாயம்; இவர்கள் வாழும் நிலம், வயல நிறைநத மருதம்; இவாகளின அகவாழ்க்கை வளமானது; புற வாழ்க்கை, பிறரை நம்பி அமைவது இத்தகைய இயல்பினையுடைய பள்ளா சமுதாயத்தைப பறறியதே பள்ளுபபாட்டு.

பள்ளின் கரு: பள்ளன் ஒருவன்; அவனுக்கு மனைவியர் இருவர்; இருவரும் வெவ்வேறு ஊர்களையும் வெவ்வேறு சமயங்களையும் சார்ந்த வாகள அவன இளையாளிடம் மோகம் மிகக் கொண்டான். இதனால் மூத்தாள் வெகுண்டாள். குடும்பத்தில அமைதி எங்கே இருக்கும்? மூத்தாள், பண்ணை ஆண்டையிடம் பள்ளனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறிப் பளளனைச் சிறையிடச் செய்தாள். பின்னா, அவளே அவன மீது இரக்கங்கொண்டு விடுதலைபெற உதவுகின்றாள். பள்ளனை மாடு முட்டுகிறது. பள்ளியர் இருவரும் ஏங்கி அழுகின்றனா. பள்ளன் நலம் பெறுகின்றான். உழவுத் தொழில நடைபெறுகினறது. நெல விளைகின்றது. நெலலைப் பிரித்துக் கொடுக்கும் முறையில மூத்த பள்ளிக்கும் இளைய பளளிக்கும் வாக்கு வாதம் (ஏசல) ஏற்படுகின்றது. மூத்தவள், இளையவளின் சமயததுக்கு உரிய கடவுளைக் கேலி செயகின்றாள். இளையவள், மூததவளின சமயத்துக்குரிய கடவுளை எளளி நகையாடுகினறாள். பின் ஒன்றுபடுகின்றனா. இதுவே பள்ளு இலககியத்தின அமைபபாகும்.

பள்ளு இலக்கியததில, பளளாகளின வாழக்கை கலைவண்ணம் பெறுகினறது; மருதநிலம் பற்றிய செயதிகளாக நாட்டு வளம், மழைக்குறி, ஆற்றுநீாப பெருக்கு, மாடுகளின் வகை, நெறகளின் வகை முதலியன கூறப்படுகின்றன. சுருக்கமாகக் கூறினால, உழவுத் தொழிலினைச் சார்ந்த பல்வேறு நிலைகளைப் பள்ளு நூலகள் இயம்புகின்றன எனலாம்.

## பள்ளு நூல்கள்

தொலகாபபியத்தில் 'ஏாக்களம் பாடுதல' என்ற துறை ஒன்று உள்ளது. சஙக காலததில ஏாக்களம் பாடும் பொருநா என்ற பிரிவினா இருநதனர். இவற்றால மருத நில வாழ்வினை — உழு தொழிலைப பாடும் பழக்கம் இருந்தது என்பது தெரிகினறது சிலபபதிகாரத்தில் 'ஏர்மங்கலம்' என்று இததொழில் சிறப்பிக்கபபடுகினறது இத்தொழிலைப பறறிய பாடடுக்கு, 'உழததிபபாடடு' என்று பினவநதோா பெயா வைததனர். இவ் உழததிப் பாட்டே விரிவடைநது, இயலும இசையும் நாடகமும் கலந்து, பள்ளுப்பாடடு என்னும சிற்றிலக்கியமாகிற்று. இக்காலம், கி பி. 17ஆம் நூற்றாணடு ஆகலாம் பளளு இலக்கியததில விருத்தபபாவும் சிநதும் கலந்து சுவையை மிகுதிப படுததும்

"நெலலு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எணண முடியாது" என்பது பழமொழி. அநத அளவுக்குப் பள்ளு நூலகள் தோனறியிருககினறன, முககூடற பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, கதிரை மலைப பளளு, சீகாழிப்பள்ளு, திருச்செந்தில பள்ளு, திருமலைப பளளு,

திருவிடைமருதூர்ப் பள்ளு, புதுவைப் பள்ளு, மாந்தைப் பள்ளு எனப் பள்ளு நூல்கள் பல உள்ளன. இவற்றுள் சிறந்தது முக்கூடற பளளே.

முக்கூடற் புள்ளு: இதனை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை. திருநெலவேலி மாவட்டத்தில, தாமிரவருணி ஆற்றில் சிற்றாறும் கோதண்டராமநதியும் கலக்கும் இடததில் உள்ள இடம், முக்கூடல எனப்படும். அங்குக் கோயில கொண்ட இறைவன் முக்கூடல அழகா ஆவார். அவாமீது பாடபபட்டதே முக்கூடற பளளு. இந்நூல், பொருளமைப்பாலும், கவிதை நயத்தாலும் ஈடு இணையற்று விளங்குகின்றது.

மின்னல மின்னுகிறது: கொம்பு சுற்றிக் காற்று அடிக்கின்றது; சொறித் தவளை கததுகின்றது; நணடுகள், சேற்றால் வளையை அடைக்கின்றன. இக் குறிகளைக் கணடதும் ஆற்றுவெள்ளம் நாளை வந்து விடும் எனப் பள்ளர் கள் மகிழ்கின்றாாகள்.

"ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி, மலை
யாழ மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே!
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே! – கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே!

"சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே! – மழை
தேடியொரு கோடி வானம் பாடி யாடுதே!
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைச் – சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே."

இபபாடலைப் படிக்குமபோது மின்னல மினனுவதுபோலவும், இடி இடிப்பது போலவும, காற்று அடிபபது போலவும் உணாகின்றோம். இத்தகைய சந்தப பாடலகள் இந்நூலில பல உள்ளன.

மூதத பளளியும் இளைய பள்ளியும ஒருவரை ஒருவர் ஏசிக் கொளகினறாாகள். இநத ஏச்சுரைகளில நகைச்சுவை ததும்புகின்றது.

மூத்தபள்ளி:

"மாதொருத்திக் காசைப்பட்டுப் பொன்னின் மயமாம் – பனி
மலையேறிப் போனான் உங்கள் மத்தன் அல்லோடி!

இளையபள்ளி:

காதலித்துத் தம்பியுடன் சீதை பொருட்டால் – அன்று
கடலேறிப் போனான் உங்கள் கண்ணன் அல்லோடி!

மூத்தபள்ளி:

சுற்றிக்கட்ட நாலுமுழத் துண்டுமில்லாமல் – புலித்
தோலை உடுத்தான் உங்கள் சோதி யல்லோடி!

**இளையபள்ளி:**

**கற்றைச்சடை கட்டிமர வுரியும் சேலைதான் – பண்டு**
**கட்டிக் கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடி!**

இவ்வாறு ஏசிக் கொண்டவர்கள், சினம் தணிந்து, "நீயும் பொறு, நானும் பொறுத்தேன்" என்று கூறி, முக்கூடல அழகரை வாழ்ததிப் பாடி, ஆடுகின்றாாகள்.

## 4. பிள்ளைத்தமிழ்

**'அன்பு தருவதிலே – உனைநேர்**
**ஆகுமோர் தெய்வம் உண்டோ?'**

என்பார் பாரதியாா. அன்பு செலுத்துவதற்கும் அன்பு பெறுவதற்கும் உரிய பருவம் குழந்தைப் பருவமே ஆகும். எனவே, அன்பினால் தெய்வங் களையோ வள்ளல்களையோ, அடியாாகளையோ பாட நினைத்தவர்கள், குழநதையாக வைத்துப் பாடி மகிழ்ந்தார்கள். இதுவே பிள்ளைததமிழ். இதற்குப பிள்ளைப் பாட்டு என்ற பெயரும் உண்டு இப பிள்ளைததமிழ், ஆண்பாற் பிள்ளைத் தமிழ, பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்று இருவகைப்படும். பிள்ளைத்தமிழ் பாடும்போது, குழநதையின் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல மூன்றாம் மாதம் முதல இருபத்தோராம் மாதம் வரை உள்ள மாதங்களைப் பத்துப் பிரிவாகப பகுத்துக் கொண்டாாகள். இப பிரிவுகளுக்குப் பருவங்கள் என்று பெயர். அப் பருவங்களுக்கு ஏறபப் பொருளமைத்துப பாடினாாகள். காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப பருவம், அம்புலிப பருவம் என்ற ஏழு பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. ஆண்பாற பிள்ளைத்தமிழுக்கு, இறுதி மூன்று பருவஙகளும் 'சிற்றில சிதைத்தல, சிறுபறை முழககல், சிறுதோ உருட்டல்' என்று அமையும் பெணபாற் பிள்ளைத தமிழாக இருந்தால 'அம்மானை, நீராடல், ஊசல்', என்று அமையும். இறுதி மூன்று பருவஙகளும் மூன்றாம், ஐநதாம், ஏழாம் ஆண்டுகளுக்கு உரிமை எனறும கூறுவா, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப பததுப் பாடல்களாக நூறு பாடல்கள் கொண்டது பிள்ளைத்தமிழ். சிலவற்றில நூற்றுக்குக் குறைவாகவும் பாடல்கள் உளளன. இப் பிள்ளைத் தமிழை ஆசிரிய விருததம, சந்த விருததம, கலி விருத்தம் ஆகிய யாப்புக்களால் பாடலாம் என இலககணம் விதி வகுக்கின்றது. ஆயினும் பிள்ளைத்தமிழ் நூல்கள், பெரும்பாலும் ஆசிரிய விருத்ததிலேயே அமைநதிருக்கின்றன.

## பிள்ளைத்தமிழ் நூல்கள்:

கி.பி. 12ஆம் நூற்றாண்டில வாழ்ந்த ஒட்டக்கூத்தர், இரண்டாம் குலோத் துங்க சோழன் மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடினார். அது குலோததுங்க சோழன் பிள்ளைத்தமிழ் எனப்படும். இதுவே சிற்றிலக்கிய வடிவம் முழுமையாக அமைந்த முதல பிளளைததமிழ் நூல் ஆகும.

தொல்காப்பியத்தில் குழந்தையின் மீது அன்புசெலுததிப் பாடலாம் என்ற இலக்கணம் காணபபடுகின்றது. சங்க இலக்கியங்களில குழந்தை தோ உருட்டி விளையாடுதல், சிற்றில் இழைத்தல், தாயாா சோறு ஊட்ட உண்டல போனற குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

திருமால, இராமனாகவும் கண்ணனாகவும் அவதரித்த பெருமையை வைணவாகள் பெரிதாக மதிப்பா. அதனால் அந்த அவதாரங்களின் குழநதைப பருவ நிகழ்ச்சிகளில ஈடுபட்டுப் பல பாக்கள் அருளினாாகள். அவர்களுள் பெரியாழ்வாரும குலசேகர ஆழவாரும் குறிப்பிடத்தக்கவா.

**மன்னுபுகழ்க் கௌசலைதன்**
**மணிவயிறு வாய்த்தவனே!**
**தென்னிலங்கைக் கோன்முடிகள்**
**சிந்துவித்தாய்! செம்பொன்சேர்**
**கன்னிநன்மா மதிள் புடைசூழ்**
**கணபுரத்தென் கருமணியே!**
**என்னுடைய இன்னமுதே!**
**இராகவனே தாலேலோ"**

என்று குலசேகர ஆழ்வாா, இராமனுக்குத் தாலாட்டுப் பாடுகின்றாா. பெரியாழ்வாா, பல பருவங்கள அமைத்துக் கண்ணனைப் போற்றுகின்றாா இவ்வாறு தொல்காப்பியா காலம் முதல வளாசசியடைந்து வந்த இலககியம, கி பி. 12ஆம் நூற்றாணடில பிளளைத்தமிழாக வடிவம் பெற்றது. ஒட்டக் கூத்தா, தததுவராயா, சிவப்பிரகாசர், மகாவித்வான் மீனாட்சிசுநதரம் பிள்ளை முதலிய புலவாகள் பலா, பிள்ளைததமிழ பாடினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைத்தமிழ் நூலகள தோன்றின. அவற்றுள் குமரகுருபரா பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முததுக்குமாரசாமி பிள்ளைததமிழ, அந்தககவி வீரராகவ முதலியாா இயறறிய சேயூர் முருகன் பிள்ளைததமிழ், மகாவிதவான மீனாட்சிசுந்தரம் பிளளை எழுதிய சேக்கிழாா பிள்ளைத்தமிழ எனபன சிறந்தன

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

இதனைப் பாடியவா குமரகுருபரர், திருநெல்வேலி மாவட்டததில ஸ்ரீவைகுணடத்தில பிறநதவா; கி.பி 17ஆம நூற்றாண்டினர். இவா பாடிய

பிரபநதங்கள பல. இதனால் இவரை, 'பிரபந்த வேநதர்' என்று அழைபபர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில, மீனாட்சியம்மையாகிய குழநதையை நடநது வருமாறு வேண்டி வருகைப பருவம் பாடுகின்றாா அப பருவத்தில் அமைநத 'தொடுககும் கடவுட பழமபாடல' என்று தொடங்கும் பாட்டு, செவிக்கும சிநதைக்கும் இன்பம் பயக்கினறது இபபாடலைக் கேட்க மீனாடசியம்மை குழநதையாக வந்ததாகக் கூறுவர்.

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
 தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
 சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
 ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
 இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
 ஒருவன் திருவுள் ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
 உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும்இள
 வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
 வாழ்வே! வருக வருகவே!

# 11. உரையாசிரியர்கள்

தமிழ் இலக்கிய வரலாறறு உலகில உரையாசிரியாகளுககு மிகச சிறநத இடம் உணடு. இவாகள் செயத தொண்டால விளைநத பயன்கள பல

1. தமிழ் மொழியை வளம்பெறச் செயதிருககினறனா

2 காலததால மூதத தமிழ இலககிய இலககண நூலகளைப பின்வந தோரும் கறறு அநுபவிககும் வகையில இலக்கியப பாலமாகத திகழ்கினறனா உரையாசிரியாகள் உரை இனறேல, இலககிய இலககணஙகள் பல ஒளியிழந திருக்கும் அவறறின பெருமைகளை நாம் அறிநது சுவைககவும் இயலாது

3. சிறந்த திறனாயவாளாகளாக (Critics) விளங்குகின்றனா.

4. மொழியியல ஆராய்ச்சிககுப் பெருநதுணை புரிகினறனா

5. மறைநதுபோன தமிழ் நூலகளைப் பற்றிய செய்திகளை இன்று நமக்கு அளிககும் காபபு நிலையங்களாக அமைநதிருககின்றனா.

இ-வ-6.

6. ஏட்டில இருந்த இலக்கியங்களைப் பதிப்பிப்பதற்குப் பெரிதும் துணை யாக வழிகாட்டுகின்றனா.

7. இலக்கியச் சுவை நிறைந்த பாடல்களை உரைகளில் உதாரணமாக எடுத்துக்காட்டி, அவை வாழுமாறு செய்த காததற் கடவுளாகக் காட்சி தருகின் றனா. இவாகள் இன்றேல அப் பாடல்கள் அழிநதிருக்கும்; மறைந்திருக்கும்.

8. காலங்கள் தோறும் வளர்ந்த கனனித் தமிழின் உரைநடை இயல்பை யும் தனித் தனமையையும் பேணிக் காக்கின்றனா. உரை நடையின் தோற்றத் திற்கு வித்திட்டிருக்கின்றனர்.

9. தமிழ் மொழி, வளர்சசியால ஏற்றுக் கொண்ட மாறுதலகளையும், தமிழ் மக்கள் வளாச்சியால அடைநத வாழ்க்கை முறைகளையும் அறிவிக்கும் பதிவு நிலையங்களாக ஒளிவிடுகினறனா.

இத்தகைய அரும்பெரும் தொண்டுகள் செய்த உரையாசிரியாகள் பலா உளளனா. ஆயினும், தொலகாபபியா காலததிலோ சங்க காலத்திலோ இருந்த உரையாசிரியாகளைப் பற்றித தெரிந்து கொள்ள இயலவிலலை. என்றாலும் இலக்கண நூலகளுக்கு உரை எழுதலாம எனத் தொலகாபபியமே கூறுகின்றது. முதன் முதலில பொருளை விளங்கிக் கொள்ளுதற்கு இயலாத நிலையில செறிவாக அமைநத இலக்கண நூலகளுக்கே உரையாசிரியர் களின உதவி தேவைபபடடது பினனா இலக்கியச சுவையை நுகரவும், காலத்தால முநதிய இலக்கியங்களின பொருளமைபபினை உணர்ந்து மகிழவும், உரையாசிரியாகளின பணி வேண்டபபட்டது. இவற்றால் உரையாசிரியாகள் பலா தோன்றினா.

## 1. நக்கீரர்

இறையனாா களவியல என்றும் இறையனாா அகப்பொருள் என்றும் கூறபபடும இலககண நூலுககு உரை எழுதியவா. இவரே இபபோது அறியப் பெறும் உரையாசிரியாகளில காலத்தால முநதியவா. இவா எழுதிய உரையே மிகப பழைய உரை இவா கடைசசஙகப புலவாகளில் ஒருவராகிய நக்கீரா அலலா சிலர், இவரைக கடைச்சஙகப புலவா என்றும, இவர் கூறிய உரை வாயமொழியாகப பல தலைமுறைகள வநது, பின்னா உரைநடையாக எழுதப்படடது என்றும கூறுவா. இவா காலம கி பி. எடடாம நூற்றாண்டிற்குப் பிறபட்டது எனபா இவா எழுதிய உரை, எதுகை மோனையும் இனிய ஓசையும் அமைநது கவிதைபோலக காட்சியளிககினறது; நவிலதொறும் இன்பம் பயக்கின்றது. இவ்வுரையிலேயே முதன் முதலாகத் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய செய்திகளை அறிகினறோம்.

## 2. இளம்பூரணர்

தொல்காபபியம் முழுமைக்கும் முதன் முதலில உரை எழுதிய அறிஞர்; சமணர்; கி. பி. 12 ஆம் நூற்றாண்டினா. திருக்குறளுக்கு உரை எழுதிய மணக்குடவரும் இளம்பூரணரும் ஒருவரே எனறு ஆய்வாளர்கள் கருதுவர். இளம்பூரணா எழுதிய தொலகாபபிய உரையை அடியொற்றியே நன்னூல் இலக்கணம் தோனறியது. இவரது உரை, எளிமையும் தெளிவும வேண்டிய அளவு விளக்கமும் வாய்ந்தது இவரை மற்றைய உரையாசிரியர்கள பெரிதும் மதித்தனா உரையாசிரியா் என்று பொதுவாகக் கூறினால அஃது இளம் பூரணரையே குறிக்கும்; அநத அளவுக்குப் பெருமை பெற்றவா; தொல் காபபியம நின்று நிலவ உதவிய தமிழ் வள்ளல்.

## 3. சேனாவரையர்

தொலகாப்பியச் சொல்லதிகாரத்திற்கு அறிஞர்கள் பலா உரை எழுதியுள்ளனா. அவாகளுள் சிறந்தவா சேனாவரையர். இவர் தென்பாண்டி நாட்டினா; சைவா. கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிறபகுதியில வாழநதவா; வடமொழி அறிவு மிககவா, 'வட நூறகடலை நிலை கணடு உணாந்த சேனாவரையா' என்று பாராட்டப பெறறவா. பிறர் கூறும் கருத்துக்களைத் தக்க காரணங்கள் காட்டி மறுப்பதில வல்லவா. தூய தமிழில உரை நடை எழுதியவர். இவா எழுதிய உரையைச் 'சேனாவரையம்' எனத தனி நூல போலவே அறிஞாகள எடுததுக் கூறுவா.

## 4. பேராசிரியர்

இப பெயருடையவர்கள் பலர் உள்ளனா. இவா தொல்காப்பியப பொருளதிகாரம முழுமைககும் உரை கண்டவா ஆனால் இப்போது பொரு ளதிகாரததில் மெய்பபாட்டியல், உவம இயல, செய்யுள் இயல, மரபியல் ஆகிய பின் நான்கு இயலகளுக்கு மடடுமே இவா உரை கிடைககினறது. இவா சைவா, கி.பி.13 ஆம நூற்றாண்டில வாழ்நதவா, புலவர்களால் பெரிதும் பாராடடப்படுபவர்; பழைய மரபுகளையும கொளகைகளையும் மிகுதியாக மதிபபவா. மாணிக்கவாசகா இயற்றிய திருககோவையாருக்கும் குறுந் தொகை முதல் 380 பாடலகளுககும் இவா உரை வரைந்துளளாா என்பர்; குறுநதொகை உரை இபபோது கிடைக்கவிலலை.

## 5. நச்சினார்க்கினியர்

'உச்சிமேல் புலவா கொள நச்சினாாக்கினியர்' என்று பாராட்டப்பெறும் உயாவுடையவா; மதுரையில வாழ்ந்தவர், அந்தணர்; சைவா; கி.பி. 14ஆம் நூற்றாண்டினா, தொலகாப்பியம் முழுமைககும் உரை கண்டவர்; மேலும்

பத்துபபாட்டு, கலித்தொகை, குறுந்தொகையில இறுதி இருபது பாடல்கள், சிநதாமணி ஆகியவற்றிற்கு உரைஎழுதிய பேரறிஞர்; உரையாசிரியர்களில் தலைசிறநதவர்; இலக்கியம்; இலககணம் என்னும் இரு பிரிவுகளுக்கும் உரை எழுதியவர். பாட்டுக்கோ சூத்திரததுக்கோ ஆற்றொழுக்காகப் பொருள் எழுதாமல முனனும் பின்னும சொறகளை மாற்றிக் கூட்டி உரை எழுதும் தனித்தன்மையுடையவா; இலககியப் புலமை மிக்கவர்; வியக்கத்தகக நினை வாறறல படைத்தவா. "இவருடைய உரை, சொல்லழகும் பொருளழகும் மிக்கது; மேனாட்டினர் எழுதிய விளக்கவுரை போலத் தெளிவும் நயமும் வாயநதது" என்பா Rev Dr. Bower.

## 6. பரிமேலழகர்

திருககுறளுககுப பதின்மா உரை எழுதியுள்ளனா. அவாகளின் பெயர்களைப் பின்வரும் வெணபாவால அறியலாம்.

> "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
> பரிதி பரிமேல ழகர் திருமலையர்
> மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
> எல்லையுரை செய்தார் இவர்."

இவ் உரைகளுள பரிமேலழகா செயத உரையே மிகவும் சிறபபு வாய்நதது, இலககியம போனற மதிப்புடையது. தமிழில உள்ள தரமான நூலகள் ஆறு; இவறறுள் ஒனறு பரிமேலழகர் உரை என்று பாராட்டுகின்றார் உமாபதி சிவம். மற்றொரு புலவா,

> "நூலில் பரித்த உரைஎல்லாம் பரிமே லழகன்
> தெரிந்த உரை யாமோ தெளி"

என்று புகழ்கின்றா பரிமேலழகரின உரை திருக்குறளின் பெருமையை — பொருளாழத்தை — மிகுதிபபடுததுகினறது; திடப நுட்பம் செறிந்ததாய விளஙகுகினறது. சொறகள் சிலவற்றிறகு இவா எழுதும விளக்கமும, சில பொருளகளை விளகக இவா கையாளும் முறைகளும் தனிச்சிறபபு வாய்நதன இவா பரிபாடலுக்கும் உரை எழுதியுளளாா என்பா மதுரையில வாழ்நதவா, வைணவா, கி பி. 13ஆம் நூறறாணடினா

## 7. அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரம் முழுமைககும உரை எழுதியவா. ஆனால இப்போது கானலவரி நீங்கலாக முதல 19 காதைகளுக்கு மட்டுமே இவா உரை கிடைக் கின்றது இவர், நிரம்பை எனனும் ஊரினா; கி.பி. 13ஆம நூறறாண்டினா. இவரது உரை முத்தமிழுக்கும் இலக்கியமாகத் திகழ்கின்றது .சிறப்பாக இசைததமிழ், நாடகத்தமிழ் பறறிய செய்திகள் பலவற்றை இவரது உரையால்

அறிகின்றோம். இவர் உரையே தமிழிசை மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இவர் சிறந்த இலக்கியத் திறனாய்வாளர்.

இவருக்கு முன் சிலப்பதிகாரத்தில் உள்ள அருஞ்சொற்களுக்கு ஒருவர் உரை எழுதியிருந்தார். அவரது இயற்பெயர் தெரியவில்லை. அதனால் அவரை அரும்பத உரையாசிரியர் எனறே குறிப்பிடடனர். அவரது உரையில் அடியாாக்கு நலலாா உரையில காணமுடியாத பல அரிய கருத்துக்களைக் காணலாம்.

**இலக்கிய உரையாசிரியர்கள்:** ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, பதிற்றுபபத்து முதலியவற்றிற்கும் அறிஞாகள் உரை எழுதியுளளார்கள்; ஆனால அவாகளைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை.

**இலக்கண உரையாசிரியர்கள்:** தொலகாபபியச் சொலலதிகாரத்திற்குக் கலலாடா, தெயவச்சிலையார் என்பவர்கள் உரை வரைந்துள்ளனா. நன்னூ லுககு மயிலைநாதா, சங்கர நமச்சிவாயா, சிவஞான முனிவா முதலியோர் உரை எழுதியுள்ளனா. யாப்பருங்கலம், யாபபருங்கலக் காரிகை என்னும் செய்யுள இலக்கண நூல்களுக்குக் குணசாகரா என்பவர் அரிய உரை வகுத்துளளாா.

**சைவ சமய உரையாசிரியர்கள்:** சைவசமய சாத்திரங்களுக்குச் சிலர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவா சிவஞான முனிவர். இவர், சிவஞான போதத்திற்கு எழுதிய பேருரையும் சிற்றுரையும் பெருமதிப்பு வாய்ந்தன

**வைணவ சமய உரையாசிரியர்கள்:** தமிழிலககிய உலகில் இடைக்காலத் தில் — செந்தமிழ வளர்த்த சிறப்பு, நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உரியது அவாகளுள் ஆழ்வார்கள் அருளிய தமிழ் நூலகள் நாலாயிரத் திவவிய பிரபநதம் என்று வழங்கபபடும். இவறறுக்கு எழுதபபட்ட உரைகள் வியாக்கியானங்கள் எனறு கூறப்படும். இவ் வியாக்கியானங்கள், மணிப்பிர வாள நடையில் (தமிழும் வடமொழியும் கலநத நடையில) அமைந்தன; மணியும் பவளமும் கோதது அமைக்கப பெற்ற மாலை போன்றது என இந் நடையைக் கருதினர். இத்தகைய புதுவகை உரையை உண்டாக்கியவாகள பலா

1. **ஆளவந்தார்:** வீரநாராயணபுரத்தில பிறநதவர்; கி.பி. 10ஆம் நூற்றாண்டினர். திருவாய்மொழிக்கு முதன்முதல உரை கூறியவர் இவரே.

2. **திருக்குருகைப் பிரான் பிள்ளான்:** கி.பி. 13 ஆம் நூற்றாண்டினா; திருவாய்மொழிக்கு ஆளவந்தாா கூறிய உரையை முதன்முதலில எழுத் துருவம பெறச் செயதவா; இவ்வுரைக்கு 6000 படி என்று பெயா. படி என்பது ஒற்றெழுத்துக்களை நீக்கி 32 எழுத்துக்களால ஆகிய கிரந்தம்.

**3. நஞ்சீயர்:** திருநாராயணத்தில் பிறநதவா, கி.பி 13 ஆம் நூற்றாண்டினர்; திருவாய்மொழிககு 9000 படி உரை கூறியவர். கண்ணி நுண் சிறுததாம்பு உரை, திருபபாவை ஈறாயிரப் படி, திருப்பல்லாண்டு வியாக்கியானம் ஆகியன எழுதியவர்.

**4. நம்பிள்ளை:** நம்பூா எனனும ஊரினர்; கி.பி. 14ஆம் நூற்றாண்டினா. நஞ்சீயா கூறிய 9000படி உரையை எழுதி வழங்கச செய்தவா.

**5. அழகிய மணவாள சீயர்:** கி.பி. 15ஆம் நூற்றாணடினா, திருவாய் மொழிக்கு 12000 படி உரை எழுதியவா, திருவிருதத வியாககியானம் வரைந் தவர்.

**6. பெரியவாச்சான் பிள்ளை:** கி பி. 15ஆம் நூறறாண்டினா. திருவரங் கத்தில வாழ்நதவா; தென்கலையாரால பெரிதும் போறறப்படுபவர்; நம பிள்ளையின மாணவா, நாலாயிரத திவ்ய பிரபநதம் முழுமைககும் வியாக்கியானம் எழுதியவா, 'வியாக்கியானச சக்கரவாததி' எனறு பாராட்டப பெறற வர் இவா திருவாயமொழிக்குச் செய்த உரை 24000 படி என்று கூறப்படும்.

**7. வடக்குத் தெரு வீதிப் பிள்ளை:** நம்பிள்ளையின் மாணவர்; கி.பி. 14ஆம் நூற்றாணடினா; திருவாயமொழிக்கு 36000 படி உரை எழுதியவா; இவ்வுரை, 'ஈடு' என வழங்கபபடுகினறது. இதனை 'பகவத் விஷயம' எனவும் கூறுவா.

**8. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்:** கி.பி. 15ஆம் நூற்றாண்டினா; வடக்குத தெருவீதிப பிளளையின் மகனா; திருபபாவை, திருவந்தாதி, கண்ணி நுண் சிறுததாமபு முதலியவறறிறகு வியாக்கியானம எழுதியவா.

**9. மணவாள மாமுனிகள்:** பாணடிய நாடடவா, பெரிய ஜீயர் எனவும் வழங்கபபடடவா; தெனகலையாாககுத தலைவராகத திகழ்நதவர்; ஆச்சாரிய பரம்பரையின இறுதியில இருநதவா, கி.பி. 15ஆம நூற்றாண்டினா. இராமானுஜா நூற்றந்தாதி, ஞானசாரம், பிரமேயசாரம், ஆசார்ய ஹிருதயம் முதலியவறறுககு உரை எழுதியவா.

இலககிய, இலக்கண, சமய உரையாசிரியாகள் தமிழுக்குச் செய்த தொணடுகள அளபபரியன மூலநூலகள எனனும கோயிலகளுககு அவாகள் ஏற்றிய நநதா விளககுகள் எனறும ஒளி வீசுவன அவவொளியின் உதவி யால மூலநூலகளை வணங்கும பேறறினை நாம் பெறறிருககினறோம்.

# 12. பௌத்தர்களின் தமிழ்த் தொண்டு

கௌதம புத்தரால கி.மு 5ஆம் நூற்றாண்டில் பௌதத சமயம தோற்றுவிககபபெறறது. இச் சமயம், அசோகா காலத்தில கி.மு.3 ஆம் நூறறாண்டில, தமிழகத்தில பரவிச் செலவாக்கும் பெற்றது. காஞ்சிபுரம், உறையூா, வஞ்சி, மதுரை முதலிய நகரங்கள் புத்தப் பெருநிலையங்களாக விளங்கின; பௌத்தப பள்ளிகள் தோன்றின.

இச சமயக கொள்கைகளான உயிாகளின்மேல மிக்க அன்பு, குலவேறுபாடு இன்மை, அறநெறி நிற்றல முதலியன தமிழ் மக்களைப் பெரிதும் ஈர்த்தன, பலா பௌததாகள ஆயினா; சிறப்பிடம் பெற்றனா. நாளந்தாப பலகலைக்கழகததில தலைவராக விளங்கிய தின்நாகர், தருமபாலா, சீனம் சென்ற போதிதருமா, வச்சிர போதி ஆகியோர் காஞ்சியில வாழ்நத தமிழப் புததாகளே சங்கப புலவாகளுள ஒருவராகிய இளம்போதியார் பௌத் ததததைச சோநதவா என்பா.

பௌதத்தின கொள்கைகளைப பரப்புதற்காகப பௌத்தாகள், தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளில ஈடுபட்டனா. அவைகளைக கற்றுத் தோந்தனா, பல படைபபுக்களை ஈநதனர் அவையெலலாம் இப்போது நமககுக் கிடைககவிலலை. புதத தத்தா என்பவர் பாலி மொழியில எழுதிய தம்முடைய நூலகளுக்கு வேணடிய கருததுக்களைத தமிழப பௌதத நூலகளில இருநதே பெற்றிருத்தல கூடும் என Rhys Davids என்ற அறிஞா கூறுவதும் இங்கு நினைககத தக்கது. அழிநதவை போக எஞ்சியவை சிலவே அவறறுள்ளும் சிறபபுமிக்கது மணிமேகலையே.

**1. மணிமேகலை:** இது ஐம்பெரும காபபியஙகளுள ஒனறு சீததலைச் சாததனாா பாடியது, விலைமகள குலததில பிறநத மணிமேகலை, பௌததத் துறவியாகிச் சமுதாயத தொண்டு புரிநதாள என்ற பெருங்கருத்தை வற புறுததுவது இநநூலில பௌதத மதக கருததுககள் மலிநது கிடககக காணலாம் சமயக் கணககா தம திறம் கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேடட காதை, பவததிறம் அறுகெனப பாவை நோற்ற காதை எனனும் பகுதிகள், பலவேறு சமயங்களின் கொளகைகளை விரிவாகவும் விளக்க மாகவும் கூறுகின்றன சமயக கருததுக்களைக் கூறுதற்காக எழுநத முதல் தமிழ் நூல் இதுவே. இக காபபியத்தின அடிப்படையிலே சமயவாதம் புரியும் நீலகேசி, குணடலகேசி முதலான நூலகள் தோனறின.

மணிமேகலையில் இயறகை மீறிய கறபனைகள் மிகுதி. இநநூலுக்கு 'மணிமேகலை துறவு' என்ற பெயரும் உண்டு. இதனையும் சிலப்பதிகாரத்தை யும் இரட்டைக் காப்பியங்கள் என்பா

**2. குண்டலகேசி:** ஐம்பெருங்காப்பியங்களுள் இதுவும் ஒன்று; இதனை இயற்றியவா நாதகுததனாா என்பவா இந் நூல முழுதும் இபபோது கிடைக்கவிலலை சில செய்யுடகள் மடடுமே கிடைத்துள்ளன. புத்தா காலத்தில வட நாட்டில வாழ்நத சமயததுறவி ஒருத்தியின வரலாற்றைக் கூறுவதே இக் காபபியம. இது காபபியமாகவும் தருக்க நூலாகவும் அமைநதது இதில சமணசமய எதிாப்பைக் காணலாம.

'நாளும் நாம சாகின்றோமெனறால நமக்கு நாம், அழாத தென்னே' என்னும பொருள பொதிநத வரி, இக காப்பியத்தில் உள்ளதே. இது 'க்ஷணவாதக் கொளகை'க்கு,சிறநத சான்று.

**3. விம்பசாரக் கதை:** இது இபபோது கிடைககவிலலை. இதனை இயற்றியவா யாரென்றும் தெரியவில்லை. இது ஆசிரியப் பாவால் இயற்றப்படடிருக்க வேண்டும்.

மகத நாட்டை ஆண்டவன் விம்பசாரன. இவன் மகன அஜாத சததுரு. தன் தநதை விமபசாரனைச சிறையில அடைத்தான்; கொடுமைகள பல செயதான விமபசாரன் இறநதான; அஜாத சத்துருவுக்குக் குழநதை ஒன்று பிறநதது. அககுழநதையிடம் அளவு கடந்த அன்பு செலுததினான்; தந்தைப் பாசததை உணாந்தான. தன் தநதையும் இவ்வாறுதானே தன்மீது அன்பைப் பொழிநதிருகக வேணடும எனறு எண்ணினான, மனம் மாறினான். புத்தர் அருள் பெறறுப பௌததம் சோநதான். இந் நிகழ்ச்சிகளைக் கூறுவதே விம்பசாரக கதை.

இந நூலின் பாடல ஒனறு, நீலகேசியின் உரையிலும், சிவஞான சிததியாா, ஞானபபிரகாசா உரையிலும் காணப்படுகின்றது.

**4. சித்தாந்தத் தொகை:** மறைந்துபோன நூலகளுள் இதுவும் ஒனறு. இந்நூலின் பாடல ஒனறு, நீலகேசியின் உரையிலும், சிவஞானசித்தியார் ஞானபபிரகாசா உரையிலும் மேறகோளாக அமைநதுள்ளது.

**5. திருப்பதிகம்:** புத்தனைப போறறும் துதிநூல, பத்துப பாட்டுககள் கொண்டது. நீலகேசி, சிவஞானசித்தியாா உரைகளில் இரண்டொரு பாடலகள மேறகோளாகக் காடடப பெற்றுள்ளன இச் சிறு நூலும் மறைந்துவிடடது

**6. வீரசோழியம்:** இலககணநூல. புதத மித்திரனாா் என்பவரால் இயறறபபட்டது. வீரராசேநதிரசோழன விரும்பிய வண்ணம் எழுதபபட்டது.

ஆதலால், வீரசோழியம் என்னும் பெயர் பெற்றது. இந நூலின் காலம் கி.பி. 11ஆம் நூற்றாணடு.

வடமொழி இலக்கண விதிகளைத் தமிழுக்கும் பொருத்திக் காட்டும் முயற்சியில் ஈடுபடட முதல் நூல் இதுவே. இந்தக் கொள்கையே இந் நூலைப் பயில்வாா இல்லாமல செய்து விட்டது. இந்நூலுக்குப பெருந்தேவனார் என்பவா அருமையான உரை எழுதியுள்ளார் இவ்வுரையால் பல அரிய செயதிகள புலனாகின்றன.

பௌத்ததால் தமிழ் வளம் பெற்றது; தமிழால் பௌத்தம் பல அறிஞாகளையும பெற்றது

# 13. சமணர்களின் தமிழ்த் தொண்டு

மகாவீரரால் சமண சமயம் வடநாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. அது, கி மு 3ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் புகுந்தது. காஞ்சியும் மதுரையும் அச் சமயத்தின் வாழவிடங்களாகத் திகழ்நதன. சங்கப் புலவாகளுள் உலோச்ச னாரும் நிகண்டன கலைககோட்டுத் தண்டனாரும் சமணச் சாாபுடையவர் களாக விளங்கினா. அச் சமயத்தின் தலையாய கொள்கைகளான கொல லாமை, துறவு, துன்பம் பொறுத்தல் என்பன தமிழ்மக்களைப பெரிதும் கவாந்தன எனவே, அச் சமயம், தமிழகத்தில் வேரூன்றியது. மேலும் அச் சமயம், தமிழகததில வாழ்வும் வளாச்சியும் பெறுதற்காகத் தமிழ் மொழியில கருததைச் செலுத்தியது. இதனால தமிழ்மொழி பெற்ற நன்மைகள் பல.

1. பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் எனப் பல தோனறித் தமிழில காப்பிய நெறி ஏற்பட்டது.

2 இலக்கியங்கள ஆசிரியபபாவில இயற்றபபட்ட நிலை மாறி, இனிமைமிக்க விருத்தப்பாவிலும், வெண்பாவிலும் இயற்றபபட்டன. இம் மாறறததால, புதிய வடிவம், தமிழ்க் கவிதைக்குக் கிடைத்து

3. வடமொழி இலக்கியங்கள், தமிழ்ப்படுத்தப்பட்டமையால் தமிழில கருதது வளம் பொங்கியது.

4 அறக கொள்கைகளைக் கூறும் அறநூலகள் பெரிதும் தோன்றின. இதனால அறக கருத்துககள் தமிழில மிகுந்தன.

5. இலக்கணததிற்கு முதலிடம் கொடுத்ததால், அஃது ஒரு தனிக் கலையாகவே வளாநதது.

6. தமிழ்ச் சொற்களின் பெருக்கத்தை அறிந்து அவற்றை மற்றவரும் உணர்வதற்காக நிகண்டு நூல்களைச் சமண சமயத்தவர் செய்தனர். இதனால தமிழ்ச் சொற்கள் காப்பாற்றபபட்டன.

7. வடமொழிச் சொற்களைத் தமிழ்மொழிக்குத் தக்கவாறு வேண்டிய இடங்களில திருத்திக் கொண்டார்கள்; புதிய சொறகளைத் தமிழில உண்டாக்கினார்கள் இவற்றால புதுச் சொற்கள் தமிழில தோன்றின.

8. சோதிடம, கணிதம் போன்ற துறைகளிலும் தமிழ வளம பெற்றது.

9. வசசிரநந்தி என்பவா 'திரமிள சங்கம்' என ஒனறை மதுரையில் நிறுவினாா இச் சங்கததில புலவாகள் கூடித் தமிழ்மொழிகரு வலிவும் பொலிவும தந்தனா.

இவவாறு சமணாகள், தமிழ்மொழிக்குப பலலாறறானும தொணடு புரிந்தனா; தமிழுக்குக காலநதோறும புது மெருகு ஏற்றினா தேவார காலததிறகு முந்திய சமணாகள, சமயக் கருததுக்களையும் அறகோடபாடு களையும வலியுறுததும் நூலகளை இயற்றினா தேவார காலததிறகுப பிந்திய சமணாகள், மககளைத் தம் வயபபடுததிககொளளும் நோககத்துடன் இலககிய இலக்கணங்களை இயற்றினா. இவாகளால பிராகிருதச சொற்கள தமிழில் கலநதன, தமிழும வடமொழியும் கலநத புதிய உரைநடை அமைப்பு ஏறபட்டது. இக் கலபபுக்களால தமிழின் தூயமை சிறிது சிதைந்தது

## ஐம்பெருங் காப்பியங்கள்

ஐமபெருங் காப்பியத்தில **சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி** ஆகிய மூன்று காபபியங்களைச் சமணப புலவாகள இயற்றியுளளனா. முததமிழும கொஞசும் முதல காபபியம **சிலப்பதிகாரம்** ஆகும் இது இளஙகோவடிகளால இயற்றப பெற்றது. கறபுககரசியாம் கணணகியின் வரலாறறினை விரிததுக கூறுவது; பெண்ணின் பெருமை பேசுவது; அரசாகளைப பாடடின் தலைவாகளாக வைததுப் பாடிய காலததில் குடிமக்களைக் காபபியததின் தலைவர்களாக அமைததுப் பாடிக குடிமககள காப்பியம என்ற புகழ் பெறறது. மூவேந்தரையும பறறிக கூறும தமிழக வரலாறறு நூலாகத திகழவது, கதையமைபபும், கருததுச் செறிவும, காப்பியப பணபும் உடையது. 'நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்' என மகாகவி பாரதியாரால பாராட்டபபடுவது.

திருததக்க தேவரால இயறறப்பெற்றது சீவகசிநதாமணி ஆகும திருததகக தேவரைக கவிஞருள் அரசா என்பா, வீரமா முனிவா. இநநூல சீவகன் எனபவன மகளிா எணமரை மணநது இல்லறம் நடததி இறுதியில வீடுபேறு பெறத் துறவு பூண்ட வரலாற்றினைக கூறுவது, காதற்சுவை தலை தூக்கி

நிற்பது, விருத்தம் என்னும புதிய கவிதைவடிவத்தில் தோன்றி மறுமலாச்சியை உண்டாக்கியது, பெருங்காபபியப பண்புகள் நிறைந்தது; பின்னாத் தோன்றிய காபபியங்கட்கு வழிகாட்டியாய் அமைந்தது; பெரும்புலவர் கம்பரையே ஈாத்த பெருமை மிக்கது; சைவசமயத்தைச் சார்ந்த நச்சினாாக்கினியரால உரை எழுதபபெற்ற உயர்வுடையது; பிற சமயததவரும் பாராட்டிக் கூறும அளவிறகுச சிறந்தது.

**வளையாபதி:** இப்போது கிடைக்கவில்லை. இது கவிதையழகு மிகக நூல என்பர் ஒடடக்கூத்தா

## ஐஞ்சிறு காப்பியங்கள்

சூளாமணி, யசோதர காவியம், உதயண குமார காவியம், நாக குமார காவியம், நீலகேசி எனபன. இவை ஐநதும சமண இலககியங்கள. இவற்றில சூளாமணி ஒனறே சிந்தாமணி போனற சிறபபு மிக்கது. இது திவிட்டன் எனபானின வரலாறு கூறுவது. இநநூற செய்யுடகள் இனிமை மிக்கன. இததகைய செய்யுட்களைச சிநதாமணியில கூடக் காண முடியாது எனபா. இநநூல, பெருஙகாபபிய வரிசையில சோககததகக தகுதி வாய்நதது. சிந்தா மணிககுப பின ஏறபட்ட இலககிய வளாச்சியை இந நூலில் காணலாம். இதனை இயற்றியவா தோலாமொழித தேவா.

சமணர்களும் பௌததாகளும் சமயப போரில ஈடுபட்டுத் தததம் சமயத்தை நிலைநாடட நூலகள் இயறறினா, அவை கேசி நூலகள் எனபபடும். அவ்வாறு தோன்றிய நூலகளுள் ஒன்றே நீலகேசி. இது குணடலகேசி என்னும பௌத்தக காப்பியத்திறகு எதிராக எழுநதது; சிறநத தருகக நூலாகத திகழ்வது.

## அறநூல்கள்

சமணாகளின் உண்மையான நோக்கத்தை வெளியிடுவன அறநூல களே நாலடியாா, நான்மணிக் கடிகை, பழமொழி, ஏலாதி, சிறுபஞ்ச மூலம் எனபன சமணாகளால இயறறபபட்டன இவற்றுள நாலடியாா சிறப்பு வாயநதது இந்நூல, நிலையாமைகளை எடுததுக கூறி, அறம் செய்யுமாறு ஆறறுப்படுததுவது; இது நீதி நூலாயினும் உவமையழகு உடையதாய் அமைந்துள்ளது. திருககுறளும் சமண நூலே என்பா.

## பிற இலக்கியங்கள்

நரி விருத்தம், எலி விருததம், கிளி விருத்தம், திருநூற்றநதாதி, திருககலம்பம, திருவெம்பாவை, ஆதிநாதா பிள்ளைத்தமிழ், சாந்தி புராணம, மேருமந்தர புராணம், மல்லிநாத புராணம, பெருஙகதை முதலிய

நூலகளையும் சமணபபுலவர்கள தமிழுக்கு அளித்துள்ளனர். இவற்றுள் நரிவிருத்தத்தைப் பாடியவா திருத்தக்க தேவர். இந்நூலில் இளமை, யாக்கை, செல்வம ஆகியவற்றின் நிலையாமை வற்புறுத்தபபடுகிறது. பெருங்கதை என்னும் சுவைமிக்க காப்பியத்தைக் கொஙகுவேளிர் என்பவர் இயற்றியுள்ளாா. இவையேயன்றிக் கணிதம், சோதிடம் முதலியன பற்றிய நூல்களையும் சமணர்கள் எழுதியுளளனர்.

## இலக்கண நூல்கள்

இலககணத துறையில சமணப புலவர்கள முதலிடம் வகிக்கின்றனா. தமிழ் முதல நூலான தொல்காப்பியமே சமணச் சாாபுடையது என்பா. தமிழ் உலகம் விரும்பிக் கற்கும் நன்னூல, பவணநதி எனனும சமண முனிவரால இயறறபபெறறது; எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் உணாத்துவது. இதற்கு முன தோனறிய நேமிநாதம என்னும் இலககண நூலைக குணவீர பண்டிதா என்னும் சமணப புலவரே படைததுளளாா். வச்சணநதி மாலை என்னும இலக்கண நூலைச் செயதவரும இவரே. யாபபருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் சிறநத யாப்பிலக்கண நூலகள இரண்டை யும அமிாதசாகரா என்ற சமணத் துறவியார் எழுதியுளளாா அகபபொருள் இலக்கணம் கூறும நம்பியகபபொருள் எனனும் நூலை நாற்கவிராச நம்பி எனற சமண அறிஞா இயற்றியுளளாா. இவவாறு சமண அறிஞாகள், இலக்கணத துறைகள் பலவறறிற்கும் நூல்கள் அருளினா. அவைகள் இன்னும பயிறசியில இருப்பதால அவறறின பெருமை நன்கு விளங்கும்.

## நிகண்டுகள்:

அகராதிகள் செய்யும் உதவியை அக் காலததில நிகண்டுகள் செய்தன. நிகணடுகளை முதன முதலில இயற்றியவாகள் சமணாகளே. நிகணடுகளில் சிறபபுடையது சூளாமணி நிகணடே. இதனை இயற்றியவா மண்டலபுருடா இநநூல புலமைக கலவிககு அடிபபடையாக அக்காலததில அமைநதிருநதது. திவாகரம், பிங்கலநதை முதலாய குறிபபிடத்தக்க நிகணடுகளையும் சமணாகள் ஆக்கியுளளனா.

## உரை நடை:

சமண உரையாசிரியாகள பலா உள்ளனர். இளம்பூரணா, குணசாகரர் முதலியோா அவாகளில் குறிப்பிடத் தக்கவாகள. இவாகளின உரைநடை தமிழில் புதிய எழுச்சியை உணடாககின ஸ்ரீபுராணம், கதய சிநதாமணி என்பன சமணா இயற்றிய உரைநடை நூல்கள். இவைகளே மணிபபிர வாளத்திறகுத் தமிழ் நிலத்தில விததிட்டன. இவ்வித்து, தமிழ் மண்ணில்

நன்றாக முளைக்கவில்லை. சமயத்தைப் பரப்ப எண்ணிய சமணர்கள் மொழியின் வழியாகச் சமயக் கொள்கைகளைப பரப்பினர். இதனால் தமிழ் வளம் பெற்றது.

# 14. முகம்மதியர்களின் தமிழ்த் தொண்டு

கி.பி. 7ஆம் நூற்றாண்டில முகம்மது நபி தோன்றினார். அவருடைய தோழாகள் தமீன் அன்சாரி என்பவரும் உக்காசா சகாபி என்பவரும் தமிழகத்திற்கு வந்தார்கள்; இஸலாமியக் கோட்பாடுகளைப் பரப்பினாாகள. ஆயினும் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் என்ற தளபதி, தெனனாடடின் மீது படையெடுத்து வந்து, முகம்மதிய ஆட்சியை நிலை நிறுத்திய பின்னரே, முகம்மதிய சமயம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றது. தமிழர்கள் அச் சமயத்தில் ஈடுபட்டு இஸ்லாம் ஆனார்கள்; குர்–ஆனைப் புனித மொழியாகக கருதிப் படித்தாாகள்; சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காகத் தமிழ் இலக்கியங்களையும் இயற்றினார்கள். அவர்கள் இயற்றிய இலக்கியங்களை ஐந்து வகைகளாகப பிரிப்பர்.

1. பேரிலக்கியம், 2. சிற்றிலக்கியம், 3. பொதுமக்கள் இலக்கியம், 4. புது வகை இலக்கியம், 5. ஞானபபாடலகள.

## 1. பேரிலக்கியம்

### உமறுப்புலவர்:

வளளல சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சீறாப்புராணம் என்னும் பேரிலககியத்தைப் பாடியவர். இப புராணம், முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றது. 3 காண்டங்கள், 92 படலங்கள், 5027 பாடலகள கொணடு மிளிர்கினறது. கம்பராமாயணம், சீவகசிநதாமணி ஆகிய பேரிலககியங்களின் சாயலையும், தமிழ் மரபினையும் அடியொற்றிச செல்கின்றது. இந்நூலில உள்ள அரபு நாட்டைப் புகழ்ந்து கூறும் பாடல்கள், தமிழ்நாட்டை நினைவில் கொண்டு பாடப்பட்டனவாகவே திகழ்கின்றன. பிறந்த மண்ணின் மணத்தை எவ்வாறு மறைக்க முடியும்?

# 2. சிற்றிலக்கியம்

ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ, அநதாதி, கோவை, அம்மானை முதலிய சிற்றிலக்கியங்கள் பலவும், முகம்மதியத் தமிழப புலவர்கள் பாடியுள்ளனர்.

## ஆற்றுப்படை:

மதுரைத் தமிழ்ச் சங்கப புலவாகளுள் ஒருவராகிய குலாம் காதிறு நாவலர் எனபார், 'புலவா ஆறறுபபடை' பாடியுள்ளார். இது நகைச்சுவை நிரம்பியது. அவவாசிரியா 'நாகூாக கலமபகம்', 'நாகூாப புராணம்' முதலாய பல நூல்களையும் எழுதியுளளாா.

## பிள்ளைத் தமிழ்:

'முகையதீன் ஆண்டவா பிள்ளைததமிழ்' என்னும் நூலைச் சவ்வாதுப் புலவரும், 'நபிநாயகம் பிள்ளைததமிழ்' எனனும் நூலைச் சையத மீரா லெபபையும் பாடியுளளனா.

## அந்தாதி:

பிச்சை இபுறாகிம் புலவா இயறறிய 'திருமதீனத்து அநதாதி', குலாம் காதிறு நாவலா இயறறிய 'திருமக்காத திருவநதாதி', செயகபதுல காதிறு நயினார் இயற்றிய 'நாகை அநதாதி' என்பன குறிப்பிடததக்கன

## கோவை:

செய்குத் தம்பிப பாவலா இயறறிய நாகைக் கோவை, குலாம் காதிறு நாவலா இயறறிய மதுரைக் கோவை என்பன சிறநதன சீதக்காதியின மீது உமறுபபுலவா பாடிய கோவை, இலக்கிய நயம் மிக்கதாகும்.

## அம்மானை:

உமறுப புலவரின் மகனாரான கவிக களஞ்சியப புலவா என்பவா, 'நபி அவதார அம்மானை' பாடியுளளாா. இது சீறாப்புராணத்தில அமைநத அவதாரப் படலததை அடிப்படையாகக கொண்டது. சையது மீராப் புலவர், 'பப்பரததியா அம்மானை' பாடியுள்ளாா.

# 3. பொதுமக்கள் இலக்கியம்

சமயக் கருத்துக்களைப் பொதுமககள் அறியும் வகையில் இனிய, எளிய நாட்டுப் பாடல்கள் போனற இலக்கியங்களையும் யாததனா.

### 1. மாலை:

மலர்களால ஆக்கப்படடது மாலையாதல் போலப் பாக்களால ஆக்கபபட்ட இலககியம் மாலை எனப பெயர் பெற்றது. 'முதுமொழி மாலை', 'ரதூலமாலை', 'ஓசியதது மாலை' எனபன சிறந்தன, முதுமொழி மாலையைப் பாடியவா உமறுப் புலவர்.

### 2. ஏசல்:

தென்பாஙகு இசையில அமைநதது. ஒருவரை ஒருவா ஏசிக்கொள்ளும் முறையில பாடபபெறுவது. இததகைய ஏசல இலக்கியங்களை முகம்மதியத் தமிழ்ப்புலவாகள் நிறையப் பாடியுள்ளனா. 'நபிநாயகம் பேரில் ஏசற் கணணிகள', 'தாயமகள் ஏசல' என்பன சிறபபு வாய்ந்தன.

### 3. சிந்து:

காவடிச் சிநது இசையில அமைநத ரத்னாலங்காரச் சிநது, பூவடிசசிந்து போன்ற சிந்து நூலகளையும முகமமதியா இயற்றியுள்ளார்கள்

### 4. கீர்த்தனை:

இசைப பாட்டுக்களால அமைநத 'சீறாக் கீர்த்தனை' சிறந்ததாகும். இதனை இயற்றியவா செய்யது அபுபககா.

### 5. திருப்புகழ்:

காயல பட்டணம காசிம் புலவா பாடிய 'முஸ்லீம் மககள் திருப்புகழ்' முகமமதியாகளால பெரிதும பாராடடப்படுவது.

### 6. நொண்டி நாடகம்:

முகமமதியா தமிழில உண்டாக்கிய புதுவகை இலக்கியம இது: பொதுமககளுககு ஏறற வகையில அமைநதுள்ளது. திருக்கச்சூா நொண்டி நாடகம முதலியன இப பிரிவில அடஙகும்

இவை போலத தாலாட்டு, கும்மி, ஆனநதக களிபபு முதலாய பொதுமககள் இலக்கியங்கள் பலவற்றை முகமமதிய சமயப புலவாகள் பாடியுள்ளாாகள

## 4. புதுவகை இலக்கியம்

அராபிய பாரசீக இலககிய அமைபபினைத் தழுவித தமிழிலும் பல இலககியங்களை முகம்மதியாகள் எழுதினா. அவை, இஸ்லாமியத தமிழ் இலககியம என்னும் முததிரை பெற்றன. அவை, படைபபோா, முனஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா எனபன.

## 1. படைப்போர்:

முகம்மதியருக்கும் ஏனையோருக்கும் நடந்த போரைப பறறிக் கூறுவது. நூலகள்: 'ஐநது படைப போா' 'சூசைன் படைப போர்', 'இநதிராயன் படைப் போா' என்பன.

## 2. முனஜாத்து:

அல்லாவிடம் வேண்டி விண்ணபபம் செய்வது நூல்: முனசாத்துமாலை.

## 3. கிஸ்ஸா:

கதையாகக கூறுவது நூலகள்: யூசுபு நபி கிஸ்ஸா, செயதுன் கிஸ்ஸா.

## 4. மசாலா:

வினாவிடையாக அமைநதது. நூலகள்: நூறு மசாலா, ஆயிர மசாலா முதலியன.

## 5. நாமா:

வரலாறு கூறுவது நூல: நூறு நாமா. நாமா எனபது பாரசீகப் பாவகைகளுள ஒனறு

முனஜாதது, கிஸஸா, மசாலா, எனபன அரபுச் சொறகள ஆகும

## 6. ஞானப் பாடல்கள்:

ஞானககருததுககள அமைநத பாடலகளையும் முகமமதியப புலவாகள் பாடினா அவாகளுள குணஙகுடி மஸதான் சாகிபு, மச்சரேகைச சிததன், தறகலை பீா முகமது சாகிபு ஆகியவாகள குறிபபிடததககவாகள்.

### குணங்குடி மஸ்தான் சாகிபு:

இவா பாடிய பாடலகள பல இவை குணஙகுடி மஸதான சாகிபு பாடல கள என வழஙகபபடுகின்றன. இப பாடலகள் இசைநயம பொருநதியன. தாயுமானவரின பாடலகள் போனறுள்ளன. இவா, நநதீசா சதகம, மனோனமணிக கண்ணி முதலான நூலகளும் பாடியுள்ளாா

### மச்சரேகைச் சித்தன்:

இவா பாடிய பாடலகள, பததுப் பிரிவாக அமைநதுளளன. அவை, தததுவக கருததுககளை வாரி வழஙகுகின்றன.

### தற்கலை பீர் மும்மது சாகிபு:

ஞானககுறம், ஞானரததினக குறவஞ்சி, ஞானமணிமாலை எனப பல நூலகள இயறறியவா

இவ்வாறு முகம்மதியர் இயற்றிய தமிழ் நூல்கள் பல. முகம்மதியரால் தமிழில் புதுவகை இலக்கியங்கள் தோன்றின. பாரசீக, அரேபிய, உருதுச் சொற்கள் பல — 1500க்கு மேற்பட்டன — தமிழில் கலந்தன.

# 15. கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு

உலகம் தழுவிய மதங்களுள் கிறித்தவமும் ஒன்று. இம்மதத்தைத் தோற்றுவித்த ஏசுவின் சீடரான தாமஸ் கி.பி.58—க்குப்பின் சென்னைக்கு வந்து பரங்கிமலையில வாழ்ந்தார் என்பர். ஆயினும் போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய மேலைநாட்டுக் கிறித்தவர் கள் வாணிகம் செய்ய நம் நாட்டுக்கு வந்த காலத்தில்தான் — கி.பி. 16ஆம் நூறறாண்டிலிருந்துதான் கிறித்தவம் செலவாக்குப்பெற்றது. அதனைப பரப்பப பாதிரிமாாகள் தமிழகம் வந்தனர். அவர்கள் தொண்டாலும், தூய உள்ளத்தாலும், அறிவுத்திறத்தாலும் மக்களைக் கவர்ந்தனர்; ஏழை மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்கி அவர்கள் வாழ்வில் நாட்டம் கொண்டனர். பணிபுரியும் நாட்டிற்கு ஏற்பக் கருத்தை வழங்கவேண்டும் என்ற நோக்குடன் தமிழ் இலக்கியத்தில கருத்தைச் செலுத்தினர். அவர்களுக்கு உறுதுணையாக ஆங்கில அரசும் அமைநதது. எனவே, அவர்களின் திருப்பணி சீரிய முறையில் நடைபெற்றது. அவர்கள், தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் மிகப பல.

1. தமிழ் இலக்கிய இலக்கணங்களை மேலை நாட்டு மொழிகளிலும், மேலைநாட்டு இலக்கியஙகளைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்தனர். இதனால தேமதுரத தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தார்கள்; தமிழ்ச்செலவம பெருகியது

2. கருததுக்கள் அனைவருக்கும் புரிய வேண்டுமாயின் செய்யுட்களைக் காட்டிலும் உரைநடையே ஏற்றதாக இருக்கும் என உரைநடைத் தமிழை உண்டாக்கினா.

3. நாவல, சிறுகதை, நாடகம் போன்ற துறைகளில் தமிழை வளரச் செய்தனா.

4. திறனாய்வுக் கலையையும் மொழி ஆராய்ச்சியையும் தமிழில் புகுத்தினர்.

5. நாட்டுப பாடலகள, பழமொழிகள், வழக்குச் சொற்கள், கல்வெட்டுக்கள் முதலியவற்றைத் தொகுத்துக் காப்பாற்றினர்.

6. சொற்களை அகராதி வரிசையில் அமைத்துப் பொருள் கூறும் அகராதி இலக்கியத்தை ஏற்படுத்தினர்.

7. விஞ்ஞான நூல்களைத் தமிழில இயற்றினர்.

8. ஏட்டுச் சுவடியில இருந்த தமிழை அச்சில் கொண்டு வந்தனர்.

9. தமிழில் செய்தித்தாள்கள், இலக்கிய இதழ்கள் வெளிவரத் துணை நின்றனா.

10. தமிழ் எழுத்து வடிவத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்து சிக்கலைப் போக்கினா.

11. பொருளை உணரத்தக்க வகையில் இடம் விட்டு எழுதுதல், புள்ளிகள் முதலியன வைத்துப் பிரித்தல் ஆகியவறறைப் புகுத்திக் கற்கும் முறையை எளிமைபபடுததினா.

12. இலக்கிய இலக்கணங்களை இயற்றித் தமிழனனைக்குப் புதிய அணிகலனகளை அணிவித்தனா.

இவ்வாறு தொண்டுகள் பல புரிந்த கிறித்தவத தமிழ் அறிஞாகளை இருவகையாகப பிரிக்கலாம்.

1. மேலைநாடடுக் கிறித்தவத் தமிழ் அறிஞாகள்.

2. தமிழ்நாட்டுக் கிறிததவத தமிழ் அறிஞாகள்.

*மேலைநாட்டுக் கிறிததவத தமிழ் அறிஞாகளுள் வீரமாமுனிவர், போப்,* காலடுவெல ஆகிய மூவரும் குறிபபிடத்தக்க முதனமையுடையவாகள்.

## மேலைநாட்டுக் கிறித்தவத் தமிழ் அறிஞர்கள்

### 1. வீரமாமுனிவர்: 1680 – 1746

இவா இததாலிய நாடடினா கததோலிக்க மதத்தினா; பெஸ்கி என்னும் இயறபெயரினா, பிரெஞ்சு, லத்தீன, கிரேக்கம, பாரசீகம் முதலான மொழிகளில பயிறசி மிக்க பன்மொழிப் புலவா இவர் தமிழுககுச் செய்த தொணடுகள பல

1. எழுத்துத் திருத்தம்: 'எ' என்னும் எழுதது வடிவம், நெடிலையும, அதன மேல புள்ளிவைத்த 'எ' என்னும் வடிவம் குறிலையும் குறிபபதற்குப் பயனபடுத்தப பட்டன இதனால குழபபம் ஏறபட்டது. இதனை உணர்ந்த வீரமா முனிவா, 'எ' என்பது குற்றெழுத்தையும், 'ஏ' எனபது நெட்டெழுத்தை யும் குறிககுமாறு புதிய வடிவததை உண்டாககினாா. அன்றுமுதல அவர் ஏற்படுத்திய வடிவமே வழங்கி வருகின்றது. இதனால் தமிழ் எழுத்துத்

திருத்தம் பெற்றது. மேலும் முற்றுப் புள்ளி முதலான குறியீடுகளையும் உண்டாக்கினார்.

**2. உரை நடை:** இவரைத் 'தமிழ் உரை நடையின் தந்தை' என்பர். இவர் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இயல்பு, பரமார்த்த குரு கதை போன்ற நூல்கள் இயற்றியுள்ளார். இவற்றுள் பரமார்த்த குரு கதை நகைச்சுவை மிக்கது. தமிழில் தோன்றிய முதல் எள்ளல் (*Satire*) இலக்கியம் என்று பாராட்டப்படுவது. இதுவே தமிழ்ச் சிறுகதைக்கு முன்னோடியாக உள்ளது. இதனை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர்.

**3. இலக்கியம் — தேம்பாவணி:** முனிவரின், தமிழ்ப் புலமைக்குச் சான்றாகத் திகழ்வது; காவிய அமைப்பில சீவக சிந்தாமணியையும் கற்பனைத் திறத்தில் கம்பராமாயணத்தையும் போன்றது; ஏசுநாதரின் வளர்பபுத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவது; 3 காண்டங்கள், 36 படலங்கள், 3615 விருத்தப பாக்கள் கொண்டது; இந் நூலைப் பாடியதற்காகத் தமிழ் அறிஞாகள், இவருக்கு 'வீரமாமுனிவர்' என்னும் பட்டம் கொடுத்துப பாராட்டினர். தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நான்கு காபபியங்களுள் தேம்பாவணியும் ஒன்று என்பார் கால்டுவெல். தமிழ்க் காபபிய வளாச்சியில இந் நூலுக்கு ஓர் தனி இடம் உண்டு.

இந நூலேயன்றித திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலநாயகி வெண்கலிபபா, கித்தேரி அம்மன் அம்மானை, கருணாம்பரப் பதிகம், அனனை அழுங்கல அநதாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கருணாம்பரப் பதிகத்தில தேவாரச் சாயலைக் காணலாம். தனிப் பாடல்கள் சிலவும் இவா பாடியுளளாா தமிழ் நீதி நூல்கள சிலவற்றைத் தொகுத்துத தமிழ்ச் செய்யுள் தொகை எனனும் பெயருடன வெளியிட்டுளளாா.

**4. இலக்கணம்:** ஐநதிலக்கணமும் பற்றிக் கூறும் 'தொன்னூல் விளக்கம்' என்னும் நூல இவா இயற்றியதே இதனைக குட்டித் தொலகாப்பியம் எனப் பாராட்டுவா. பேச்சுத்தமிழ் வழககினைக் கொண்டு கொடுந்தமிழ் இலக்கணம் என லத்தீன மொழியில ஓா இலககண நூல செயதுள்ளார். இநநூல, ஆஙகிலததிலும், மொழிபெயாக்கபபட்டுள்ளது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம எழுதிய கால்டுவெல்லுக்கு இந்நூல் பெருந்துணையாக அமைந்தது என்பா.

**5. அகராதி:** தமிழில் தோன்றிய முதல் அகராதி, சதுரகராதி, இதனை ஆக்கியவா வீரமாமுனிவர். இதனால இவரை 'அகராதியின் தந்தை' என்று கூறலாம். தமிழ் — லத்தீன் அகராதி ஒன்றும், போர்ததுகீசியம் — தமிழ் — லத்தீன்

அகராதி ஒன்றும் இயற்றியுள்ளார். இவை, பிறநாட்டார் தமிழ் கற்பதற்குத் துணைபுரிவன.

**6. மொழி பெயர்ப்பு:** திருக்குறள அறத்துப்பால், பொருட்பால ஆகிய இரண்டையும் லத்தீன் மொழியில் மொழிபெயாத்துள்ளார்.

## 2. போப்: 1820 – 1907

தமிழின் பெருமையை உலகறியச் செய்த அறிஞா; இங்கிலாநது நாட்டில பிறந்தவா; ஆங்கிலேயம், எபிரேயம், கிரேக்கம் முதலாய மொழிகள பயின்ற வர். கிறித்தவத்தைப் பரப்பப பாதிரியாராக வநத இவா, தமிழைப பரபபும ஞானியராக விளங்கினார்; திருக்குறள், திருவாசகம், நாலடியாா, சிவஞான போதம ஆகியவறறையும், புறநானூறு, புறப்பொருள் வெணபாமாலை ஆகிய நூல்களின் சில பகுதிகளையும, மணிமேகலைக கதையையும் ஆஙகிலததில மொழி பெயாத்தாா திருவாசகத்தில அளவிலலாத பற்றுக கொணடார். அதனை 'எலும்புருக்கும் பாட்டு' எனப புகழ்நதாா

ஆங்கில இதழ்களில தமிழின் பெருமை குறிததும பல கட்டுரைகள வரைநதார். அவற்றுள் Poets of the Tamil Land; The lives of Tamil Saints என்பன குறிப்பிடத்தககன மாணவாகள் உணரும் வகையில Elementary Tamil Grammar எனத் தமிழ் இலககணததை எழுதினாா இதனை அககால மாணவாகள், ஒரு வரப்பிரசாதமாகவே கருதினா. ஆக்ஸபோாடு பலகலைக் கழகத்தில 20 ஆண்டுகளுக்குமேல் தமிழப பேராசிரியராகப பணியாற்றிய இவா, தமிழின் மேறகொண்ட காதல பெரிது. தம் கலலறையின மேல 'ஒரு தமிழ் மாணவன' எனறு எழுத வேண்டும் என இவா விருமபினாா எனறால, இவரின தமிழ்ப் பறறை என்னெனறு இயம்புவது!

## 3. டாக்டர் காஸ்டுவெல்: 1814 – 1891

இவா அயர்லாந்து நாட்டில் பிறந்தவா. "தமிழ் முதலிய திராவிட மொழிகள் ஒரே இனததைச் சோந்தன; அவற்றுள தமிழ் மொழி, இலககிய வளத்தாலும் மொழியமைபபாலும் சிறநத உயாதனிச் செம்மொழி" என்று உலகுக்கு முதன் முதல உணாததியவர் இவரே. ஆங்கிலத்தில அதுபறறி இவா எழுதிய நூல, 'திராவிட மொழிகளின ஒபபிலககணம்' (A Comparative Grammar of the Dravidian Languages) எனபதாகும. இதனை முனனாள சட்டமன்றத் தலைவர், மாணபுமிகு புலவா கா. கோவிநதன் அவாகள தமிழில் மொழிபெயர்த்துள்ளாா. வரலாற்றாசிரியாகளுககுப பயனபடும் திருநெலவேலிச் சரித்திரம்' எனனும ஆஙகில நூலையும, நறகருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் ஆகிய தமிழ் நூலகளையும் எழுதியுள்ளாா.

## 4. ராபர்ட் டி நொபிலி: 1577 – 1656

இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவா, தமிழ மக்களின் நடை உடை பாவனைகளை மேற்கொண்டு தமிழ்த் துறவியாக வாழ்நதவர், தத்துவ போதக சாமி எனத் தம பெயரையும் தமிழாக மாறறிககொண்டவா; முதனமுதல தமிழ உரைநடை எழுதிய பெருமை இவருக்கே உணடு இவர் இயறறிய நூல்கள், ஏசுநாதா சரிததிரம், கடவுள நிாணயம், ஆத்தும நிாணயம், மநதிரமாலை என்பன

## 5. சீகன் பால்கு: 1683 – 1719

தரங்கம்பாடியில இருநதுகொணடு தமிழ்ப்பணியும சமயப் பணியும் புரிந்த ஜொமானியா. அங்கே ஓா அச்சுக கூடமும் காகிதத் தொழிற்சாலையும் நிறுவி நூலகளை அசசிட்டு வழஙகியவா. இவா விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயாததுள்ளாா தமிழ்—இலததீன் ஒபபிலககண ஆயவு என்னும் இலககண நூலையும் இயறறியுளளாா.

## 6. எல்லீசர்

ஆங்கிலேயர்; தமிழும வடமொழியும கற்று இலககியத் தொண்டாறறிய வா வீரமாமுனிவரின் வாழ்ககையைத தமிழிலும் வடமொழியிலும் எழுதியவா திருககுறளின முதல பதினமூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலததில அரிய உரை எழுதியவா. பழைய தமிழ்ச சுவடிகளைச் சேகரிததுப பாதுகாபபதில ஆாவம் மிககவா.

## 7. ரேனியஸ்: 1790 – 1838

ஜொமன நாட்டைச சோந்தவா; திருநெலவேலியை இடமாகக கொண்டு சமயப பணி ஆற்றியவா, ஜி யு. போபபின தமிழ்ப பணிககு முன்னோடியாகத் திகழ்நதவா, புதிய ஏறபாடு முழுவதையும் தமிழில மொழிபெயாத்தவா; வேத உதாரணததிரட்டு, தமிழ் இலககண நூல, தமிழ் ஞான நூல போன்ற உரை நடை நூலகளையும அளிததவா.

## 8. லாசரஸ்

நனனூலையும, திருக்குறள் முழுமையையும் ஆங்கிலத்தில மொழி பெயாததவா பததாயிரததிறகும மேறபட்ட தமிழ்ப பழமொழிகளைத திரட்டி The dictionary of Tamil Proverbs எனனும அரியநூலை வெளியிட்டவா.

மேற்கண்டவாகளே யனறிக கிரால, ஏரியல, லேமிலேசா, பெப்ரீசியர், ராட்லா, பொசிவல, வினஸலோ, சாநதலா போனற மேலை நாட்டு அறிஞாகளும தமிழ்த தொண்டு புரிநதுளளனா

# தமிழ்நாட்டுக் கிறித்தவத் தமிழ் அறிஞர்கள்

## 1. வேதநாயகம் பிள்ளை: 1826 – 1889

இவர் மாயூரத்தில் முன்சீபாகப பணியாற்றியவர்; பிரதாப முதலியாா சரித்திரம் எனனும் நாவலை எழுதியவர். இதுவே தமிழில தோன்றிய முதல் நாவல். இதனால இவரை 'நாவலின தநதை' என்று புகழ்வா. இவர் சுகுணசுநதரி சரித்திரம் என்னும் நாவலும் எழுதியுள்ளாா. நீதி நூல், பெண்மதிமாலை, தேவமாதா அநதாதி, திருவருள் அந்தாதி, திருவருள மாலை, பெரியநாயகி அம்மாள பதிகம் முதலிய இலக்கியங்களையும், தனிபபாடலகள் பலவறறையும் பாடியுளளாா. இவரது இசைப்புலமையைச் சாவசமய சமரசக் கீர்த்தனை, சததிய வேத கீாத்தனை ஆகியவற்றில் காணலாம 'சமரச சன்மாாக்க நெறி இயக்க'ததில் இவாக்கு ஓர் இடம் உண்டு

## 2. கிருஷ்ணப் பிள்ளை: 1827 – 1900

இவர், வைணவராகப பிறந்து கிறிததவராக மாறியவர்; ஜான் பன்னியன் எனபவா எழுதிய The Pilgrims Progress எனனும் நூலைத் தழுவி 'இரடசணிய யாததிரிகம்' எனனும் காப்பியததைப படைததவா. இநநூல, மூலநூலபோல இருநததால 'தமிழ்ப் பனனியன்' என்று பாராடடப் பெறறவா. இந்நூல 4000 விருததப்பாககளைக் கொண்டது. கம்பராமா யணததின சாயலைக் கொண்டு திகழ்வது. இதனால, இவரைக் 'கிறித்தவக் கம்பன்' எனறு புகழ்ந்துரைபபா. இவா, கிறித்தவாகளின தேவாரம் என்று போற்றப்படும் இரடசணிய மனோாகரம், இரடசணியக் குறள், இரட்சணிய சமய நிாணயம் முதலிய நூலகளுேம எழுதியுள்ளாா.

## 3. வேதநாயக சாஸ்திரி

இவா பெதலகேம் குறவஞ்சி, சென்னைப் பட்டணப பிரவேசம் ஆகிய நாடக நூலகளும், ஞான ஏற்றப்பாட்டு, ஞானக்கும்மி, ஞான உலா முதலிய நூலகளும் செய்துள்ளாா.

## 4. நல்லூர் ஞானப்பிரகாசர்

இவா ஈழ நாட்டினைச் சோந்தவா; பனமொழிப புலவர்; 'சொற் பிறப்பு ஒபபியல தமிழ் அகராதி' எனனும் மொழி நூலை இயறறியவர். இந்நூல, மொழி நூலாராயச்சியில முதல நூலாகத் திகழ்கின்றது.

## 5. சாமுவேல் பிள்ளை

தொலகாபபியம், நனனூல ஆகிய இலக்கண நூல்களின் ஒறறுமை வேறறுமைகளை விளக்கி, 'தொலகாபபிய நன்னூல்' என்னும் நூல ஒன்று இயறறியுள்ளாா.

பைந்தமிழின் பெருமையைப் பாருக்கு உணர்த்திய கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு என்றென்றும் நிலைத்து வாழும் இயல்பினது. இன்று மேலை நாட்டவர்களில டாக்டர் எமனோவ், கமீல் சுவலபில், பில்லியோசா, ரூதின் செம்பியன் போன்றவர்கள் தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளார்கள். உலகத்தமிழ் மாநாடு கூட்டித் தமிழுக்கு உலகம் போற்றும் பெருமையளித்த டாக்டர் தனிநாயக அடிகளார், கிறித்தவப் பாதிரியார் அல்லரோ!

# 16. உரைநடை

பாட்டு, உரைநடை என்ற பிரிவுகளில் பாட்டே முதலில் தோனறியது என்பா சிலா; உரைநடையே முதலில தோன்றியது என்பா வேறு சிலர். தமிழ் மொழியை எடுததுக் கொண்டால், இப்போது நமக்குப் பழங்கால நூல்களாகக் கிடைப்பன அனைத்தும் பாட்டே எனலாம். இவ்வாறு தமிழில் பாட்டு முதலில் தோன்றியதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

1. உணாசசியை வெளியிடுதற்கு ஏற்ற அமைப்புடையது பாட்டே.

2. நினைவில வைத்துக் கொள்வதற்கும் மீண்டும் எடுத்துச் சொல்வதற்கும் ஏற்றது பாட்டே.

3. எழுததாணியும் பனையோலையும் கொண்டு இலக்கியம் படைத்த காலத்தில எழுதி வைப்பதறகு ஏறற சுருக்கம் கொண்டதும் பாட்டே.

4. தமிழ் மக்களின் வாழ்வு முழுவதிலும் பாட்டுக் கலநதுள்ளது. ஆதலால் தமிழ் இலக்கிய அறிஞாகள், உரை நடையைவிடப் பாட்டையே படைப்புக்கு ஏற்ற கருவியாகக் கொண்டனர்.

இத்தகைய காரணஙகளால பழங்காலத் தமிழ் இலக்கியம், பாட்டையே வாழ்விடமாகக் கொண்டது. ஆயினும், உரைநடை இல்லாமலா போயிருக்கும்! அன்றிருநத தமிழன் பாட்டாலா பேசியிருப்பான்? ஒரு பாட்டை விளககும போது, பாட்டினாலா விளக்கியிருப்பான்?

### சங்ககால உரைநடை

தொலகாப்பியா, உரைநடை பற்றிக கூறுகின்றாா. மேலும், அவர் இயற்றிய தொலகாபபியத்தில அமைந்த நூற்பாக்களே உரைநடையின் சாயல் கொண்டிருக்கின்றன. சங்கப் புலவர்கள், பெரும்பாலும் ஆசிரியப்பாவையே பாட்டுக்கு உரிய வடிவமாகக் கொண்டனா. இநத ஆசிரியபபா உரைநடையின் அமைபபுடையது; ஓசையுடையது.

## சிலம்பில் உரைநடை

சிலப்பதிகாரத்தை, உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் என்பர். உரைபெறு கட்டுரை, ஆய்ச்சியர் குரவையில் 'கருப்பம்' என்னும் பகுதி, வாழ்த்துக் காதையில் உரைப் பாட்டுமடை என்பன சிலம்பில் வரும் உரைநடைகள். சிலம்பிலேயே முதன் முதலில இவ்வாறு உரைநடையைக் காண்கின்றோம். இந்த உரைநடையும், பாட்டுப்போலவே எதுகை, மோனை பெற்று இசைநயத்துடன் விளங்குகின்றது.

## களவியல் உரையின் உரைநடை

இறையனார் களவியல் என்னும் அகபபொருள் இலக்கண நூலுக்கு ஓா உரை உள்ளது. இதனை எழுதியவா நக்கீரர் எனபா. இவ்வுரையே அளவால் பெரியது; செவ்வி மிக்கது. இவ்வுரையைப படிககும்போது கவிதை படிப்பது போன்ற உணர்வைப் பெறுகின்றோம். இக்காலததுக் கூறும் வசன கவிதையைப் போல இவ்வுரை உள்ளது என்றால் அது மிகையாகாது. இவ் வுரையின் காலம் கி.பி. 8ஆம் நூறறாண்டு.

## உரையாசிரியர்களின் உரைநடை

களவியல் உரைக்குப பின்னா, தொலகாப்பியம் முதலான இலக்கண நூல்களுக்கும், எட்டுத் தொகை, பத்துப்பாடடு முதலான இலக்கிய நூல களுக்கும் பலர் உரை எழுதினா். இவர்களுள் இளம்பூரணா, பேராசிரியர், நச்சினாாக்கினியர், சேனாவரையா, பரிமேலழகர் முதலியோா குறிபபிடத்தக்கவர்கள். இவாகளின உரைநடைகள், கற்றவாகளுக்கே உரியன; தர்க்க முறையில் அமைந்தன. இவ் உரைகள், தனி உரைநடைகள் அல்ல; நூலுக்குப் பொருள கூறிய உரைகளே இத்தகைய உரைநடை கி.பி. 8.ஆம் நூற்றாண்டு தொடங்கிக் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் உலகில செங்கோலோச்சியது.

## மணிப்பிரவாள நடை

பலலவர்களின் காலத்தில சமணாகளும், பௌத்தர்களும் வட மொழியைத் தமிழில் புகுத்திப் புது உரைநடையை உண்டாக்கினா. முத்தும் பவளமும் சோந்த மாலை கண்ணுக்கு விருநதாவதுபோல, வடமொழியும் தமிழும் கலந்த கலவை நடை, அறிவுக்கு விருந்தாகும் என்று அவர்கள் கருதினா். அவ் வுரைநடை மணிபபிரவாளம் எனப பெயாபெற்றது. ஸ்ரீபுராணம், கத்யசிந்தாமணி முதலான சமண நூலகள் இத்தகைய உரை நடையில அமைந்தனவே. சமண , பௌத்தாகளால் தோற்றுவிக்கப்பட்ட

இவ்வுரை நடையினைப் பிற்காலத்தில் வைணவர்கள் வளர்த்தனர். ஆனால், இக் கலப்புநடை தமிழில் நிலைக்கவில்லை.

## கல்வெட்டுக்களில் உரைநடை

தமிழில் கிடைக்கும் முதல் கல்வெட்டு கி.பி. 5 அலலது 6ஆம் நூற்றாண்டில தோன்றிய திருநாதர் குன்றத்துக் கல்வெட்டே. இக் கல்வெட்டில் தமிழ் உரைநடையைக் காண்கிறோம். இவ்வுரை நடையிலும் வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்த மணிபபிரவாளம் அமைநதிருக்கின்றது. பிற்காலச் சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் தமிழ உரை நடையில் உள்ளன. இக் கலவெட்டுக்களில காணப்படும மெய்க்கீர்ததிகளதான் தமிழில *உரைநடையாக ஏறபட்டன என்ற கூறலாம்.* இவ்வுரைநடையும் *ஆசிரியப்பா* வின் அமைபபினை ஒத்து இயங்குகின்றது.

## 17ஆம் நூற்றாண்டில் உரைநடை

ஐரோப்பியர் வரவால, தமிழ் இலக்கியப் போக்கில மாற்றங்கள் ஏற்பட்டன; மாற்றங்களுள் ஒன்றே உரைநடை. தமிழகம் வநத அவர்கள், தமிழ் மக்களிடம் தம் சமயக் கருத்துக்களைப் பரபப உரைநடையை மேறகொண் டனர்; அதுவே அவாகளுக்கு எளிதாக இருந்தது தத்துவ போதகா (Robert de Nobili) பல உரைநடை நூல்கள் எழுதினாா. அவை ஏசுநாதர் சரித்திரம், தத்துவக் கண்ணாடி, ஆத்தும நிாணயம் முதலியன. இவைகளே தமிழில முழுவதும் உரைநடையால் ஆகிய நூலகள். இந் நூலகளில், வட சொற் களைத் தத்துவ போதகா மிகுதியாகக் கையாண்டுள்ளார். இக காலத்தில வாழ்நத ஆனநதரங்கம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு, தமிழ் இலக்கிய வரலாறறில் குறிப்பிடத் தக்கது. ஆனந்தரங்கம் பிளளையின் வசனம் நேரான – பேச்சுத்தமிழ வசனம்; பலவிதமான வாண ஜால வித்தைகள செய்கிற வசனம்; உற்சாகமாகப் படித்து அநுபவிக்ககூடிய வசனம. இதே நூற்றாண்டினரான தமிழ் அறிஞா சிவப்பிரகாச சுவாமிகள் '*தருகக பரிபாஷை*' என்னும உரைநடை நூலை எழுதினாா.

கி.பி. 17ஆம நூறறாண்டு முதல், கருத்தை உணர்த்தும் கருவியாக உரைநடை இலக்கியம் மேற்கொள்ளப்பட்டு, தமிழ் இலககியம் புதுப் பாதையில் தளிா நடை இடத் தொடங்கியது.

## 18ஆம் நூற்றாண்டில் உரைநடை

பெஸ்கி என்னும் வீரமாமுனிவர், தெளிவான நடையில எழுதத் தொடங்கினாா. இவா எழுதியன 'வேதியா ஒழுக்கம்', 'பரமாாதத குரு கதை' என்பன. வேதியா ஒழுக்கம் என்னும் நூலை அனைவரும் அக் காலத்தில்

விரும்பிப் படித்தனர். பரமார்த்த குரு கதை, சிறந்த எள்ளல் (Satire) இலக்கிய மாக அமைந்து மக்களைக் கவர்ந்தது. இவருடைய உரைநடை, கல்வியறிவில் குறைந்த மக்களுக்கும் பொருள் புலப்படக்கூடிய முறையில் விளங்குகிறது.

இந நூற்றாண்டினரே பழைய புலவர்களின் மரபில் ஊறிய சிவஞான முனிவா. இவா தூய தமிழ் நடையில் எழுதினார். சிவஞான போதத்திற்கு எழுதிய பேருரையும் சிற்றுரையும், தொலகாப்பியப் பாயிர விருத்தி, முதற்சூத்திர விருத்தி என்பனவும் இவரின் உரையழகுக்குச் சான்றுகள். இவரின நடை, உணாச்சியும், வேகமும் கொண்டது; புலமை வீறு சான்றது. இக் காலத்தில விக்ரமாதித்தன் கதை, பன்னிரண்டு மந்திரி கதை, இராமாயணக் கதை, பாரதக் கதை முதலியனவும் தோன்றின. இந்நூல்கள் தோன்றியதை நோக்கினால், இக் காலத் தமிழகம், உரைநடையில் கூறப்படும் கருத்துக்களுக்கு ஆதரவு நல்கத் தொடங்கிவிட்டது என்பது தெளிவாம்.

## 19ஆம் நூற்றாண்டில் உரைநடை

பழங்கால இதிகாச புராணக் கதைகள் உரைநடையில் வெளிவந்தன. இராமாயண வசனம், மகாபாரத வசனம், பாகவத வசனம் முதலிய நூலகள் தோன்றின உரைநடையைப் படிக்கும் பழக்கம், மக்களிடம் மிகுந்தது. மகாராட்டிர மொழியில் இருநத பஞ்சதந்திரக் கதைகளை 1826இல் தாண்டவராய முதலியாா தமிழில எழுதினாா. அந நூலுக்குப் பஞ்சதந்திரக் கதை என்று பெயா. இந் நூலின் நடையைக் காலடுவெல் சிறபபாகக் குறிபபிடுவர். அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாா விநோதரச மஞ்சரி எனனும் நகைச்சுவை ததும்பும் உரைநடை நூல தந்தார்.

இக் காலத்திலும் பல உரையாசிரியர்கள், உரைநடை வளர்ச்சியில் பங்கேற்றனா அவர்களுள் சொககபப நாவலர், விசாகப பெருமாளையர், சரவணப பெருமாளையா எனபோா குறிப்பிடத் தக்கவர்கள்.

'தமிழ் உரைநடையின் தநதை' என்று போற்றப்படுபவர் ஆறுமுக நாவலா. இவா திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கநதபுராணம் ஆகியவறறிற்கு வசனம் எழுதினாா. பாலபாடம், சைவ வினாவிடை முதலியன அளித்தாா; இலக்கண வழுவில்லாமல, தமிழில் எளிய நடையைக் கொண்டு வந்தாா. இவரை 'வசன நடை கைவந்த வல்லாளர்', என்று போற்றுவா. இவருடைய உரைநடை, பழமையும் புதுமையும் தழுவிய முற் போக்குடைய நடை.

அருடகவிஞரான வள்ளலார், மனுமுறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலும், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் கட்டுரையும் எழுதினார். வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியாா சரித்திரம், சுகுணசுந்தரி,

இராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம், ப. மாதவய்யாவின் பத்மாவதி சரித்திரம் என்னும் நாவல்கள் உரைநடையைப் புதுத்துறையில் வளர்த்தன.

## 20 ஆம் நூற்றாண்டில் உரைநடை

இந்நூற்றாண்டுத் தொடக்க முதல் உரைநடை, பெருஞ்செல்வாக்குப் பெற்றது. சங்ககாலத்தில கவிதைக்கு இருந்த மதிப்பு இக் காலத்தில் உரைநடைக்கு ஏற்பட்டது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார், உரைநடையில் மறுமலாச்சி ஏற்படுத்தினார். 'வாழ்விலே கையாளுகிற பேச்சுச் சந்தங்களைக் கவிதையிலே கையாள முடியும்' என்று காட்டினார்.

"சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்திய வயிறு; இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு என் வீட்டிலே இரண்டு உயிாகள் வாழ்கின்றன."

– சிட்டுக் குருவியின் வருணனை பற்றிய இவ்வரிகள், உள்ளத்தைக் கொளளை கொள்கின்றன.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்கள் தெளிநத நடையில தம் வாழ்க்கை அனுபவங்களையும், சிந்தனைகளையும் வெளியிட்டாாகள். என் சரிதம், மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், தியாகராசச் செட்டியாா சரித்திரம், நலலுரைக் கோவை, நினைவு மஞ்சரி என்பன அவர் எழுதிய நூலகள.

இந் நூறறாண்டில தமிழ் உரைநடையில் வேந்தர்களாகத் திகழ்ந்தவாகள் இருவர். ஒருவர் அறிவுக்கடல மறைமலையடிகளார்; மற்றொருவர் தமிழ்த் தெனறல திரு.வி.க; மறைமலையடிகளார், தனித்தமிழ் இயக்கம் கண்டவர்; தமிழ் நூலகளின் நுட்பங்கள் எல்லாம் உணர்நதவா. ஆதலால் அவர்நடையில் தனித் தமிழ் துள்ளி வருகின்றது. அறிவு முன்னிற்கின்றது. மாணிக்க வாசகர் வரலாறும் காலமும், பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், முலலைபபாட்டு ஆராய்ச்சி உரை, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை முதலான நூல்களில் இவரின் உரை நடையழகு கண்டு மகிழலாம். இவர் உரைநடை, நீண்ட வாக்கியங்களையுடையது; ஓசைச் சிறபபுடையது. இவரின் தனித்தமிழ் நடையைப் பின்பற்றி மொழிநூல அறிஞா தேவநேயப் பாவாணா, இளவழகனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம் போன்ற அறிஞா பெருமககள் எழுதி வருகின்றனர். தேவநேயப் பாவாணரின் நடையில நெஞ்சுரம் காணலாம். டாக்டர் வ.சுப. மாணிக்கனாரின் எழுத்தில் புலமைச் செறிவினைப் பார்க்கலாம். 'தென்மொழி' என்னும் தனித்தமிழ் இயக்க இதழ், மறைமலையடிகளாரின் உரைநடை விளைவே.

தொழிலாளர்களின் தலைவர் திரு.வி.க. தொழிலாளர்கள் வாழவும், இந்திய நாடு விடுதலை பெறவும் உழைத்தவர். அதற்காக மேடைகள் பல கண்டவர். எனவே இவர் எழுத்தில் உணர்ச்சி மிகுதி; இவருடைய உரைநடை சிறுசிறு சொறறொடர்களால் அமைந்தது; ஒரு கருத்தைப் பல வகையிலும் வற்புறுத்துவது; கவிதை எனத் திகழ்வது. முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் முதலாயின இவருடைய படைப்புக்கள். இவருடைய நடையைப் பின்பற்றி எழுதி வருபவா டாக்டர் மு.வ. அவாகள். இவருடைய நடை எதையும் தெளிவாக விளக்கும் ஆற்றல் வாய்ந்தது. காந்தியடிகளின் தூய வாழ்க்கைபோல இவரது நடை விளஙகுகின்றது என்பர். இவரைப் பின்பற்றி கு. ராஜவேலு, ம.ரா போ.குருசாமி போன்றோர் எழுதி வருகின்றனர்.

பண்டிதமணி கதிரேசனாரின் இலக்கிய நடை சிவஞான முனிவரின் நடைபோனறு இலஙகுகின்றது. கா.சு. பிள்ளையின் நடை, நீரோட்டம்போல் செலகின்றது எதுகை மோனை நிரம்பிக் கவிதையெனத் திகழகினறது, சொலலின செலவா சேதுபபிள்ளையின் நடை. இவாகளின் நடைகள, தமிழ் இலக்கிய உயர் நடைகள்.

தமிழில உயிர்த் துடிபபான — தூய தமிழ் என்ற நினைவுக்குள் அடங்காமல் அமைநத நடையும் உண்டு. இந நடையினை மேறகொண்டோர் பலர். வெ. சாமிநாத சர்மா எழுதிய அரசியல, பொருளாதாரம், வரலாறு பற்றிய பலவேறு நூல்களை இததகைய நடைக்குச சான்றாகக் கூறலாம். இவர் மொழி பெயாத்த 'சமுதாய ஒப்பநதம்' உயர்ந்தது.

தமிழில் புகுந்த புதிய இலக்கியத் துறைகளாக நாவல், சிறுகதை, விமாசனம் முதலானவை பற்றியும் உரைநடைகள் வியக்கததக்க முறையில தோன்றியுள்ளன. கலகி அவாகளின் தமிழும், புதுமைபபித்தன், மௌனி போன்றோாகளின் எழுத்தும் இவ்வகையில் குறிப்பிடத்தககன.

மககளின் உணாச்சிகளை எழுப்பும் நடையை — அடுககு மொழி நடையைப் பேரறிஞா அண்ணா அவாகளின் எழுத்தில் காணலாம். இவருடைய தமிழநடை, தேனென இனிக்கின்றது. இநநடைக்குத தந்தை இவரே. இவரைப் பினபற்றி இபபோது பலா எழுதி வருகினறனா. அவாகளுள கலைஞா கருணாநிதி அவாகள குறிபபிடத்தக்கவா. இவரின் நடையைப் படிக்கும்போது அலங்காரமும் அழகும் இணைநது வருதலைக காணலாம்.

தமிழ உரைநடையின் வாழ்வு, எதனையும் தமிழில சொலலலாம் என்ற அளவுககு வளாநதிருக்கின்றது. இவ்வாழ்வு தொடர்கதையாக, எழுத்தாளா கள் பலர் தோன்ற வேண்டும்; புதிய சிந்தனைகளை உலகுக்கு அள்ளி வழங்கவேண்டும்.

# 17. கவிதை

இலக்கியக் கலைகளில கவிதை மிகச் சிறந்தது; முடிவேந்தாகத் திகழ்வது; சொற்களின் சேர்க்கை, மொழியின் வேகம், நடையின் அழகு, இசை இனிமை, சொல்லும் திறம், உணர்ச்சியின வெளிபபாடு, படிபபவரை மயங்கவைக்கும் ஆற்றல இவற்றால மக்களை ஆடடிப படைககும் சக்தி பெற்றது. இக கவிதையில தமிழ்மக்கள் மூழ்கித் திளைத்து மகிழ்ந்திருக்கிறார்கள். இலக்கியததை அமைகக மட்டும் அவாகள் கவிதையைப பயன்படுத்தவில்லை. இலக்கணம், மருத்துவம, சோதிடம், சிற்பம், ஓவியம முதலிய அனைததிற்கும் கவிதையைப் பயன்படுததியிருக் கிறாாகள கவிதை, தமிழ் மககளின் உடன்பிறபபு; உயிாமூச்சு. பழைய தமிழ் இலககணம் என்று பாராட்டப் பெறும் தொல்காப்பியம், கவிதையின அழகோடு அமைநத இலக்கணமலலவா! சங்க இலக்கியக் கவிதைகள, சாகா வரம் பெறறவை! இவை ஆசிரியப்பா, வஞ்சிபபா, கலிபபா, பரிபாடலபா என்னும் யாப்பில அமைநதவை. இவைகளுககுப் பின அறநூல்கள் தோன்றின. இவைகள் வெணபா யாப்பில் பாடப்பட்டன. பின்னா தேவார ஆசிரியாகள, இசை அழகு கூடிய பாடலகளைப் பாடினாாகள். திருததக்க தேவா, இநத இசையழகில ஈடுபட்டு இசை நயம் மிக்க விருததப்பாவில் காவியமே பாடினாா இநத அமைபபினைக் கணடாா கம்பர், விருததப் பாவினை வைத்துக் கவிதைத் திருவிளையாடலே செய்து தமிழ்க் கவிதையில கம்பீரத்தைத் தோற்றுவிததாா. இவருக்குப் பின வநதவாகள், விருததப் பாவினையே மேறகொண்டார்கள. சிலா இசைபபாக்களும் பாடினாாகள. வேறுசிலர் நாட்டுப பாடலகளை அடியொற்றியும் எழுதினாாகள. இவ்வாறு வளாந்த தமிழ்க் கவிதையில காதல, வீரம், அறம், பகதி, கதை நிகழ்ச்சிகள், புகழச்சி, பொழுதுபோக்கு என்பனவே பொருள்களாக இருநதன. இநநிலையில 19ஆம் நூற்றாணடின இறுதியில வடலூா வள்ளலாா இராமலிங்க சுவாமிகள தோன்றினாா. மக்களின் ஏழமை கண்டு துடித்தாா; சமயப பூசல கண்டு கொதித்தாா. சமரசம் வேணடிச் சனமாாககப் பாடலகள் இயற்றினார். இருபதாம் நூற்றாண்டு பிறந்தது "மனித வாக்கததின் வரலாறறில் இநத நூற்றாண்டைப போல், வேறு எப்பொழுதும் சமுதாய உணர்வு இவவளவு ஆழமும் அகலமும் பெற்றிருநததில்லை" எனபாா அமரா ஜீவா. இததகைய பெருமைமிக்க நூற்றாண்டில் "கம்பன் இசைத்த கவியெலலாம் நான" என்ற புதிய வேகத்துடன் பாரதி, தமிழ்க் கவிதையுலகில் அடியெடுதது வைததாா. 'தமிழ மொழியைப புகழில ஏற்றும் கவியரசா தமிழ் நாட்டுக்கிலலையெனும் வசை என்னால கழிந்தது' என்று பெருமிதத்துடன் புறப்பட்டாா; அவர் கவியரசர் என்பது புகழ்ச்சியன்று; உண்மை.

**பாரதியார்:** இந்திய நாடு அடிமை இருளில மூழ்கி இருந்தபோது பாரதியார் இளஞாயிறாகத் தோன்றினாா. விடுதலை வேட்கை கொண்டு வீறிட்டெழுநதார். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விடுதலை உணர்வு பொங்கி எழுநதது. இநநிலையில் அடிமையில் இன்பம் காணுவதிலும் சில ஆத்மாக்கள் இருந்தன.

**மண்ணில்இன் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்**
**மாண்பிணை இழப்பாரோ?**
**கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்**
**கைகொட்டிச் சிரியாரோ?**

என்று குமுறினாா. இவ்வாறு உயிர்த்துடிப்பு மிக்க தேசியப் பாடல்கள் பல பாடினாா.

**எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்**
**எல்லாரும் ஓர்நிலை எல்லாரும் ஓர்விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்!**

எனனும் ஒபபிலாத சமுதாயத்தை உலகுக்கு ஒரு புதுமையாகப் படைகக வேண்டும் எனக் கனவு கணடாா. இதற்கு நாட்டு விடுதலை மட்டும் போதாது சமுதாய வாழ்விலும் விடுதலை பெறவேண்டும் என்று கருதினார். சகதியைத் தெய்வமென முழங்கிய அவருககுப பெண்கள் ஏட்டையும் தொடுவது தீமை என்று வாழ்வது வேதனை அளித்தது.

**"பெண்ணுக்கு விடுதலை என்று இங்கோர் நீதி பிறப்பித்தேன்**
**பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை என்றால்**
**பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை"**

என்று ஆணையிட்டாா பலா பசியால் வாடுவதும், அறியாமை இருளில் மூழ்குவதும் கணடு,

**"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு**
**வாழும் மனிதருக் கெல்லாம்**
**பயிற்றுப் பலகல்வி தந்து — இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்"**

எனறு வேண்டுகோள விடுத்தாா இவவாறு பாரதி, தேச சமுதாய நலனகள் கருதி, சுதநதிரம், சமதததுவம், சகோதரத்துவம் கருதிப் பல கவிதைகள் பாடினாா பிறநத மண்ணின் இயலபுக்கு ஏற்பத் தோத்திரப் பாடலகளைத் தேசியத துடிபபோடு அருளினாா. கண்ணன பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம எனனும் முபபெரும பாடலகள் படைத்தாா. எளிய பதங்கள், எளிய நடை, எளிதில அறிந்துகொளளககூடிய சநதம் இவையே இவருடைய பாடலகளின் தனிததன்மை.

*பாரதி*, மறுமலர்ச்சிக் காலத்தின் விடிவெள்ளி; கற்றார்க்கு மட்டும் உரிய கவிதையைப் பொதுமக்களுக்கு உரித்தாக்கிய மக்கள் கவி; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்த புதுமைக்கவி; உருவகக் கவிதை (Symbolic poem) என்ற புதிய கவிதை அமைப்பைக் குயிலபாட்டு மூலம் தோற்றுவித்த மூலவா; குழந்தைப் பாடல்கள் உருவாக்கிய முதல்வர்; வசன கவிதையின் தந்தை; கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்ற இரண்டு குறிக்கோள் களையும் இணைதது புதிய கவிதையைத் தமிழில் தோற்றுவித்த சீாதிருதத வாதி; கவிதையுலகில 'பாரதி சகாப்தம்' வரலாற்றுப புகழ்பெற்றது.

*பாரதிதாசன்*: பாரதியால் பாராட்டப்பெற்ற பெருஙகவிஞா; சீர்திருத்த எண்ணஙகளும் தமிழுணர்வும் கொண்ட புரட்சிக் கவிஞா; இவர் கவிதை களில் உணாசசி, ஓவியம் பெறுகின்றது. இயற்கை, வாழ்வு பெறுகின்றது. 'பாரதிதாசன' என்ற பெயரில் அமைநத கவிதைத் தொகுப்புக்கள் நான்கும், பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அழகினசிரிப்பு, இருண்ட வீடு என்பன வும் இவருடைய உயரிய படைப்புககள். நகைசசுவை மிளிரக் கவிதை பாடுதல் என்பது இவருக்குக கைவநத கலை. இவரின பாடலகளில தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ்மொழி என்ற உரிமை உணர்சசியை மிகுதியாகக் காணலாம்.

**என்னரும் தமிழ்நாட் டின்கண்**
**எல்லோரும் கல்வி கற்றுப்**
**பன்னரும் கலை ஞானத்தால்**
**பராக்கிர மத்தால் அன்பால்**
**உன்னத இமம லைபோல்**
**ஓங்கிடும் கீர்த்தி எய்தி**
**இன்புற்றார் என்று மற்றோர்**
**இயம்பக்கேட் டிடல் எந்நாளோ?**

எனற பாடலில, இவரின் கனவைக காணலாம்.

***"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்***
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு"**

என்பது, இவரது தேசிய கீதம.

இவா், பாரதியாரின் பரம்பரையைச சோநதவா; பாரதி செய்யாத பல புரடசிகளைச செயதவா. கைம்பெண் நிலை, குடும்பக் கட்டுபபாட்டை விளக்கும் 'தவிப்பதற்கோ பிள்ளை' என்னும் பாடல்களைப் பாடிப புதிய புரட்சிகள் ஏற்படுததியவா. தனககென ஒரு பரம்பரை வளரும் அளவிற்கு வான்புகழ கொண்டவா. 'பாரதிதாசன், கவிதைகளைக் கவண்கற்களாகப் பயன்படுத்துகின்றாா' என்பார் பேரறிஞா அண்ணா அவர்கள். இக் கூற்றைக் கவிஞரின கவிதைகள் மெய்ப்பிக்கின்றன.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை:** பாரதிதாசன் பாடலகளில புயல் அடிக்கக் காணலாம். கவிமணியின் கவிதையில் தென்றல வீசக் காணலாம். இவருடைய கவிதைகளில மென்மையும் பெண்மையும் தவழும்; குழந்தையின் அன்பு கொஞ்சும; இவா பாடிய குழந்தைப் பாடலகள் சிறபபு வாயநதன.

> "பந்தம் எரியுதோடி! — கண்களைப்
> பார்க்க நடுங்குதடி!
> குந்தம் வாள் ஈட்டியெலாம் — கூடவே
> கொண்டு திரியுதடி!

எனக் கூணடில அடைபடட புலியைப பாாததுக் குழநதை கேடடதாகப் பாடுகினறாா இஙகே குழநதையின நினைவை அப்படிக கவிதையாக்குகின்றாா

வெணபா என்னும யாபபு இவருககு ஏவல செய்கிறது என்றால, அது மிகையாகாது. அநத அளவுககு வெணபாவை நளினமாகக் கையாண்டுள்ளாா.

> "முத்து பவளம் முழுவயிரம் மாணிக்கம்
> பத்தியொளி வீசும் பதக்கமெல்லாம் — சித்தன்
> சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
> தரங்கண்டு தந்த தனம்"

சிரங்குக்குப பாடிய இநத வாழததுப் பாடலில நகைசசுவை ததும்புகின்றது. நாஞசிலநாட்டு மருமககள வழி மானமியம், ஆசியஜோதி, உமாகய்யாம எனபன இவரின் படைபபுககளில சிறநதன.

**நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை:** இவா தேசியககவிஞா. இவருடைய 'கததியின்றி ரத்தமினறி யுததமொனறு வருகுது' என்னும் பாடல் எழுசசி மிககது. "தமிழன் எனறொரு இனமுணடு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என முழஙகும இவா, அவனும் அவளும, தமிழன இதயம் முதலிய நூல்கள் இயறறியுள்ளாா.

பாரதியின் சமூக உணாவைப் பாரதிதாசனும், பக்திக் கனவைக கவிமணியும், தேசிய உணாவை நாமககல கவிஞரும் தழுவிக கொண்டனர்

இவாகளேயன்றிக கவிதைத் துறையில் குறிபபிடத் தக்கவாகளும் சிலா உள்ளனா. பெ. தூரன, சோமு ஆகியோரின கவிதைகள், உணாசசியை நிலைககளமாகக் கொணடவை; சிநதனைககு விருந்தளிப்பவை முடியரசன, வாணிதாசன, சுரதா, மு அணணாமலை ஆகியோா பாரதிதாசனின பரம்பரையைக் காப்பாற்றி வருபவாகள். முடியரசனின் 'பூங்கொடி' எனனும் காவியம், இந நூறறாண்டிலும் காவியம் எழுத முடியும் என்பதற்கு எடுத்துககாட்டு. வாணிதாசனின் கவிதைகளில இயற்கை அழகு கொஞ்சும்; சுரதாவின் 'தேனமழை' என்னும் தொகுதி, தெவிட்டாத இன்பம்

தருவது. மு. அண்ணாமலையின் 'தாமரைக்குமரி' நினைவைவிட்டு நீங்காதவள்.

கே.சி.எஸ் அருணாசலம், சாலை இளந்திரையன், சிற்பி பாலசுப்பிர மணியம், வேழவேந்தன், மீ. இராசேந்திரன், வலம்புரி வேங்கடபதி, உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் முதலிய எண்ணற்ற கவிஞர்கள் கவிதைகள் எழுதி வருகின்றார்கள். இவர்களின் கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

இன்று கவிதையின் இனிமையைத் திரையுலகில் காணமுடிகின்றது. பின்னணி இசையும், கதையின் சூழலும் இத்தகைய கவிதைகளை மக்களின் பாட்டாக மாற்றியுள்ளன. இத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

"காடு வெளைஞ்சென்ன மச்சான் — நமக்குக்
கையும் காலும் தானே மிச்சம்"

என்பன போல, ஏழையின் குமுறல்கள், இவரின் பாடல்களில் மிகுதி. இவருக்குப்பின் கவிஞர் கண்ணதாசன் இத்துறையில் முதலிடம் வகிக்கிறார். இவர் பாடல்களில் வாழ்வின் நெளிவு சுளிவுகளைக் காணலாம். திரைப்படப் பாடல்களை இலக்கியப் பாடல்களாக மாற்றிய பெருமை இவருக்கு உரியது. வாலி, பஞ்சு அருணாசலம், பலபட்டம் மாணிக்கம் முதலியவர் பலர், திரைப்படப் பாடல்கள் பாடி வருகின்றனர்.

கவியரங்கம் இன்று தமிழகத்தில் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது. கவியரங்கக் கவிதைகளில் புகழ் பெற்றவர் ரகுநாதன். இவர்தம் கவிதைகளில் சமுதாயக் குறைகளைப் பாரபட்சமில்லாமல் சாடுவதைக் காணலாம். ஈரோடு தமிழன்பன் (ந. செகதீசன்), கவியரங்குகளில் பாராட்டும் புகழும் பெற்று வருகின்றார். இவருடைய கவிதைகளில் மின்னல் போன்ற சொற்கள், மகிழ்வைக்கும் உவமைகள் துள்ளி விளையாடுகின்றன. தி.கு. நடராசன், அப்துல் ரகுமான், புலவர் பொன்னிவளவன் முதலியோரும் கவியரங்கேறிக் கவிதைத் தமிழ் வளர்த்து வருகின்றனர்.

பாரதியால் தொடங்கி வைக்கப் பெற்ற புதிய கவிதைப் பேராறு ஜீவநதியாக ஓடிவருகின்றது. என்றாலும், குறிப்பிடத்தக்க அளவிற்குத் தமிழ்க்கவிதை வலுவடையவில்லை. ஆனால் வலுப்பெறும் என்ற நம்பிக்கைக்கு உரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. புதிய கவிதை நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில், கவிஞர்கள் மனிதநல நாட்டத்துடன் உலக முன்னேற்றம் கருதி, மக்கள் மனம் ஏற்கும் வகையில் கவிதைகளைப் படைக்கவேண்டும். அதனால், தமிழக் கவிதையும் உலகக் கவிதையோடு ஒப்பு மதிக்கப்பெறும்.

இ.வ.8.

# 18. இசைத்தமிழ்

இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவினையுடையது தமிழ் மொழி. இம் மூவகையிலும் அமைநத நூல்கள் பல. ஆனால், இப்போது இயற்றமிழ் பற்றிய நூல்களே மிகுதியாகக் கிடைக்கின்றன. இசைத் தமிழ் நூல்கள் பல கிடைக்கவில்லை. இவ்வாறே நாடகத் தமிழ் நூல்களும் கிடைக்கவிலலை. இம் முத்தமிழுக்கும் உரிய நூலாகத் திகழ்வது சிலப்பதிகாரம் ஒன்றே.

இயற்றமிழ்ப் பாடலோடு இன்னிசை (ராகம — தாளம்) கலத்தலால — இசைத்தலால — இத்தமிழ், 'இசைத்தமிழ்' என்னும் பெயா பெற்றது. மிடற்றுப்பாடலுடன் யாழ், குழல் ஆகிய கருவிகளின் ஒலியும் தாளமும் பொருந்துமாறு இசைவதால் 'இசை' என்னும் பெயா ஏற்பட்டது எனறும் கூறுவா. இந்த இசைப் பாடல்களை நெஞ்சு, கழுதது முதலிய எணவகை இடங்களில் எடுத்தல், படுத்தல முதலிய எணவகைத் தொழிலகளால உருவாக்குவது பண் ஆகும். இப் பண்ணிலிருநது பிறப்பது திறம் இத்தகைய இசை இலக்கணங்களையெலலாம் நம் முன்னோர்கள் நன்கு அறிந்திருந் தனர்.

**சங்க காலத்தில் இசை:** முத்தமிழ் இலக்கண நூலான அகத்தியத்தில இசை இலக்கணம் விரிவாக அமைந்திருநதது எனறு கருதுவா. முதுநாரை, முதுகுருகு, இசை நுணுக்கம் முதலான இசை இலக்கண நூலகள், இக் காலததில தோன்றின என்று அடியாா்க்குநல்லார் உரையாசிரியா குறிப்பிடுகின்றார். இவை இபபோது கிடைக்கவிலலை. தொல்காபபியா, நிலங்களுக்கு ஏறபப் பண்கள் இருக்கும் என்று கூறுகின்றாா. சங்ககாலத்தில இசைக கலையை வளாத்து மககளை மகிழ்விப்பதையே தொழிலாகக் கொண்ட குடும்பததினர் இருந்தனா; அவர்களா பாணா, பாடினியா எனப பட்டனா. இவாகளின் இசைததிறனும், இவாகள் கையாண்ட இசைககருவிகளும் பற்றி ஆற்றுப்படை நூலகள் விரிவாகப் பேசுகினறன.

தினைபபுனத்தில் காவலபுரிந்த கானவன் ஒருவன, மது உண்ட காரணத்தால மயங்கிக் கிடநதான். அப்போது யானை ஒனறு, தினை உண்ண வந்தது. அவன் மனைவி, அதனைக கண்டாளா. தன கணவனை எழுப்ப மனமிலலாமல — அதே நேரததில யானையையும துரதத நினைததாளா. யாழ் எடுததுப் பாடினாளா. வநத யானையும அந்த யாழிசையிலே மயங்கித தூங்கி விடடதாம். இவ்வாறு பாடுகின்றார் அகநானூற்றுப புலவா ஒருவா. வழிப்பறி செய்யும ஆறலை களவாகள், இசையில் மயங்கித தம் தொழிலையே மறந்துவிட்டதாக மற்றொரு புலவர் பாடுகின்றாா. சங்க நூலகளுளா ஒன்றான

பரிபாடல, இசையமைதி கூடிய இனிய இலக்கியம் ஆகும். இதுவே, தமிழ் இசைக்குச் சான்றாக நிற்கும் பழந்தமிழ் இலக்கியம்.

**இடைக்காலத்தில் இசை:** சங்க காலத்தில் செழிப்புற்றிருந்த தமிழ் இசையின் வளர்ச்சியையும் வாழ்வையும் பற்றிச் சிலப்பதிகாரம் விரிவாகக் குறிப்பிடுகின்றது. அரங்கேற்று காதை, கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகிய பகுதிகள், இசைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. பதினெட்டு நூற்றாண்டுகட்கு முற்பட்டதாய், இசைபற்றி இவவளவு குறிபபுக்களை உடைய நூல, உலகத்திலேயே வேறு எங்கும் இலலை என்பா. சிலப்பதிகாரக் காலத்திற்குப பின், களப்பிரா ஆடசியில், தமிழ் இசை, நலிவு பெற்றது. இக்காலத்தில் தமிழகத்தில செலவாக்குப் பெற்ற சமணம், இசையை வெறுத்தது; எனவே, தமிழிசை வாழ்விழந்தது.

பலலவா காலத்தில நாயன்மாாகளும் ஆழவாாகளுமதோன்றினர். இறை வனையே ஏழிசையாய இசைப்பயனாய்க கண்டனர்; குழலூதும் கோபால னாகப பாவித்துப் பரவினா, நாளும் இன்னிசையால தமிழ் பாடினா. சம்பந் தர் பாடிய பாடல்களைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழில் இசைத்துப் பாடி இசை வளர்த்தாா. இவ்வாறு தமிழகத்தில் இசைவெளளம் பாய்ந்தது.

பிறகாலச சோழா காலததில, தமிழ் இசை மீண்டும மெலல மறையத் தொடங்கியது. பெரிய புராணததில இசை மரபு அருகிவிட்டது என்ற குறிப்புக் காணபபடுகினறது. இககாலத்தில வடமொழி இசை, தமிழில கலந்தது. நிசங்க சாரங்க தேவா என்பவா, 'சங்கீத ரத்னாகரம்' என்னும் இசை நூலை இயற்றினாா. இநநூலில தேவாரப பண்கள் சில இடம் பெற்றன.

சோழாகளுககுப பின், நாயக்க அரசாகள் தமிழகததை ஆளத்தொடங் கினா 'கருநாடக சங்கீதம' என்னும் பெயரை, இசை பெற்றது அக் காலத்தில் தெலுஙகிசை, தமிழகததில வளரத் தொடங்கியது இராகத்தை முதன்மை யாகக் கொண்ட சஙகீதமும், அதனுடன பாட்டுககள் சோநத சாகித்யமும் தோனறின. தியாகராஜ சுவாமிகள் தம் தாயமொழியில — தெலுங்கில — பல இசைபபாடலகள் பாடினாா; இறைவனை வழிபட்டாா இப் பாடலகளையே தமிழ் மக்கள போற்றினா. எனவே தமிழ் இசை முழுமையாக மறைந்து தெலுங்கு இசை எங்கும பரவியது.

ஆயினும் தமிழ இசை, பளளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களில் வாழ்வு பெறறது; நாட்டியக் கசசேரிகளிலும் நாடக அரங்குகளிலும் காபபாறறபபடடது அவ இசைப பாடல, கீதததனை எனனும் பெயா பெற்றது. முததுத தாணடவா சில கீதததனைகள் பாடினாா கோபாலகிருஷ்ண பாரதியாா, நந்தனாா சரித்திரக கீாத்தனைகளை இயற்றிப் பழைய இசையைக் காககக உதவி செய்தாா. அருணாசலக் கவிராயா, இன்பம் ததும்பும் இராம

நாடகக் கீர்த்தனைகள் இயற்றினார். மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை, சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் பாடினார். வடலூர் வள்ளலார் சமயக்கீர்த்தனைகள் பல அருளினார். அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து எழுதினார்.

**20ஆம் நூற்றாண்டில் இசை:** இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பலவேறு துறைகளிலும் வீறுபெற்று எழுந்தது. அப்போது இசைமட்டும் தெலுங்கில் அமைந்திருப்பது அறிந்து பலர் வருந்தினர். "தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை; அதனால் நமது ஜாதி, சங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்" என்று எச்சரிக்கை செய்தார் புரட்சிக் கவி பாரதியார். இச் சமயத்தில் செட்டி நாட்டரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் இசைக்கு வாழ்வளிக்க முன்வந்தார்கள். 1929இல் சிதம்பரத்தில் இசைக் கல்லூரியினை நிறுவினார்கள்; இக் கல்லூரியை 1932இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் சேர்த்தார்கள்; தமிழ் இசைக்காகப் பொருளை வாரி வழங்கினார்கள். தமிழ் இசை மாநாடுகள் நடத்தத் துணை நின்றார்கள். டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார், கல்கி போன்ற தலைவர்கள் இப் பணியில் முன்நின்றார்கள். எங்கும் தமிழ் இசை மணம் கமழ்ந்தது. 1943இல் சென்னையில் தமிழ் இசைச் சங்கம் நிறுவப்பட்டது. நாடெங்கும் தமிழ் இசை ஒலித்தது. இச் சங்கத்தின் ஆதரவில் ஆண்டுதோறும் பண் ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் போன்ற அறிஞர்கள், இவ்வாராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு, ஆக்கம் தரும் செயல்கள் செய்து வருகின்றனர்.

சுவாமி விபுலானந்தர் இயற்றிய 'யாழ் நூல்' என்னும் ஆராய்ச்சி நூலும், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதிய 'கர்ணாமிர்த சாகரம்' என்னும் அரிய நூலும் இந் நூற்றாண்டில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. தமிழிசையின் மேன்மையும் இன்றியமையாமையும் பற்றிக் கல்கி அவர்கள், பல கட்டுரைகள் தீட்டினார்; கீர்த்தனைகளும் இயற்றினார். எம்.கே. தியாகராச பாகவதர், கே.பி. சுந்தராம்பாள், எம்.எம். தண்டபாணி தேசிகர் முதலியோர் தமிழ் இசைப் பாடல்களையே ஒலித்தனர். அமரகவி பாரதியார், பல இசைப் பாடல்கள் இயற்றினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சிந்தை மகிழ்விக்கும் பல இசைப்பாடல்கள் பாடினார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பல கீர்த்தனைகள் எழுதினார் இன்று எங்கு நோக்கினும் தமிழ்ப் பாடல்களே முழங்குகின்றன இப்பாடல்கள் பழைய தமிழ் இசை மரபுகளைத் தழுவி வளருமானால், தமிழ்ப் பண்பாடு மீண்டும் சிறப்பெய்தும்.

# 19. நாடகத் தமிழ்

தமிழ் இயல, இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. இதனால் தமிழை முத்தமிழ் என்று கூறி மகிழ்கின்றோம்.[1] முத்தமிழ் என்னும் பிரிவினை முதன்முதலில பரிபாடலில தான் காண்கின்றோம். இயற்றமிழ் மனத்திற்கு உரியது; இசைத் தமிழ் வாக்கிற்கு உரியது; நாடகத் தமிழ் காயத்திற்கு (உடலிற்கு) உரியது; எனவே, முத்தமிழும் மனம் வாக்குக் காயங்களுக்கு உரியன என்று கூறுவா.

## நாடகம்

சங்க இலக்கியத்தில் நாடகம் என்ற சொல் வருகின்றது. ஆனால் அச் சொல இனறு நாம் குறிக்கும் பொருளில பயன்படுத்தப்படவில்லை. கூத்து என்பதன பிரிவுகளுள் ஒன்றாகவே அது கருதப்பட்டது. கூத்து என்பது, இக்காலத்தில கூறபபெறும் நாட்டியம் (Dance) போன்றது. அந் நாட்டியம், கருத்துக்களை மையமாகக் கொண்டும் ஆடப் பெற்றது. கதைகளை மையமாகக் கொண்டு ஆடப்பெற்ற கூத்தே காலப்போக்கில் வளர்ச்சியடைந்து நாடகமாக மலர்ந்தது.

சங்க இலக்கியங்களில் அமைந்த அகபபாடல்கள் அனைத்தையும் ஓரங்க நாடகங்கள் (Mono-acting) என்றும் கருதுவா. குறிப்பாகக் கலித்தொகைப் பாடலகள் ஓரங்க நாடகத்திற்குச் சான்றாய் ஒளிவிடுகின்றன. சங்க இலக்கியங்களுக்கு முற்பட்ட தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டியல் கருத்துக்கள் நாடகத்திற்கு உரியன.

## நாடகக் காப்பியம்

முத்தமிழ்க் காப்பியமாக இயங்கும் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்பர். இதில் அரங்கேற்றுகாதை நாடகங்களைப் பற்றிய செய்திகளின் களஞ்சியமாகவே திகழ்கின்றது. இப் பகுதிக்கு உரையாசிரியர்கள் எழுதும் உரையால, நாடக இலக்கணம் பற்றிய நூலகள் பல இருந்தன என்னும் உண்மையை உணர்கின்றோம்.

## முதல் நாடக நூல்

தமிழில் நாடகமாக நடிப்பதற்காகவே எழுதப்பட்ட முதல நூல், *இராசராசேசுர* நாடகம் ஆகும். இது, முதல் *இராசராசன்* காலத்தில் எழுதப்பட்டது; அவனால் கட்டப்பெற்ற தஞ்சைப் பெரியகோவிலின்

---

1. தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்

வரலாற்றைக் கூறுவது. சோழபபேரரசில, இநநாடகமேயன்றிக் குலோத்துங்க சோழ நாடகம், கமலாலய பட்டா எழுதிய பூம்புலியூா நாடகம் முதலியனவும் தோன்றின. இவைகள் கிடைக்கவில்லை.

## கோயிலில் நாடகம்

கோயிலகளில் நாடகங்கள் விழாக்காலங்களில நடிக்கப் பெற்றன. அவைபறறிக் கலவெட்டுக்கள் கூறுகினறன. அநநாடகங்கள் இபபோது கிடைக்கவிலலை, அவை சமயச் சாாபுடையனவாக இருநதிருக்கலாம்.

## 17 – 18ஆம் நூற்றாண்டுகளில் நாடகம்

இந் நூற்றாணடுகளில நாடகம் இலககிய வடிவம பெறறது செயயுட களில நாடகம் தோனறியது பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் எனபன அவ் வகையைச் சாாந்தன. பள்ளு எனபது, உழவாகளின வாழ்வைக் கருவாகக் கொண்டது. குறவஞ்சி எனபது, மலைவாழ் மககளாகிய குறவாகளின் வாழவை மையமாகக கொணடு மலர்ந்தது. இவைகள சமுதாய இலக்கியங்கள என்று பாராட்டப்படுகின்றன. முக்கூடற பளளும, குற்றாலக் குறவஞசியும் சிறநதன. நொண்டி நாடகம் எனபது, முகம்மதியத் தமிழ்ப் புலவாகளால கிடைதத இலக்கியக் கொடை. இதில, நொணடி ஒருவன தவறு செய்து, அதனால் வாழ்விழநது வருநதும் செய்தி கூறபபடும். திருக்கச்சூா நொண்டி நாடகமும மாரிமுத்தா பிள்ளை பாடிய நொண்டி நாடகமும் குறிப்பிடத்தக்கன.

இக்காலத்தில் புராண இதிகாசக் கதைகளைத தழுவியும் நாடகங்கள தோன்றின இந் நாடகங்களில் கீாத்தனைகள எனப்பட்ட இசை முதலிடம் பெற்றது. இவற்றை இசை தழுவிய நாடகங்கள (கீாததனை நாடகங்கள) என்றுகூடக கூறலாம். இராம நாடகம, இராமவிலாசம் என்பன இராமாயணக் கதையைத தழுவி எழுநதன. இவறறுள் அருணாசலக கவிராயா இயறறிய இராமநாடகம தனிச்சிறப்பு வாய்ந்தது. அனைவராலும் பாராடடபபடுவது. அல்லி நாடகம், அருச்சுன நாடகம், அபிமனயு நாடகம், அசோமுகி நாடகம் என்பன பாரதக்கதையை அடியொறறித தோன்றின. இந நாடக அமைபபு முறையைப பினபற்றிக காலபபோககில் கண்டி நாடகம முதலிய நாடகங்கள வரலாறறு அடிப்படையில பிறநதன கோபாலகிருஷ்ண பாரதியாா இயற்றிய நநதனாா சரிததிரம் சிறப்பு மிககது.

## 19ஆம் நூற்றாண்டில் நாடகம்

மேலநாட்டாரின் தொடாபால நாடகம் புதுவளாச்சியை அடைநதது. இக்காலத்தில ஏறததாழ 500 நாடகங்கள் தோன்றின. அவற்றுள் 100

நாடகங்கள் வரை அச்சில் வந்துள்ளன. இந் நாடகங்களில் பல, பாட்டுவடிவில் அமைந்தவை. சிலவே உரைநடையால் இயன்றவை. தமிழில தோன்றிய முதல் உரை நடை நாடகம் இராமசாமிராசு என்பவர் இயற்றிய பிரதாப சந்திர விலாசம் என்பதாகும். இக்காலததுத் தோன்றிய நாடகங் களைப பலவகையாகப் பிரிப்பா.

## 1. நாடோடிக்கதை நாடகங்கள்

மதுரைவீரன் விலாசம், நல்லதங்காள் நாடகம், ஆரவலலி சூரவல்லி நாடகம், காததவராயன் நாடகம் என்பன.

## 2. புராண இதிகாச நாடகங்கள்:

மகாபாரத விலாசம, அரிச்சநதிர விலாசம், சகுந்தலை விலாசம் என்பன.

## 3. வரலாற்று நாடகங்கள்:

தேசிங்குராசன் நாடகம்.

## 4. சமூக நாடகங்கள்:

சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் நோய்களை எடுததுக் காட்டிச் சீாதிருததும் சமூக நாடகங்கள் தோன்றின இவ்வகையில பிரமசமாசக் கொள்கைகளைப பரப்பிய காசிவிசுவநாத முதலியாரின் சமூக நாடகங்கள் குறிபபிடத்தக்கன. அவற்றுள்ளும் 'டம்பாச்சாரி விலாசம்' என்னும் நாடகம் மிகச் சிறந்தது. இதுவே தமிழில தோன்றிய முதல் சமூக நாடகம்.

## 5. நகைச்சுவை நாடகங்கள்:

'சனமனோலலாசினி' என்னும் நாடகம், முழுக்க முழுக்க நகைசசுவை நிரம்பியது.

## 6. மொழிபெயர்ப்பு நாடகங்கள்:

மேல்நாடடுக் கலவியால ஷேகஸ்பியா, மோலியர், இப்சன் போன்ற நாடக மேதைகளின் நாடகங்களைக கற்கும் வாயப்பினைத் தமிழாகள் பெற்றனா. சிலா, அவறறைத் தமிழ்பபடுத்தினா; தழுவினா; சலசலோசனச் செட்டியாா 'சிம்பலின்' என்னும் நாடகததை 'சரசாங்கி' எனனும் பெயருடன மொழி பெயாததா. சஙகரதாஸ் சுவாமிகள் ரோமியோ ஜூலியட, சிம்பலின், ஒதெல்லோ போனற நாடகங்களைத் தமிழில் தந்தாா. இவவாறு மொழிபெயாபபும் தழுவலுமாக வநத நாடகங்களுள், மனோன்மணீயம் குறிப்பிடததக்கது. இதனை இயற்றியவா பேராசிரியா சுநதரம் பிள்ளை.

### பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

லார்டு லிட்டன் எழுதிய ரகசியவழி (The Secret Way) என்ற ஆங்கிலக் கவிதையைத் தழுவி, 'மனோன்மணீயம்' என்னும் அரிய நாடக நூலை இவர் இயற்றினார். இது படிப்பதற்காக எழுதப்பட்டது; நாடக உத்திகள் பலவும் அமைந்தது. பாடடால இயன்றது; தத்துவக் கருத்துக்கள் நிறைந்தது. இந்நாடகத்தை மூலமாகக் கொண்டு பாட்டால் பல தமிழ் நாடகங்கள் தோன்றியுளளன

### வி.கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்

இவரே பரிதிமாற் கலைஞர்; ஆங்கில வடமொழி நாடக இயல்புகளை அறிநது, தமிழில நாடக இயல் என்னும் இலக்கண நூல் ஒன்று இயற்றியுள் ளாா. இந் நூல் நாடக ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. இவ் விலக்கணத்தின் அடிபபடையில ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் ஆகிய உரைநடை நாடகங்கள் எழுதியுள்ளாா; அவற்றை அரங்கேற்றினாா; தாமும் நடிகராகப பஙகேற்றாா.

## 20ஆம் நூற்றாண்டில் நாடகம்

இந நூற்றாண்டில் நாடகம் செழிபபுற்றது. பல துறைகளிலும் நாடக நூல்கள் தோன்றின. அவறறில இனிய எளிய வசனம், அளவோடு கூடிய பாத்திரங்கள, வேண்டிய அளவு பாடலகள், நாடக உத்தியினை ஒட்டிய காட்சி அமைபபுககள முதலிய சிறபபியலபுகள் ஒளிவிடுகின்றன. இத்தகைய நாடகங்களை உருவாக்கியவாகள் பலா.

### சங்கரதாஸ் சுவாமிகள்

19ஆம் நூற்றாண்டின இறுதியிலும், இந் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாடகக் கலைக்குப பெரும பணியாற்றியவா. இவா பழைய நாடகங்களை ஒழுஙகுபடுத்தினாா; புதிய நாடகஙகளை எழுதினாா; பல நாடகக் குழுக்கள் அமைதது ஆசிரியராகப் பணியாறறினாா; நடிகராகவும் விளங்கிய இவரைத் தமிழ் நாடகத தலைமையாசிரியா என்று பாராட்டுவா.

### பம்மல் சம்பந்த முதலியார்

நாடகத் தந்தை, நாடகப் பேராசிரியா என்று பாராடடப் பெறும சிறப்பு மிக்கவா. இவருக்கு முன்வரை நாடகங்கள் திறந்தவெளியில் தெருககூத்தாக நடைபெற்றன அதனை மாறறி, இன்றைய அமைப்பு முறையில உருவாககியவா தஞ்சைக் கோவிநதசாமி ராவ் என்பவா. இவரைப் பினபறறிப் பல நாடக சபைகளைப பலா தோற்றுவித்தனர். செனனையில்

சுகுணவிலாச சபையைச் சம்பந்த முதலியார் நிறுவி, நாடகங்களை அரங்கேற்றித் தாமும் நடித்தார். ஆர்.கே. சண்முகம் செட்டியார், சி.பி. இராமசாமி ஐயா ஆகியோரையும் நடிக்கச் செய்து, நாடகக் கலையின் புகழை உயர்த்தினார், சேக்ஸ்பியர், காளிதாசன் ஆகியோரின் நாடகங்களை மொழிபெயாத்தார். கற்பனையாகவும் பல நாடகங்களைப் படைத்தார். இவ்வாறு இவா எழுதிய நாடகங்கள் எண்பதுக்கும் மேற்பட்டன. இவர் எழுதிய நாடகங்களுள் "மனோகரா", "வேதாள உலகம்", "சபாபதி" என்பன மிகச சிறந்தன. நாடக அனுபவம் வாய்ந்த இவர், நாடக மேடை நினைவுகள், நாடகத்தமிழ் என இரு நூல்கள் எழுதியுள்ளார். அவை, பிற்கால நாடகக் கலையின் இயலபினை விளக்குவன.

சங்கரதாஸ் சுவாமிகள், சம்பந்த முதலியார் போன்றவர்களின் முயற்சியால நாடகம் உயாநிலை எய்தியது. நாடகக் கலைஞாகளைக் கீழ்மக்களாக எண்ணிய காலம் நீங்கியது. நாடக சபைகள் பல தோன்றின. கிருஷ்ணசாமிப் பாவலரின் பால மனோகர சபா, டி.கே.எஸ். சகோதரர் களின் பால சண்முகாநநத சபை, நவாப இராசமாணிக்கத்தின் மதுரை தேவி பலாவினோத சங்கீத சபை, எஸ்.வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ, மனோகரின் நேஷனல தியேட்டாஸ், சிவாஜி நாடக மன்றம் என்பன குறிபபிடததக்கன நாடகங்களும் பல எழுந்தன. கிருஷ்ணசாமிப் பாவலர், கதரின் வெற்றி, பம்பாய் மெயில முதலிய நாடகங்களை எழுதினார், கதரின் வெறறி என்பதே முதல் தேசிய நாடகமாகும். தேசிய நாடகங்களில் எஸ்.டி. சுந்தரம் எழுதிய 'கவிஞனின் கனவு' சிறபபு வாய்ந்தது. எம். கந்தசாமி முதலியாா எனபவா, வடுவூா துரைசாமி ஐயங்கார், ஜே.ஆர். ரங்கராசு ஆகியோாகளின் நாவலகளை மேடை நாடகங்கள் ஆக்கினாா. நாரண துரைக்கணணனின் உயிரோவியம், கு.சா. கிருட்டிணமூாததியின் அநதமான் கைதி, எஸ் வி. சகஸ்ரநாமத்தின் பைத்தியககாரன, பி.எஸ். ராமையாவின் தேரோட்டியின மகன், ரா. வேங்கடாசலத்தின் இமயத்தில் நாம், அரு. இராமநாதனின் இராசராச சோழன், தங்கராசுவின் ரத்தக்கண்ணீா முதலியன தமிழ்மக்களைப் பெரிதும் கவாந்தன இவை சமூக சீர்திருத்தக் கருத்துக்களை யும், வரலாறறு உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு பிறந்தன. டைரக்டா கே. பாலசநதா, சோ ஆகியோரின நாடகங்கள் புதுமை யம்சம் நிறைந்தவையாகவும், உணாச்சிப் பிழம்புகளாகவும் விளங்குகின்றன.

## டாக்டர் கோராவின் நாடகங்கள்

அண்மைக் காலத்தில், நாடக நூல்கள் எழுதுவதில் பேரும் புகழும் பெறறு வருபவர் டாகடர் கோரா. கல்வி, நிருவாகம், சாதி, திருமணம், கலபபுமணம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சனையைக்

கருவாகக் கொண்டு அழகிய நாடகங்கள் 50—க்கு மேல் எழுதியுள்ளார். தென்னகப் பல்கலைக் கழகங்கள் இவர் நாடகங்களைப் பாட நூல்களாக ஏற்றுக் கொண்டுள்ளன. 'அழுத்தமான எள்ளலுடன் புது வகை நாடகங்கள படைத்துத் தமிழ் நாடகத் துறைக்கு வலிமை சேர்த்துள்ளவர் டாக்டர் கோரா' என்று அறிஞர் உலகம் மதிப்பீடு செய்துள்ளது.

சமுதாயக் குறைகளைச் சித்திரிக்கும் எள்ளல நாடகஙகளை இலக்கிய வடிவில எழுதி மேடை வடிவில சோ நடித்து வருகின்றார்.

சமுதாய முன்னேற்றக கருத்துக்களின் தொகுப்பாகவும், எளிய உணர்ச்சி மிக்க வசனங்கள நிறைந்ததாகவும் அமைநத நாடகங்களும் தோனறின. இப் புதுமுறையை உண்டாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர் எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, சநதிரமோகன், நீதிதேவன மயக்கம என்பன என்றும் மறகக முடியாதன. அவரே நாடகங்களில தோனறி நடித்து மக்களிடம் எழுச்சியை உணடாக்கினார். அவரைப பின்பற்றித் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மநதிரிகுமாரி, தூக்குமேடை முதலிய நாடகங்களை எழுதியுள்ளார்.

நடிபபதற்காக அன்றிப் படிப்பதறகாக எழுதப்பட்ட நாடகங்களில டாகடர் மு.வ. அவர்களின் டாக்டர் அலலி, டாக்டர் வ.சுப. மாணிககததின் மனைவியின உரிமை, நெல்லிக்கனி, கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் தமிழ்ச் செலவம் என்பன குறிபபிடத்தக்கன. மறைமலை அடிகளாரின் சாகுந்தலம், பண்டிதமணி கதிரேசனாரின் மண்ணியல சிறுதேர் என்பன புலமை மிக்க மொழிபெயர்ப்பு நாடகங்கள்

கூத்துள் ஒன்றாகிய நாடகம், தனியாகப் பிரிந்து, பாட்டு வடிவில வளர்நது, பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம என்ற இலககிய வடிவம் கொண்டு, கீர்ததனைகளாக இசைககபபட்டுப் புராதன இதிகாச நாடோடிக் கதைகளைத தழுவி, மேனாட்டார் வருகையால புததுயிர் பெறறது இனறைய நவீன முறைகளுக்கு ஏற்ப, மாறிவரும் சமுதாய நிலைக்கு ஒபபத் தமிழ் நாடகங்களும் தோன்றி வருகின்றன. நாட்டில நாடகக் கலைக்கு இன்று நலல வரவேற்பு இருக்கின்றது.

# 20. நாவல்

தமிழ் அறிஞர்கள் தம் சிந்தனைகளைச் செய்யுள வடிவிலேயே வெளியிட்டனர். இந்நிலையில மேல நாட்டாரின் தொடர்பால, 'உரைநடை' தமிழகத்தில வளர்ச்சி பெற்றது தமிழில் பலவேறு துறைகளிலும் உரைநடை நூல்கள் தோன்றின. மேலும், மேல்நாட்டாரின் கூட்டுறவால மேலை

மொழிகளின் இலக்கிய வகைகளும் தமிழில் புகத்தொடங்கின. அவற்றுள் ஒன்றே நாவல் இலக்கியம்.

## தமிழில் நாவலின் கூறு

மேலைநாட்டுத் தொடாபால நாவல் இலக்கியம் ஏற்பட்டாலும், கதை சொலலும பண்பு, தமிழர்களிடததில் பண்டுதொடடே இருநதிருக்கின்றது உண்மையில்லாத கட்டுக்கதை, உண்மையை விளககும் நகைசசுவைக கதை எனக் கதையை இரண்டாகப் பிரிககின்றாா தொலகாபபியா. இக கதைகள், தலைவியின் மனததுயரை நீககுதறகுச செவிலித்தாய்மாாகளால் சொல்லபபடடன. சிலப்பதிகாரம, மணிமேகலை முதலியன, செயயுள் வடிவில அமைந்த நாவலகள் அலலவா!

## தமிழில் முதல் மூன்று நாவல்கள்

தமிழில முதல் நாவல எழுதியவர் வேதநாயகம்பிள்ளை. இவர் எழுதிய நாவல, பிரதாப முதலியாா சரிததிரம என்பதாம். இந நாவல பிரதாப முதலியாா, ஞானாம்பாள் எனற இரணடு பாத்திரங்களை மையமாகக கொணடு படைககபபட்டது. தொடககம முதல முடிவுவரை சுவைகுறையாமல் அமைந்தது. இதில இயற்கை கடநத நிகழச்சிகள் காணபபடுகினறன நகைசசுவை மிளிாகினறது. கதையோடு தொடாபிலலாத கிளைககதைகள ஊடாடுகின்றன. இந நாவலின நடை, ஜானசனின் நடைபோல அமைந் துளளது எனபா. இவா, சுகுணசுநதரி எனற நாவலும எழுதியுள்ளாா.

இவருக்குப் பின் ராஜம் ஐயா, கமலாம்பாள சரிததிரம் படைத்தாா இவர் உலகியல பறறிலலாதவா; மெயயுணாவாளா. இதறகு ஏறப நாவலில முத்து சாமி ஐயா எனற ஒரு பாததிரததையே படைத்து, வாழ்வியல உணமைகளைக கூறியுள்ளாா. இவருக்குப்பின அ. மாதவையா எனபவா, பத்மாவதி சரித்திரம் எழுதினாா. டிக்கன்ஸ் என்னும் ஆஙகில நாவலாசிரியரின நாவலகளை அடியொற்றி இந்நாவல செலகின்றது! இம மூவா எழுதிய நாவல்களையும் தமிழ் நாவல வரலாறறில சிறபபாகக குறிபபிடுவா. இவை மூனறும குடும்ப நாவல்கள; பததொன்பதாம நூறறாணடில தோனறியவை இவற்றிறகுப பின இருபதாம நூற்றாணடில நாவலகள் மிகுதியாக வெளிவநதன.

## துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியாா, வடுவூா துரைசாமி ஐயஙகாா, டி.டி சாமி முதலியாா துப்பறியும் நாவலகள எழுதி உள்ளனா இவாகளுள வடுவூா துரைசாமி ஐயங்கார் எழுதிய திகம்பரசாமியாா குறிபபிடததககது. இன்றும் தமிழ்வாணன், மேதாவி, சிரஞ்சீவி போனறோா துபபறியும் நாவல எழுதி

வருகின்றனா. துபபறியும் நாவலகளில அச்சமும் பரபரப்பும் சாகசச் செயலகளும் நிறைநதிருக்கக் காணலாம்.

## வரலாற்று நாவல்கள்

வரலாறறைப் பின்னணியாகக் கொணடு நாவல படைத்துப் புகழ் பெற்றவர் கலகி இவா. ஆனநதவிகடன் இதழில கள்வனின் காதலி, தியாகபூமி ஆகிய நாவலகளைத தொடாகதையாக எழுதத தொடங்கினார். பினனாக கல்கி இதழைத தொடங்கியதும் பெரிய நாவல்களை எழுத எண்ணினாா அநத எண்ணம நிறைவேற வரலாற்று நாவலகள் எழுத நினைத்தாா. "பாாத்திபன கனவு" படைததாா; "சிவகாமியின சபதம்" செயதாா. "பொன்னியின செலவன" பெற்றெடுத்தாா. எளிய நடை, உயிரோட்டம் மிகக மொழி, விளககும திறன, சிறந்த உணாச்சி, உயாந்த கருத்துககள் அமைய நாவல படைதத முதல்வா கலகியாவாா. நாவல் உலகில் இவரைக் 'கம்பா' என்று கூறலாம். இவருடைய வரலாறறு நாவலகளைப் படிக்கும்போது, சோழா, பலலவா, பாண்டியர் காலத்தில வாழும் மன நிலையைப பெறறுவிடுகினறோம அநத அளவிற்குப பாததிரங்களைப படைததுள்ளாா. வரலாற்று நாவலகள் எழுதி ஆங்கில மொழியை வளப்படுத்திய சா வால்டா ஸ்காட எனற நாவலாசிரியனுக்கு உரிய பெருமை, தமிழை நாவலால வளபபடுத்திய கலகி அவாகளுக்கும் உண்டு. இவரைப் பினபறறிப் பலர் வரலாறறு நாவலகள் எழுதியுள்ளனா. சாண்டிலயன் படைதத மலை வாசல, ஜீவபூமி போன்ற நாவலகளும், ஜெகசிற்பியன் எழுதிய நநதிவாமன காதலியும, அரு இராமநாதன தீட்டிய அசோகன் காதலி, வீரபாண்டியன மனைவி என்பனவும், அகிலன் வரைநத வேங்கையின் மைநதனும் குறிபபிடத்தககன. 'வேஙகையின் மைநதன்' சாகிதய அகடமி யின பரிசு பெற்றுளளது வரலாற்று நாவலகளால் தமிழக வரலாற்றுச் செய்தி கள மககளின மனததில ஆழப பதிநதன. பணபாடு, கலை, இலககியம் முதலியவற்றில திளைதத பழநதமிழ மககளைப் பற்றிய எணணங்கள் ஓவியங்களாக நிலைபெறறன.

## குடும்ப நாவல்கள்

குடும்பச சூழலகளை அடிபபடையாகக கொணடு நாவலகள் பல தோனறின. வை.மு. கோதைநாயகி அமமாள் இததகைய நாவலகள் பல எழுதியுளளாா இவருடைய நாவலகளில 'ஜகனமோகினி' சிறநதது. இவருக்குபபின பலர் குடும்ப நாவலகள படைத்துளளனா பி.எம கணணன், மாயாவி, க.நா. சுப்பிரமணியம் முதலியோா குறிப்பிடததக்க வாகள. குடும்ப நாவலகளில வாழ்ககைப் போராட்டத்தின பல்வேறு

இயலபுகளை, குறிப்பாக மன உணாச்சிகளைக் காணலாம். குடும்ப நாவல் ஆழமுடையது என்பர். பெண்மணிகளே குடும்ப நாவல்களை ஈடுபட்டு எழுதுகின்றனா. ராஜம் கிருஷ்ணன, அநுத்தமா, லட்சுமி, ராஜம் ராமமூர்த்தி, சூடாமணி முதலியவாகள சிறப்பிடம் பெறத்தக்கவர்கள். லட்சுமியின் "பெண் மனம்", ராஜம் கிருஷ்ணனின் "பெண்குரல்" என்பன மறக்க முடியாதன.

## சமூக நாவல்கள்

குடுமபம் விரிந்து சமுதாயமாகிறது; குடும்ப நாவல் விரிவு பெற்றால் சமூக நாவல ஆகிறது. சமூக நாவலகளில சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் நிலைகளமாக அமையக் காணலாம். புறநிகழ்ச்சிகளும் மன எழுச்சிகளும் கலந்துவரப் பாரககலாம். இத்தகைய நாவல்கள் சமுதாயத்தையே மாற்றும் ஆற்றல வாயந்தன. டிக்கனஸ் எழுதிய நாவலகள் இங்கிலாநதின் சமுதாய வாழ்க்கையையே மாற்றிவிட்டது என்பர். தமிழில இத் துறையைச் சார்ந்த நாவலகள, பாராட்டுக்குரிய முறையில் வெளிவநதுள்ளன. டாக்டர் மு.வ. அவர்களின் நாவலகளை இத்துறையில சிறப்பாகக் குறிப்பிடலாம். முர்ரே என்பவர் கூறுதலபோல, அவைகள் கருத்து விளக்கங்களாகவும் மற்றவா களுககு வெறும் கதைகளாகவும காட்சி நல்குவன. தனிததமிழில அமைநது இனபம் தருவன; தமிழ்ப பண்பாட்டை நிலைக்களனாகக் கொண்டன. பலலாயிரககணககான மககளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய பெருமை மிககன களளோ காவியமோ?, கரித்துணடு, கயமை, அகல் விளக்கு, நெஞ்சில ஒரு முள், பெறற மனம என்பன சிறபபிடம் பெறுவன அகல் விளககு, சாகிததிய அகடமியின் பரிசு பெற்றுள்ளது. டாக்டர் மு.வ. அவாகளைப பினபறறி கு ராஜவேலு, காதல தூங்குகிறது, அழகு ஆடுகிறது, வானவீதி முதலிய நாவலகள் படைத்துள்ளாா.

கலகியின் அலை ஓசை சமூக நாவலே! அகிலன, நா பாாத்தசாரதி, க நா சுபபிரமணியம், பி.எம கணணன், கோவி. மணிசேகரன முதலியோா சமூக நாவல எழுதுவதில புகழ் வாய்நதவாகள் க.நா. சுப்பிரணியத்தின் நாவலகள தனித்தனமை உடையன; புதிய இலககிய உததிகள் கொண்டன.

## இலட்சிய நாவல்கள்

கலை, மக்களுக்காக என்ற கொள்கையினரும் நாவல் படைபபதில ஈடுபட்டனா. இவாகள், அரசியல கருத்துக்களையும், அடைய வேண்டிய லட்சியங்களையும் பாததிரங்களின் வாயிலாகப் பரபப முனைநதனர். இத்துறையில முன்னோடியாக நின்றவா வ ரா. அவாகள். இவா எழுதிய நாவலகள கோதைத தீவு, சுநதரி எனபன. இவர் தம் நாவலில் வழக்குச் சொற்களைப பயன்படுததினாா். உயர்ந்த இலட்சிய நாவல்களைப் படைத்த

பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும். இவர் எழுதிய 'பார்வதி பி.ஏ.,', 'ரங்கோன் ராதா' என்பன நினைவைவிட்டு நீங்காதன. இத்துறையில் விந்தன், ரகுநாதன், நாரண துரைக்கண்ணன் ஆகியோரும் முன்னணியில நிற்கின்றனர். விநதன் எழுதிய "பாலும் பாவையும்" என்பது மனிதனுக்கு மனிதன் செயயும் கொடுமையைச் சிதத்ிரிக்கும உயர்நத இலக்கியம். ரகுநாதனின் "பஞ்சும் பசியும்" உலக நாவல் இலக்கியங்களுடன் ஒப்ப மதிக்கததககது; பல மொழிகளில மொழிபெயாக்கப் பெற்றது. நாரண துரைககண்ணனின "உயிரோவியம்" உயாந்த காதல் லட்சியததை அடிப்படை யாகக் கொண்டது.

## மொழிபெயர்ப்பு நாவல்கள்

ரெயினால்ட்ஸ் எழுதிய ஆங்கில நாவலை அறிஞர் மறைமலையடிகளார், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்ற பெயருடன் வெளியிட்டுள்ளார். இவா, கோகிலாம்பாள் கடிதங்கள எனற நாவலும் எழுதியுளளாா. மராததி, வங்காளி, இநதிமொழி நாவல்கள் தமிழில் மிகுதியாக மொழி பெயாக்கப்பட்டுள்ளன. மராததியில சிறந்த நாவலாசிரியர் காண்டேகர்; இவர் இயற்றிய நாவலகள் கதைவளமும கற்பனைச் செறிவும் கொண்டன; உவமை அழகு மிக்கன; இவறறைக் கா. ஸ்ரீ.ஸ்ரீ. அழகாகத் தமிழில தநதுள்ளாா. கருகிய மொட்டு, எரி நட்சததிரம், இரு துருவங்கள் என்பன சிறபபு வாயந்தன.

வங்க மொழியில தாகூா எழுதிய "பூந்தோட்டம்", "புயல்" என்பன வற்றைத த நா. குமாரசாமியும், "குமுதினி"யை ரங்கநாயகி என்பவரும் மொழி பெயாத்துளளனா. பககிம சநதிரரின் நாவலகளும், சரத்சநதிரரின் நாவல்களும் தமிழாக்கம பெற்று வெளிவந்துளளன. டாலஸடாய், மாக்ஸிம் காாக்கி, டிக்கனஸ், தாமஸ ஹாாடி முதலிய மேல நாட்டு அறிஞர்களின் நாவலகளும் நலல முறையில் தமிழாக்கம் பெற்றுள்ளன.

## நாவல் இலக்கியம்

நாவலை 'உரைநடையில் அமைந்த காபபியம்' எனபர். இவ் இலக்கியம் தமிழில இன்று நனகு வளாநது வருகின்றது ஆண்டுதோறும் பல நாவலகள வெளியாகினறன. தமிழ் வார, மாத இதழ்கள நாவலைத தொடாகதையாக வெளியிட்டு வருகினறன. கலைமகள போன்ற இதழ்கள், பரிசுகள் வைத்துச் சிறந்த நாவலகள உருவாவதற்கு வழிசெயகின்றன. ஓடைநீா போலத் தெளிந்த நடை, அழகிய சொற்கள, மனித இனததைப் பறறிய தெளிநத அறிவு, அவாகளின் வாழ்வில தோயந்த மனநிலை, இலட்சிய நோக்கம் முதலியன வாய்நத நாவலகள் மிகுதியாகத் தோன்ற வேண்டும்.

# 21. சிறுகதை

நூறு ஆண்டுகளுக்குமுன் எட்கார ஆலன் போ அமெரிக்காவில் சிறுகதை எழுதத் தொடங்கினார். அவர் விதைத்த வித்து நன்றாக வளர்ந்து உலகம் முழுவதும் பரந்து இன்று ஆலமரமாக விரிந்துள்ளது. மேலைநாட்டாரின் தொடர்பால, தமிழிலும் இச் சிறுகதை இலக்கியம் தோன்றி வளர்ந்து. நிலையான வாழ்வு பெற்று வருகின்றது.

## சிறுகதை அமைப்பு

குதிரைப் பந்தயம் போன்று சிறுகதையின் தொடக்கமும் முடிவும், விரைவும் சுவையும் மிக்கதாக விளங்க வேண்டும். இத்தகைய சிறுகதை, அரைமணியிலிருந்து இரண்டரை மணி நேரத்துக்குள் படித்து முடிக்கக் கூடிய அமைப்புடையதாகவும் இருக்கவேண்டும்; "சிறுகதையின் அளவு மிகச் சிறியதாகவும் இருக்கலாம; பெரியதாகவும் இருக்கலாம், கதாபாத்திரங்கள் ஒன்றோ பலவோ இருக்கலாம். கதை நடக்கும் காலம்கூட ஐந்து நிமிடமோ, ஒரு நாளோ, ஒன்பது ஆண்டுகளோ இருக்கலாம். ஆனால கதையைப் படித்து முடித்த பின்பு ஓர் உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில நிறைய வேண்டும். எழுதி முடித்த கதைக்கு முன்னேயும் பின்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போரின் உள்ளத்தில விரிய வேண்டும்" என்பார் அகிலன். "கதை என்பது ஒரு சம்பவமாக இருக்கலாம் ஒரு மனோபாவமாக இருக்கலாம்; ஓர் உள்ளப் போராட்டமாக இருக்கலாம். அது ஏதாவது ஒன்றாக இருக்கும் வரையில சிறுகதை பிறக்கும. இரண்டாகவோ அதிகமாகவோ இருந்தால் சிறுகதை பிறக்காது" எனக் கூறுவார் க.நா. சுப்பிரமணியம்.

சிறு கதைக்கு உரிய மேற்காட்டிய இலக்கணங்களை மனத்திற் கொண்டு பார்த்தால் கலித்தொகையில அமைந்த பாடல்கள் பல, சிறந்த சிறுகதைகளாக விளங்குகின்றன.

ஆனால இச் சிறுகதைகள், கவிதை வடிவில உள்ளன.

## சிறுகதையின் தோற்றம்

தமிழில சிறுகதைகள், இவ் இருபதாம் நூற்றாண்டில் தான் தோன்றின. ஆயினும் பதினெட்டாம நூற்றாண்டில வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதையும, வீராசாமி செட்டியார் இயற்றிய விநோதரச மஞ்சரியும, தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்த பஞ்சதந்திரக் கதைகளும் சிறுகதைகளின் தொகுப்புக்களே. ஆனால, இவைகளனைத்தும் சிறுகதையின் இலக்கணம் வாய்ந்தன என்று கூறுதல் இயலாது; சிறுகதையின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் பத்திரிகைகள் பொதுமக்களின் வரவேற்புக்கு உள்ளாகியபோது, சிறுகதைகள் எழுதப் பலர் முனைந்தனர். பாரதியார், தாகூரின் கதைகளை மொழி பெயர்த்தார். மாதவையா, பல சிறுகதைகளை எழுதினார். அவை 'குசிகர் குட்டிக் கதைகள்' என்று தொகுக்கப்பட்டுள்ளன. வ.வே.சு. ஐயா, சிறுகதை படைப்பதில வல்லவரானார். சிறுகதை, தமிழகத்தின் வாழ்வு பெற்றது.

## சிறுகதையின் வளர்ச்சி

வ.வே.சு. ஐயா எழுதிய கதைகள "மங்கையர்க்கரசியின் காதல" எனனும் நூலாக வெளியிடபபட்டுள்ளது. இத் தொகுபபில் எட்டுக கதைகள் இருககின்றன. இக கதைகளில "குளத்தங்கரை அரசமரம்" என்பது மிகச் சிறநத சிறுகதை இதனைப படிககுமபோது இததகைய உணாசசி மிக்க சிறுகதையும் தமிழில எழுத முடியுமா என்ற வியபபு ஏற்படுகின்றது. இதனை "ஓா உணாச்சி மயமான காதல கதை – சோகக் கதை – சிறுகாவியம்" என்று புகழ்வாா க நா. சுப்பிரமணியம.

தமிழில சிறுகதை வளாசசி பெற்றுள்ளது எனறால அதறகுக் காரணம் மணிககொடி எனனும இதழே. இநத இதழ் 1939இல தொடங்கி 3 ஆணடுகள் நடைபெறறது. அப்போது இவ இதழில சிறுகதைகள பல வெளிவந்தன. அவைகளைப படைததவாகள புதுமைபபிததன், கு ப.ராஜகோபாலன, மௌனி, பி.எஸ். ராமையா, கு அழகிரிசாமி, க நா. சுபபிரமணியம், சி.சு. செலலபபா முதலியோா ஆவா. இவாகளை மணிக்கொடிப் பரம்பரை என்றே குறிப்பிடுவா.

**புதுமைப்பித்தன்:** இவரைச சிறுகதை மன்னன், தென்னாட்டு மாபஸான் என்று புகழ்வா இவருடைய சிறுகதைகளில ஆழமும சிநதனைத் துடிப்பும் காணபபடும், நடை, சம்மட்டியின் அடியைப போலவும, சாட்டையின் வீச்சைப போலவும் வேகமாக இருக்கும் ஆனால, புரிந்து கொள்வது சற்றுக் கடினமாகும. புராண இதிகாசக கதைகள மிகுதியாகக் கலநது வரும, அவை இககால உலகை எடுத்துக் காட்டவே பயன்படுததபபடும் "முறுககுப பாட்டி முததாசசி என்றால சிறுகுழநதைகளுககுததான தெரியும அவள் வறுமையில் குசேலரின தங்கை. சமய குரவர்கள் இயற்றும் அற்புதங்கள் எனற செபபிடுவித்தைகள் நடவாத இநதக் காலததில, அவள தினம் தினம் காலந் தள்ளுவது மலலாமல, தனது ஒரே குமாரததிககு விவாகம் செய்யவும் ஆரமபித்ததுதான் அற்புததிலும அற்புதம" (சஙகிலித தேவனின தாமம்). இவ்வாறு பாததிரங்களைக் கணமுன் கொண்டு வநது நிறுத்துவதில இவர் வலலவர். இவருடைய சாப விமோசனம், கடவுளும் கநதசாமியும். அகல்யை,

பொன்னகரம் என்பன உயர்ந்த படைப்புக்கள். உலகத்தின் சிறந்த சிறுகதை களுக்கு ஒப்பான சிறுகதைகளை உருவாக்கிச் சிறுகதை இலக்கியத்திற்கு அடிப்படை அமைத்தார புதுமைப் பித்தன். இவரைப் பின்பற்றிப் பலா கதை எழுதினர்;எழுதுகின்றனர்.

கு.ப. ராஜகோபாலன்: இவர் புதுமைப்பித்தனோடு ஒப்ப மதிக்கத்தக்கவர். கனகாம்பரம், காணாமலே காதல், புனர் ஜன்மம் என்பன இவருடைய கதைத் தொகுப்புக்கள். இவைகளில் 64 கதைகள் உள்ளன. இவை உட்படச் சற்றேறக் குறைய 85 கதைகள் எழுதியுள்ளார். கு.ப.ரா. வின் தன்மை ஏக்கமும் லட்சியமும் குழைநத மென்மையாகும் என்பர் க.நா. சுப்பிரமணியம். ஆண் பெண் உறவுகளை அமைதது்க் கதை வரைவதில் இவருக்கு நிகர் இவரே.

மௌனி: மிகக் குறைவான விரல்விட்டு எண்ணத்தக்க கதைகளை எழுதி அவற்றால் புகழ் பெற்றவர் மௌனி. இவருடைய சிறுகதைகள் பதினைந்து, மௌனியின் கதைகள் என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளன. "கறபனையின் எல்லைக கோட்டில் நின்று வாரத்தைகளுக்குள் அடைய மறுக்கும் கருத்துக்களையும் மடக்கிக் கொண்டுவரக் கூடியவர்" என்று இவரைப் பாராட்டுவர் புதுமைப்பித்தன். மௌனியின் கதைகள் கருத்தாழமுடையன; சிந்தனைச் செறிவுடையன.

பி.எஸ். ராமையா: இவருடைய சிறுகதைகளில் சீர்திருத்தக் கொள்கை கள் மிக்கிருக்கும். காலததின் வளர்ச்சியை இவரின் கதைகளில் காணலாம்.

கு. அழகிரிசாமி: உருவகபபடுத்தி எழுதுவதில வல்லவா. குணவேறுபாடு களைச் சித்திரிப்பதில் சிறந்தவர்.

க.நா. சுப்பிரமணியம்: வரலாறறு உண்மைகள் பிறழாதவாறு எழுது பவர்; சிறுகதை உத்திகள் அமையச் சிறுகதை வரைபவா.

லா.ச. ராமாமிர்தம்: குடும்பக்கதை எழுதுவதில தேர்ந்தவர்; புலன் உணர்ச்சிகளைச சித்திரிக்கும் ஆற்றல பெற்றவா.

கல்கி: நகைசசுவையுடன் கதை எழுதுவதில தலைசிறந்தவர். இவ ருடைய கதைகளே, பெரும்பான்மையான மககளைக் கதை படிக்கும் பழக் கததிற்கு ஆளாக்கின.

மு. வரதராசன்: சங்க இலக்கியச் செய்திகளைக் கொண்டு அறக்கருத்துக் கள் நிறைந்த கதைகள் எழுதுவதில் ஆற்றல வாயநதவா.

அகிலன்: இவா, காலததையொட்டிக் கதை எழுதும் திறமை பெற்றவா. இவருடைய கதைகளில காந்தியச் சிந்தனை — தததுவம் இழையோடும்.

விந்தன்: ஏழைகளின் துன்பங்களைப் படம் பிடித்துக் காட்டுவார். பொது வுடைமை எண்ணங்களை ஒளிவிடச் செய்வார்; பல குட்டிக் கதைகளை எழுதியுள்

ளார். இவருடைய 'முல்லைக்கொடியாள்' என்னும் கதைத் தொகுதி உயர்ந்த கதைகள் கொண்டது. இவருடைய கதையைப் படிக்கவே அச்சமாக இருக்கும் என்பார கல்கி.

**ஜெயகாந்தன்:** இன்றைய இலக்கிய உலகில் புரட்சியாளராகத் திகழ்பவர். இவருடைய கதைகளில குடிசைவாழ் மக்கள் காவியத் தலைவாகள் ஆகின்றனர்; பேச்சு மொழி, இலக்கிய மொழி ஆகின்றது. யதார்த்தவாதம், இவருடைய கதைகளின் அடிப்படை. இவர் எழுதிய "யாருக்காக அழுதான்?" என்னும் கதை பலராலும் பாராட்டப்படுவது.

தமிழில சிறுகதை எழுததாளர்கள பலர் உள்ளனர். தி.சு. செலலப்பா, சோமு, ஆாவி. மாயாவி, கி.வா.ஜ., தி.ஜ.ர., ஜெகசிறபியன், தி. ஜானகி ராமன், ந. பிச்சமூர்த்தி, பூவை எஸ. ஆறுமுகம், சுநதர ராமசாமி ஆகியோர் குறிப்பிடத்தக்க எழுத்தாளாகள். ஆா. சூடாமணி, குகப்பிரியை, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன் பெண் எழுத்தாளாகளில முதலிடம் வகிப்பவர்கள். பூவண்ணன், அழ. வள்ளியப்பா ஆகியோா குழந்தைகளுக்கு ஏற்ற சிறுகதைகள் படைத்து வருபவர்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில, இக் காலத்தைச் 'சிறுகதைக் காலம்' என்று குறிபபிடலாம். இநத அளவுக்குச் சிறுகதைகள வெளிவந்து கொண்டிருக் கின்றன. 'இவைகள் நிலைத்து நிறகுமா?' எனக் கேள்விக்குறியே எஞ்சி நிற்கின்றது என்றாலும்கூடச் சிறநத சிறுகதைகள் வெளிவராமல் இல்லை. சமுதாய மாறுதல்களையும், வளாச்சியையும், வாழ்வையும் அடிப்படையாகக கொண்ட ஆக்கப்பாடுடைய சிறுகதைகள பல தோன்ற வேண்டும்; அவை தோன்ற நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் துணைபுரிய வேண்டும்; பொதுமக்களும் வரவேற்க வேண்டும்.

# 22. புலவர்கள் பற்றிய குறிப்புக்கள்

## 1. குமரகுருபரர்

திருநெல்வேலி மாவட்டததில் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர்; கி.பி. 17ஆம் நூற்றாண்டினா; பிறந்து ஐநது ஆண்டுகள் வரை ஊமையாக இருந்து, திருசசெந்தூா் முருகன் அருளால் பேசும் பேறு பெற்றவர்; அதனால அவ் இறைவன் மீது 'கந்தா கலிவெணபா' பாடியவர். அதுமுதல் கவிஞராகத் திகழ்ந்தவர். பின்னாத தருமபுரம் சென்று ஆதீனத் தலைவரை அடைந்து, அருள் பெற்றவர்; துறவு மேற்கொணடவர். பின், காசிக்குச் சென்று காசி அரசனிடம் உதவி பெற்று அங்கு மடம் ஒன்று அமைத்தவர். அங்குத்

தங்கியிருநதபோது, கம்பராமாயணத்தை இவர் விரித்துரைத்தார். இதனைக் கேட்ட துளசிதாசா இந்தி மொழியில் இராமாயணத்தை இயற்றினார்.

குமரகுருபரா பாடிய நூல்கள் 13. அவை 1. கந்தா கலிவெண்பா 2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 3. மதுரைக் கலம்பகம் 4. நீதிநெறி விளக்கம் 5. திருவாரூா நான்மணி மாலை, 6. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் 7. சிதம்பர மும்மணிக்கோவை 8. சிதம்பரச் செய்யுட் கோவை, 9. பணடார மும்மணிக்கோவை 10 காசிக் கலம்பகம் 11. சகல கலாவலலி மாலை 12. கைலைக் கலம்பகம் 13. காசித் துண்டி விநாயகர் பதிகம எனபன. இவா பாடல்களில் சைவ சித்தாந்த மணம் கமழும்.

இவா பாடிய நீதிநெறி விளக்கம் சிறப்பு வாய்ந்தது; 101 செயயுட்கள் கொணடது இபபாடலகளுள் ஒன்றில், பிறரால் புகழபபட வேண்டுமானால் மறவாமல ஒனறைச செய்ய வேண்டும். அது, பிறருடைய புகழைப பலரும் அறியச் சொலலி, அவாகளின் குறைகளை மறைத்துப் பணிந்து பேசுவதே எனறு கூறியுள்ளாா.

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாதே நோற்பது ஒன்று உண்டு – பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறம்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்

இத்தகைய வாழ்வுக் கருத்துககள் பல இந்நூலில் கூறப்படுகின்றன.

"கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை"
"செல்வம் என்பது சிந்தையின் நிறைவு"

என்பன போன்ற பொன்மொழித் தொடாகள் பலவறறை இவா பாடல்களில் காணலாம்

## 2. தாயுமானவர்

திருமறைக்காடடில சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவா; கி.பி. 18ஆம் நூற்றாண்டினா; துறவியாக வாழ்ந்தவர்; சிததாநதத்தையும் வேதாந்தத்தை யும இணைததுச் சமரச சன்மாாக்கத்தைத் தோற்றுவிததவா; வடமொழியிலும் தமிழிலும வலலவா; 587 பாடல்களும் 865 கண்ணிகளும் அகவல் ஒன்றும் வண்ணம் ஒன்றும் பாடியவா. இப்பாடல்கள், 'தாயுமானாா பாடல்' என வழஙகபபடுகின்றன. இவற்றைத் 'தமிழ் மொழியின் உபநிடதம்' என்று பாராட்டுவர்

**"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"**

என்பது இவரின வாழ்க்கைக் குறிக்கோள். இக் குறிக்கோளினை விளக்குவனவே இவருடைய பாடல்கள்.

அன்பருக்குப் பணி செயவதே உண்மைத் தொண்டு; நெஞ்சமே கோயில; நினைவே நறுமணப்பொடி; அன்பே திருமஞ்சன நீா எனக் கருதி மகிழ்நதவர்.

இவர் சித்தரைப் போன்றவா. எனவே, இவா பாடலகளில சிததரின தமிழ் மணம் கமழ்கின்றது.

**"அன்பர்பணி செய்யஎனை**
**ஆளாக்கி விட்டு விட்டால்**
**இன்பநிலை தானேவந்து**
**எய்தும் பராபரமே"**
**"நெஞ்சகமே கோயில்,**
**நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள**
**வாராய் பராபரமே"**

## 3. இராமலிங்க அடிகள்

தென்னாாக்காடு மாவட்டதழைச சோநத மருதூரில் பிறநதவா. தநதை யாா பெயா இராமையா பிளளை; தாயாா பெயா சின்னமமை இவர் சென்னை, சிதம்பரம், கருஙகுழி ஆகிய இடங்களில வாழ்நது, இறுதியாக வடலூா சென்று மறைநதாா இவா ஆசிரியா, காஞ்சிபுரம் மகாவிதவான் சபாபதி முதலியாா. அடிகளாா, திருவொற்றியூர்த தியாகேசரை வழிபடு கடவுளாகக் கொண்டவர்; ஒன்பது வயதிலேயே பாடும் பேறு பெறறவா. இவா காலம் 1823 – '74

சாதி பேதத்தையும், சமயப் பூசலையும் கண்டித்தவா; எலலாரும் நிகா என்ற கோட்பாடு கொண்டவா. சமரச சன்மாாக்க நெறியைப் பரப்பியவா; உருவ வழிபாட்டை நீக்கிவிடடு ஒளி வழிபாட்டை உண்டாககியவா, இதனால் 'அருட்பெருஞ்ஜோதி தனிபபெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி' எனப் புதிய மந்திரம் படைத்தவா; இம் மந்திரத்தின பெரு விளக்கமாக வடலூாில 'அருட்ஜோதி மன்றம்' அமைத்தவா, ஜீவகாருண்ய நெறியில புத்தரையும், சமணாகளையும் போனறவா.

'கொலலா விரதம்' குவலயமெலாம் ஓங்கவேண்டும என்று கனவு கண்டவர்.

"அப்பாநான் வேண்டுதல்கேட்
டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான்
அன்புசெயல் வேண்டும்"

என இறைவனிடம் வரம்வேண்டி நின்றவர்.

இவா பாடிய பாடல்கள் 6000க்கும் மேற்பட்டன. இப்பாடல்களை 6 திரு முறைகளாகத் தொகுத்து அருட்பா என வழங்குகின்றனர். இவை அருட்பா அலல; மருட்பா என்று வாதிட்டுத் தோற்றார், ஆறுமுக நாவலர். இப் பாக்கள் பெரும்பாலும் விருத்தப்பாவால் ஆனவை. இசைபபாக்களும் கண்ணிகளும் உண்டு. இவரின் இசைப்பாக்கள், தமிழ் இசைக்கு உரமாக அமைந்தன. இவருடைய பாடலகள், கலமனத்தையும கரைக்கும் ஆற்றல் பெற்றன.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுஉளம் பதைத்தேன்!
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேருறக் கண்டுஉளம் துடித்தேன்!
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!"

வாடிய பயிா முதல ஏழைகள் வரையில் துன்பப்படுதல் கூடாது என்னும் இவரின அருளுள்ளத்தை எவ்வாறு போற்றுவது!

இவா, மனுமுறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலும் எழுதியுள்ளார்.

## 4. ஆறுமுக நாவலர்

யாழபபாணத்து நலலூரில் பிறந்தவர்; தமிழ்ப்புலமையும் ஆங்கில அறிவும் கைவரப் பெற்றவர்; 19 வயதிலேயே ஆசிரியராகப் பணியாற்றியவர்; பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தவர்; பைபிள் மொழி பெயாப்புகளில் இதுவே சிறப்பு என்பர். இவா இவ்வாறு கிறித்தவத்திற்குத் தொண்டு செய்தாலும் சைவத்திற்கும் புத்துயிா அளித்தவர்; சைவப் பாதிரியாகத் திகழ்நதவர்; சைவ சித்தாந்த நூல்களையும் திருமுறைகளையும் கற்றுத் துறை போயவா, சைவக் காவலராக விளங்கியவர்; சமயச் சொற்பொழிவுகள் செய்வதில் பேராற்றல் வாய்நதவர்; இதனால திருவாவடுதுறை ஆதீனத் தாரால 'நாவலர்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டப் பெற்றவா; இவர் காலம்: கி.பி. 1822 – 1879.

இவர் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிற்கு வசனங்கள் எழுதினார். பாலபாட புத்தகங்கள், சைவ வினாவிடை முதலிய உரைநடை நூல்களும் வரைந்தார். இவரது உரை நடை ஆற்று நீர்போல் அமைதியாகச் செல்லும் இயல்பினது. தமிழ் உரைநடை வளர்ச்சியில இவருக்குப் பெரும் பங்கு உண்டு. இவரை, 'வசன நடை கைவந்த வலலாளர்' என்று பாராட்டுவார் பரிதிமாற் கலைஞா.

இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் காண்டிகை யுரை எனபனவும் நாவலர் எழுதியுள்ளார். நன்னூல விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கணச் சூறாவளி முதலியன பதிபபித்துள்ளார். இவ்வாறு இலக்கணத்திற்குப பெருந்தொண்டு புரிந்தார். இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை எழுதினாா; மறுப்புககள வரைந்தார்; கீர்த்தனங்களும் பாடலகளும் இயற்றினாா.

இவர் சிறநத பதிபபாசிரியர்; நூல்களைப் பிழையறப பதிபபிபபதில் தலையாயவா. நூல்களைப் பதிப்பிப்பதற்காகவே சென்னையில அச்சுக்கூடம் ஒன்றை நிறுவியவா. இவரின் தோற்றத்தால் தமிழும் சைவமும் பயன்பெற்றன. இதனை,

> **நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்**
> **சொல்லு தமிழெங்கே? சுருதிஎங்கே?**

என்னும் சி.வை. தாமோதரம் பிள்ளை வாக்கால் அறியலாம்.

## 5. உ.வே. சாமிநாத ஐயர்

குமபகோணத்தை அடுத்த உததமதானபுரத்தில் 1855இல பிறநதவர்; வேங்கடராமன் என்பது இவருக்குப பெற்றோர் இட்ட பெயர்; சைவப் பெருமகனாராகிய மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர்; பிள்ளையவாகள் இவரை மாணவராக ஏற்றுக்கொண்ட போது, வேங்கடராமன் என்பது வைணவப் பெயராக இருத்தல் கண்டு, சாமிநாதன் என்னும் சைவப் பெயரை இவருக்கு இட்டார். வித்வான் தியாகராசச் செட்டியாரின் உதவியால் இவா கும்பகோணம் அரசினா கலைக்கலலூரியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்; பின்னர், சென்னை மாநிலக் கலலூரி யில தமிழ் ஆசிரியராகத தொண்டு செய்தார். இவா ஆற்றிய தமிழ்ப்பணி, உலகம் உள்ளளவும் மறக்க இயலாதது. இவரின் பணிகளைப் பாராட்டி ஆங்கிலேய அரசினா, 'மகாமகோபாத்யாய' என்ற பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தினா டாக்டர் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தனர். தமிழ் மக்கள் இவரைத் 'தமிழ்த தாத்தா' என்று போற்றினர். இவர் 1942இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழகம் எங்கும் சிதறிக்கிடந்த இலக்கிய இலக்கண ஏடுகளைத் தேடிப் பெற்றார். அவற்றை ஆராய்ந்து பதிப்பித்தார்; இவருடைய பதிப்புகள் ஆராய்ச்சிக்கு உறுதுணையானவை; நூலாசிரியர், உரையாசிரியர் வரலாறுகள், ஆராய்ச்சிக் குறிப்புக்கள், மேற்கோள் நூல்களின் விளக்கங்கள், அரும்பத அகராதி முதலாக இவர் பதிப்புகளில் அமைந்தவை, இவரின் பதிப்புத் திறமையை நன்கு காட்டுவன. இவரைப் 'பதிப்புக் கலையின் வேந்து' என்பர்.

பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகியவற்றை வெளிக்கொணர்ந்தவர் இவரே. இவரில்லையேல் சங்க இலக்கியங்கள் பல நம் கைக்குக் கிட்டாமலே போயிருக்கும்.

"பார்காத்தார் ஆயிரம்பேர்! பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம்பேர்! பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர்! வாழ்ந்த நாட்டில்
மனம்காத்த தமிழ்த்தாய் "என் உடைமை எல்லாம்
யார்காத்தார்" எனக் கேட்க, ஒருவன் அம்மா
யான்காப்பேன் என எழுந்தான்! சாமிநாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்!
நிலைகாத்த மலைஇமய நெற்றி மேலான்"

என டாக்டர் வ.சுப. மாணிக்கனார் இவரைப் புகழ்ந்து கூறுவன, உண்மை உரைகள் ஆகும்.

உ.வே.சா. அவாகள், சிலப்பதிகாரம், பெருங்கதை, மணிமேகலை, சீவகசிந்தாமணி, நன்னூல், மயிலைநாதர் உரை முதலான இலக்கிய இலக்கணங்களும் பதிப்பித்துள்ளாா. குறுந்தொகைக்கு உரை வரைந் துள்ளார். புதியதும் பழையதும், நல்லுரைக்கோவை, நினைவுமஞ்சரி, சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் முதலான உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார் ஆகி யோரின் வரலாறுகளையும், தமிழ் வரலாற்றையும் சுவைபட வரைந்துள்ளார். இவர் தமிழ்த் தாய்க்குச் செய்த தொண்டுகள் என்றும் நின்று நிலைப்பன.

## 6. மறைமலையடிகள்

நாகப்பட்டினத்தை அடுத்த காடம்பாடியில் சைவ வேளாளா குலத்தில் பிறந்தவர்; வேதாசலம் என்னும் இயற்பெயருடையவர்; தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றிலும் வல்லவர்; பழகுதற்கு நல்லவர்; குயிலோசை போன்ற குரல் படைத்தவர்; சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் காலம் கி.பி. 1883 – 1950.

சங்க இலக்கியங்களை மக்களிடைப் பரப்பிய முதல்வர் இவரே. முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றிற்கு இவர் எழுதிய உரைகள், இவரின் உரை வரையும் திறமைக்குச் சான்றுகள். இவ உரைகளைப் படித்தால், நக்கீரர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் ஆகியோர், மறைமலையாக உருக்கொண்டனரோ என்று தோன்றும்.

இவர் ஆராய்ச்சிப் புலமையிலும் தலைசிறந்தவர். 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என இவர் எழுதிய நூலே, தமிழில் முதன்முதலாக வந்த ஆராய்ச்சி நூல். இந்நூலில் தமிழ் இலக்கியங்கள் பலவற்றின் காலங்களை ஆராய்ந்திருக்கிறார்; தமிழ் இலக்கிய வளாச்சியை ஆய்வு முறையில் குறித்திருக்கிறார்.

இவர், சங்கமொழி நடையில் கவிதை எழுதுவதில் வல்லவர். திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் என்பன இவர் படைத்த செய்யுள் இலக்கியங்கள். திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவைக்கு இவரே அரிய உரையும் வரைந்துள்ளார்.

இவர் தமிழின்மீது அளவு கடந்த பற்றுடையவர்; ஆயினும் வடமொழியில் வெறுப்புடைய்வர் அல்லர். காளிதாசர் இயற்றிய சாகுந்தலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதுபற்றி ஆராய்ச்சியும் எழுதியுள்ளார். இவருடைய இம் மொழிபெயர்ப்பு, ஈடு இணையற்றது என வடமொழி அறிஞரும் புகழ்வர்.

இவர், பல்துறையறிவும் நிரம்பப் பெற்றவர். மரணத்தின்பின் மனிதர் நிலை, பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், நூறாண்டு வாழ்வது எப்படி, மனித வசியம் முதலியன இதற்கு எடுத்துக்காட்டுகள்.

இவர், சைவசமய இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். திருவாசக விரிவுரை, சைவ சித்தாந்த ஞானபோதம், தமிழர் மதம் என்பன இப் பணியினை விளக்கும்.

பழமையில் அழுந்திய புலமையுடைய இவா, புதிய துறைகளிலும் ஒளி வீசினார். சிறுவர்க்கான செநதமிழ், அறிவுரைக் கொத்து, சிந்தனைக் கட்டுரைகள் முதலியனவும் கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி, நாக நாட்டரசி ஆகிய நாவலகளும் படைத்தார்; ஞானசாகரம் (அறிவுக்கடல), என்னும் அரிய இதழும் நடத்தினார்.

சுருக்கமாகச் சொன்னால் இவர் தொடாத துறையில்லை; தொட்டுப் பின் அழகு செய்யாத துறையும் இலலை!

இன்று வளர்ந்து வரும் தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டவரும் உரமூட்டியவரும் இவரே. இவரைத் 'தனித் தமிழ் இயக்கத் தந்தை' என்று பாராட்டுவர். இவரின் தனித் தமிழ் நடை, இனிமை மிக்கது; எக் கருத்தையும்

சொல்லும் ஆற்றல் மிக்கது; நீண்ட சொற்றொடர்களால் ஆயது. இவரின் தனித்தமிழ் உணர்ச்சியைப் பரப்பி வந்தவர் மொழி நூலறிஞர் ஞா.தேவநேயப் பாவாணர் ஆவார்.

இந்தியைத் தமிழகத்தில் கட்டாயப் பாடமாக முதன்முதலில் கொண்டு வந்தபோது, அதனை எதிர்த்துப் போர் கொட்டிய வீரர் அடிகளாரே. அப்போது இவர் எழுதிய 'இந்தி பொது மொழியா?' என்னும் நூல், இந்தி எதிர்ப்புணர்ச்சிக்கு உரிய அடிப்படை உண்மைகளைக் கொண்டது.

ஆழ்ந்தகருத் துரையாலே மக்கள் நெஞ்சை
அள்ளினீர்! ஆன்றோரை விளக்கித் தந்தீர்!
சூழ்ந்த இருள் திரைகிழித்தீர்: சோர்வே இன்றித்
தோன்றியதை அஞ்சாமல் உரைத்தீர்! நாட்டைப்
பாழ்செய்த சாதியினை வீழ்த்தச் சைவப்
பாட்டையே சிறந்ததென்றீர்! யாண்டு நூறு
வாழ்ந்திருக்க இயலுமென்றீர்! வழியு ரைத்தீர்!
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ?

— வாணிதாசன்

# பல்கலைக் கழக வினாக்கள்

1. தமிழ் இலக்கிய வரலாற்றில சங்க காலமே தலைசிறந்த காலம் — இக்கொள்கையை ஆராய்க.

அலலது

பாண்டியா மதுரையில சங்கம் நிறுவித் தமிழ் வளாத்தாாகள் என்பதறகுச் சான்று தருக.

2. பரணிபபாட்டு, பள்ளுப்பாட்டு — இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

3. சங்கத தமிழின் சிறபபியலபுகளைச் சுருக்கமாக உணாத்துக.

அலலது

பிள்ளைத்தமிழ், குறவஞ்சி — இவற்றுள் ஒனறன் அமைபபும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

4 மேலைநாட்டு நல்லறிஞா தமிழ்மொழிக்குச் செய்துள்ள சேவையை மதிபபிடுக.

5. சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்புக்களைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

அல்லது

தமிழ இலக்கியத்தில உரையாசிரியர்கள் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. கிறிததவப் புலவாகள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொணடு.

அல்லது

இருபதாம் நூற்றாண்டில தமிழ் நாடக வளாசசி என்பதைப பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

7. தமிழில, பெருங்காப்பியம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுக.

அல்லது

சங்க காலத்து நீதி நூலகளின சிறப்பை எழுதுக.

8. சிறுகதையின் இலககணம் கூறி அது ஒரு சிறநத இலக்கிய வகையாகும் என்பதை ஆய்க

9. புறநானூறு, அலலது பத்துப்பாட்டு பற்றிய இலக்கிய வரலாறு என்ன?

அலலது

கம்பா காலத்துத் தமிழ் இலக்கியம் பற்றி நீவிர் அறிவன யாவை?

10. பௌத்தாகள் தமிழ்த் தொண்டு

அல்லது

நாடக நூலாசிரியர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

11. கம்பருக்கு முற்பட்ட தமிழ்க் காவியங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

அலலது

பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு பற்றி எழுதுக.

12. முசுலீம் தமிழ்ப் புலவர்கள்

அல்லது

உரை நடை இலக்கிய வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

13. புறநானூறு அலலது பதிற்றுப்பத்து வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது என்பதைத் தெளிவு படுத்துக.

அல்லது

இசைத் தமிழின் இலக்கிய வரலாறு யாது?

14. இருபதாம் நூற்றாண்டு பற்றிய இலக்கிய வரலாற்றை எழுதுக.

15 தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின சிறப்பை மதிப்பிடுக.

அலலது

பதினெண்கீழ்க் கணக்கின் இலக்கிய வரலாறு யாது?

16. தமிழ் உரைநடையின் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

17. வைணவாகள்; அல்லது ஐரோப்பியாகள் தமிழ் வளர்சசிக்கு ஆற்றிய தொண்டு பறறி மதிபபிடுக.

18. தேவார, திருவாசகம் அல்லது நாலாயிரத் திவ்ய பிரபந்தம் பற்றிக் கடடுரை வரைக.

அலலது

தமிழில சிறுகதையும் நாவலும் பற்றிய வரலாற்றை எழுதுக.

19. சிலப்பதிகாரம் அலலது திருக்குறள் தமிழ் இலக்கியததில பெருமையுடன் திகழ்தலை ஆராய்க.

20. எட்டுத்தொகை அலலது பத்துபபாடடுப பறறி ஒரு கட்டுரை வரைக.

21. பௌததர்கள் தமிழ் வளாச்சிக்குச் செய்த தொண்டு

அலலது

வீரமாமுனிவரின் புலமையும் தொணடும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

அல்லது

ஐம்பெருங் காவியங்கள் பறறி விளககம் தருக.

22. தற்கால உரைநடை வளாச்சி

அல்லது

தமிழில் கதை இலக்கியம் என்பது பற்றி விளக்கி எழுதுக.

23. பத்துப்பாட்டு அலலது பன்னிரு திருமுறை அல்லது நாலாயிரத் திவ்ய பிரபந்தம் பற்றி ஒரு கடடுரை எழுதுக.

24. நக்கீரர், சேக்கிழாா, நச்சினார்க்கினியா, சிவப்பிரகாசா இவர்களுள் இருவா ஆற்றிய தமிழ்த்தொண்டை விளக்குக.

25. சங்க இலக்கியம் அலலது பக்திப் பாடல்கள்

அல்லது

நாடக இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

26. குமரகுருபரர், ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, மறைமலையடிகள், திரு. வி. கலியாண சுந்தரம் இவர்களில் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டை விளக்குக.

27. காவியங்களின் வளாச்சி அலலது சிறுகதை இலக்கியம் அலலது உரையாசிரியர்களின் தொண்டு பறறி ஒரு கட்டுரை எழுதுக.

28. ஐரோப்பியர் தொடர்பால தமிழ் அடைநத வளாச்சியைப் பற்றியாவது, இந்த நூற்றாண்டின் சிறந்த கவிஞா ஒருவரைப் பற்றியாவது விளக்கம் தருக.

29. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், அல்லது சமய இலக்கியங்கள், அலலது தமிழ் உரைநடை வளர்ச்சி.

30. உமறுப்புலவர், சிவப்பிரகாச சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சிசுநதரம் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, சுபரமணிய பாரதியாா, திரு. வி. கலியாண சுந்தரனாா் இவர்களில இருவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளை விளக்குக.

31. தமிழ்க் காப்பியங்கள், அல்லது சிற்றிலக்கியங்கள், அலலது தமிழ் இசை வளர்ச்சி.

32. வீரமாமுனிவர், அருணாசலக் கவிராயர், ஆறுமுக நாவலர், சோமசுந்தர பாரதியார், டாக்டா உ.வே சாமிநாதையர், பாரதிதாசன் — இருவா ஆற்றிய பணிகளை விளக்குக.

33. ஒனறு பற்றிய இலக்கிய வரலாற்றுக கட்டுரை எழுதுக·

(அ) எட்டுத் தொகை நூலகள்.

(ஆ) பிற்காலத்துத் தோன்றிய அற நூலகள்.

(இ) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கதை நூல்கள்.

34. திரிகூடராசப்பக் கவிராயர், அருணகிரிநாதா, வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாா, டாக்டா காலடுவெல, சம்பநத முதலியாா — இவா களில் ஒருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

35. ஒன்று பற்றிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக:

(அ) பத்துப் பாட்டு

(ஆ) வைணவ இலக்கியங்கள்

(இ) இருபதாம் நூற்றாண்டில் இசைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி.

36. தாயுமான சுவாமிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, வீரமாமுனிவர், பாரதிதாசன் — இவர்களில் இருவா ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

37. ஒன்று பறறி இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக.

(அ) சங்க காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம்

(ஆ) சமணா தமிழத் தொண்டு

(இ) தமிழில் உரைநடை வளர்ச்சி.

38 ஒட்டககூத்தா, குமரகுருபரா, புகழேந்திப் புலவர், நக்கீரர், புதுமைப் பித்தன் — இவாகளில இருவா ஆற்றிய தமிழ்த் தொண்டினை விளக்குக.

# புத்தம் புதிய வினாக்கள்

1. பாரதிக்குப்பின் தமிழ் வளாச்சி
2. விடுதலைக்குபபின் தமிழ் வளர்ச்சி
3. தனித்தமிழ் இயக்கத்தின் வெற்றி
4. தமிழிசை இயக்கம்
5. பரிசு பெற்ற தமிழ் நூல்கள்
6. எழுத்துச் சீர்திருத்தம்
7. பாரதிதாசன பரம்பரை
8. கண்ணதாசனுக்குப பின தமிழ்க் கவிதை
9. வானொலி, தொலைக்காட்சிகளின தமிழ்ப்பணி
10. அறிவியல தமிழ வளர்ச்சி
11. தெரு நாடகஙகள
12. திரைபபடத தமிழ்
13. ஆடசி மொழியும பயிற்று மொழியும்
14 வடடார இலக்கியங்களில வளாச்சி
15. திருமடங்களின் தமிழ்பபணி
16. தமிழ இதழியல வளர்ச்சி

17. சிறந்த இதழாசிரியர்கள்
18. ஆதித்தனாரின் தமிழ்ப்பணி
19. தமிழ் வளாக்கும் நிறுவனங்கள்
20. அயலநாடுகளில தமிழ்
21. உலகத் தமிழ் மாநாடுகள்
22. திரு.வி.க. வுக்குப் பின் தமிழ் உரைநடை
23. ஒப்பிலக்கிய ஆய்வு
24. சுற்றுலா இலக்கியங்கள்.
25. தமிழும் தகவல் தொடாபும்
26. எங்கும் தமிழ் எதிலும தமிழ்
27. மு. வரதராசனாரின் மொழிபபணிகள்
28. அறிஞா அண்ணாவின் தமிழாற்றல
29. புதுக்கவிதையின வளாச்சியும் தேககமும்
30. தமிழ் வளாச்சிக்குத தடையான தடைக்கூறுகள்
31. சிற்றிதழ்களின் பெரும்பணிகள்
32. தினமணியின் தனித்திறம சான்ற தமிழ்ப்பணி
33. தமிழ்க கலைக் களஞ்சியஙகள்.

தமிழ்நாட்டில் தலைசிறந்த பதிப்பகங்களுள் ஒன்று.
'எல்லாம் தமிழால் முடியும்' என்ற குறிக்கோளுக்காகப் பாடுபடுகிறது. தரமான நூல்களை வெளியிடுவதையே உன்னத நோக்கமாகக் கொண்டிருக்கிறது.
ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுவதில் முதலிடம் பெறுகிறது. இலக்கிய ஆய்வுக்குப் புதுவழி வகுத்து, தமிழ் மறுமலர்ச்சிக்குத் துணைநிற்கிறது.
புதியதோர் உலகம் காண, எல்லா வகையிலும் உழைத்து வருகிறது.
அறிஞர்களின் சிந்தனைப் பதிவேடுகளாகத் திகழ்வன எமது நூல்கள்.

## மணிவாசகர் பதிப்பகம்

| | |
|---|---|
| நிறுவனர் | : தமிழவேள் ச. மெய்யப்பன் |
| நிறுவிய ஆண்டு | : 1961 |
| வெளியீடுகள் | : 600 |
| பல்கலைக்கழகப் பாடநூல்கள் | : 60 |
| பரிசுபெற்ற நூல்கள் | : 50 |

சிறந்த அமைப்புடையவை
சீரான விலையுடையவை
மொழிக் கொள்கை
விலைக் கொள்கை
இவற்றில் தெளிவான திட்டத்துடன் நூல்கள் வெளியிடும் பதிப்பகம்.

## மணிவாசகர் பதிப்பகம்

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை - 600 108
தொலைபேசி : 561039

# மணிவாசகர் பதிப்பகத்தின் அறிவியல் அகராதி

முறையாகத் தமிழில் வெளிவரும் [redacted] அகரமுதலி.

8000 அடிப்படை அறிவியல் சொற்களுக்கு எளிய விளக்கம் தரப்பெற்றுள்ளது.

அறிவியல் தொடர்பான எல்லாச் செய்திகளுக்கும் நிலையான பார்வை நூல்.

முறையான செய்திகள் தவிர புதிய செய்திகள் இன்றுவரை சேர்க்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு விளக்கத்திற்கும் எளிய எடுத்துக்காட்டு.

கலைச் சொற்கள் அளவை செய்யப்பட்ட முதல் அறிவியல் அகரமுதலி.

அரிய படவிளக்கங்கள்.

அறிவியல் நூல் எழுதுவோருக்கு ஒரு கருவூலம்.

**816 பக்கங்கள்**

**விலை ரூ. 150**

# அறிஞர் அண்ணாவின் நூல்கள்

அண்ணாவின் சிறுகதைகள்
உலகப் பெரியார் காந்தி
வேலைக்காரி
ஓர் இரவு
சட்டசபைச் சொற்பொழிவுகள் I
சட்டசபைச் சொற்பொழிவுகள் II
பார்வதி பி.ஏ.
குமாஸ்தாவின் பெண்
சந்திரமோகன்
தமிழரின் மறுமலர்ச்சி
நீதிதேவன் மயக்கம்